Vol.2, Issue 3 | Annual Subscription ` 420

@NewsRotary /RotaryNewsIndia

ஆகஸ்ட் 2019

# ரோட்டரி நியூஸ்

Rotary





# மரதத்டி வகுப்பறை

அது ஒரு சிறப்பான கோடைக்கால காலை நேரம் என்பதால் மைசூருவில் உள்ள ரோட்டரி மைசூர் வெஸ்ட் பள்ளியில் இந்த குழந்தைகள் பெஞ்சுகளுக்கு பதிலாக தரையில் அமர்ந்திருப்பதை நான் கண்டேன். அதிகாலை மழை வெப்பத்தைக் குறைத்துவிட்டதால், சனிக்கிழமையன்று ஆசிரியர் ஒரு கதையை சொல் வதற்காக குழந்தைகளை இந்த மரத்தின் நிழலில் அமர வைத்தார். 400க்கும் மேற்பட்ட குழந்தைகளைக் கொண்ட இந்த பள்ளியை RC மைசூர் வெஸ்டின் RC மைசூர் வெஸ்ட் அசோசியேஷன் நடத்துகிறது.

ஒருங்கிணைப்பு மற்றும் புகைப்படங்கள்: ரஷீதா பகத்

# உள்ளே


**12 மறக்க முடியாத ஆண்டும், வியக்கவைத்த மனிதர்களும்!**
தலைவர் ரஸ்ஸின் மாநாட்டின் நிறைவு அமர்வில் தன் தலைமை ஆண்டு பற்றி கூறுகிறார்.

**18 முழுவீச்சில் எழுத்தறிவு இயக்கம்**
மூத்த ரோட்டரி தலைவர்கள் ஹாம்பர்க்கில் நடந்த ஒரு அமர்வில் இந்தியாவில் எழுத்தறிவு திட்டத்தின் வெற்றி குறித்து பேசிகிறார்கள்.

**22 சுதர்சன் அகர்வாலுக்கு இரங்கல்**
மூத்த தலைவர்கள் மறைந்த PRID சுதர்சன் அகர்வாலின் சாதனைகளை நினைவு கூறுகிறார்கள்.

**32 இந்தியாவில் ரோட்டரி நூற்றாண்டு விழாவின் முன்னோட்டம்!**
கொல்கத்தாவில் இந்திய ரோட்டரியின் நூற்றாண்டு விழாவின் துவக்கத் தொகுப்பு.

**36 பிறவிக் குறைபாடுள்ள பிஞ்சுகளைக் காப்பாற்ற ரோட்டரி கரம் கொடுக்கிறது**
RC மெட்ராஸ் நார்த் குழந்தைகளின் பிறவிக் குறைபாடுகளை சரிசெய்யும் அறுவை சிகிச்சைகளை செய்கிறது.

**46 RC மைசூர் பிளாட்டினம் விழாவைக் கொண்டாடுகிறது**
RC மைசூரின் 75வது ஆண்டு பிறந்த நாள் விழா தொகுப்பு.

**60 சத்ரியா – துறவிகள் நாட்டியம்**
அஸ்ஸாமின் இந்த பாரம்பரிய நடன வடிவம் பற்றி படியுங்கள்.

**68 பயணிப்போமா பாண்டிச்சேரிக்கு**
ஆசிரியருடன் பயணித்து, நகரத்தின் சுவாரஸ்யமான இடங்களை அறிந்துகொள்ளுங்கள்.




















**அட்டைப்படத்தில்:** ஹாம்பர்க் மாநாட்டின் தொடக்க நாளில் வியக்கத்தக்க ஜெர்மன் பிரேக்டான்ஸ்.

**படம்:** ரஷீதா பகத்.

## உத்வேகமான RI தலைவர் மலோனி

'ரோட்டரியில் யாரும் தனித்தீவு இல்லை' என்ற வாசகம் ஓராயிரம் அர்த்தத்தை உள்ளடக்குகிறது. நமது இலட்சியங்களை அடைவது தொடர்பாக, எவ்வித பயமோ அல்லது பிரதிபலனோ இல்லாமல் பேசுவதையும் அது தொடர்பானவற்றையும் அதன் அவசியத்தையும் தொடர்ந்து உணர்த்தவேண்டும். ரோட்டரியின் ஒவ்வொரு மட்டத்திலும் நாமும் நமக்குள்ளே நல்ல சுமுகமான உறவுகளையும் குறிப்பிடத்தக்க திறன்களையும் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

Dr NRUK கர்த்தா, RC திருவனந்தபுரம்
சப்அர்பன் — D 3211

வரலாற்றிலேயே முதல் முறையாக 2020–21ம் ஆண்டு RI மேற்குழுவில் ஆறு பெண்மணிகள் பணியாற்றப் போவது குறித்த RI தலைவரின் உரை உத்வேகம் அளிப்பதாகவும் சிந்தனையைத் தூண்டுவதாகவும் இருக்கிறது. ரோட்டராக்டர்கள், போலியோ ஒழிப்பு மற்றும் மிக முக்கியமாக உயர் நன்னெறி தரங்களுக்கு ரொட்டேரியன்கள் ஒத்துப் போக வேண்டிய அவசியம் போன்றவை குறித்த அவரது பார்வை மிகவும் வரவேற்கத் தக்கது.

ஆர்த்தி தாக்கர், RC பூனா — RID 3131

பாகிஸ்தான் RID 3272 நரோவால் ரோட்டரி சங்கத்தின் தலைவர் நான், ரோட்டரியின் எதிர்காலத்திற்கான பாதை குறித்த RIPE மலோனியின் கட்டுரையை (ஜூன் இதழ்) இணையத்தில் வாசித்தேன். அவருக்கு என் வாழ்த்துக் களைத் தெரிவிக்கிறேன்.

பாபர்கான், RC நரோவல்
பாகிஸ்தான் — RID 3272




மலோனி சொல்வது உண்மை யிலேயே சரிதான். ரோட்டரி என்பது ஒரு அற்புதமான அனுபவம். ரோட்டரி மூலம் நமது சொந்த மாவட்டங்களின் பல்வேறு பிரிவுகளுடன் மட்டுமலலாது, தோழமை மற்றும் திட்டப்பணிகள் மூலமாக நமது தேசத்தையும் கடந்து நாம் தொடர்பில் இருக்கிறோம்.

சாந்தனு S பனி
RC பலசூர் — RID 3262

2019–20ல் RID 9102க்கு துணை ஆளுநராகப் பணியாற்றப் போகிறேன், மேலும் மலோனியின் மையக்கருத்தை உண்மையாகவே நம்புகிறேன் மற்றும் அதற்குப் பின்னால் தான் ரோட்டரிக்கு உத்வேகம் தேவை யாக இருக்கிறது. இறுக்கமாக இருக்கும் சங்க கலாச்சாரங்கள் மற்றும் மூடும் நிலையில் இருக்கும் சங்கங்கள் போன்றவற்றிக்கு வளைந்து கொடுக்கும் தன்மையும் மாற்று ஏற்பாடுகளும் நமக்கு அவசியம். ஒருவேளை TRF-க்கு வாரத்திற்கு $1 என்பது ஒரு கூடுதல் உதவிக்கான உத்தியாக இருக்கக்கூடும். இந்த அறிவார்ந்த நேர்காணலுக்குத் தலைவர் மலோனி அவர்களுக்கு நன்றி!

ஃபிரான்க் கோஃபி ஓவுசு தேப்ரா
RC சன்யானி சென்ட்ரல்
கானா — RID 9102

## சிந்தனையைத் தூண்டும் கருத்துகளும் கட்டுரைகளும்

உலகம் முழுவதிலும் உள்ள ரொட்டேரியன்களால் தொண்டு பணிக்கு செல வழிக்கப்பட்ட மணி நேரங்கள் குறித்த ஜான் ஹோப்கின்ஸ் பல்கலைகழகத்தின் அறிக்கை திகைப்பூட்டு வதாக இருந்தது.

RID பரத் பாண்டியாவின் செய்தி அர்த்தமுள்ளதாக இருக்கிறது. இந்த ஆண்டு இந்தியாவில் ரோட்டரியின் 100 வருடத்தினை நாம் கொண்டாடுவது பெருமையாக இருக்கிறது.

ரோட்டரி குழு கலாச் சாரப் பரிமாற்றத் திட்டத்தில் அறங்காவலர் குலாம் வாஹன்வதியின் வாழ்வை மேம்படுத்தும் அனுபவம் வாசிக்கக்கூடிய ஒன்று.

முதல் முறையாக 2020–21 ஆம் ஆண்டில் RI மேற்குழுவில் ஆறு பெண்மணிகள் பணியாற்றப்போவது குறித்தும் PRIP பேரி ராஸின் அவர்களின் குறிப்பு வரவேற்கத்தக்கது. மாநாட்டுப் புகைப்படங்கள் பிரமாதமாக இருந்தது.

புவியை பசுமையாக்கும் கர்நாடக ரொட்டேரியன்கள், மபூகா ரோட்டரியின் ரோபோடிக் செயற்கை கை பொருத்தும் முகாம், வார்த்தை விளையாட்டு நல்ல மருந்து, மற்றும் உடற்பயிற்சியில் மனம்-உடல் தொடர்பு போன்ற கட்டுரைகள் சுவார ஸ்யமாகவும் பயனுள்ள தாகவும் இருக்கிறது.

ஃபிலிப் மூலப்போன்
M T, RC திருவனந்தபுரம்
சப்அர்பன் — RID 3211

முப்பத்தைந்து வருடங் களுக்கு முன்பு நான் லயன்ஸ் இன்டர்நேஷனலின் இளைஞர் அணியின் தலைவராக பதவியேற்ற போது, எனது முதல் தலைவர் உரை யாரும் தனித்தீவு இல்லை. இப்போது ஜூலை இதழில் நமது தலைவர் மார்க்கின் முதல் உரையின் தலைப்பு யாரும் தனித் தீவு இல்லை. 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆங்கில எழுத்தாளர் ஜான் டன் ஒரு சொற்பொழி விலிருந்து இந்த வாசகத்தை உருவாக்கினார், யாரும் சுயமாகவே தன்னிறைவு அடையமுடியாது, ஒவ்வொருவரும் மற்றவர்களைச் சார்ந்திருக்கிறார்கள் என்று அவர் கூறுகிறார். நிஜமாகவே ரோட்டரி உலகத்தை இணைக்கிறது.

பியூஷ் தொஷி
RC பேலூர் — RID 3291

## சேவை நோக்கம் கொண்ட RI இயக்குநர்கள்

ஜூலை இதழில் ரோட்டரியில் அடிமட்டத்திலிருந்து தலைமை வரை பதவிகளை மாற்றிக்கொள்வது குறித்து எழுதுகையில், இரண்டு RI இயக்குனர்களான பரத் பாண்டியா மற்றும் கமல் சங்வி ஆகியோரின் நேர்காணலில் இருந்த ஒரு குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால் அவர்கள் தங்களின் பதவிகளைப் பொறுப்பாகப் பார்க்கிறார்கள் அதிகாரமாக இல்லை என்பது தான். நமது தேசத்தில் உள்ள நலிவடைந்தவர்களை முன்னேற்ற இரண்டு சேவை மனப்பான்மை கொண்ட தலைவர்களை நாம் தேர்ந்தெடுத்திருக் கிறோம் என்பதை இது தெள்ளத் தெளிவாகக் காட்டுகிறது.

பரமேஷ் தேவ் சவுத்தரி
RC கவுகாத்தி
சவுத் — RID 3240

(ஜூன் இதழில்) RIDகளான பரத் பாண்டியா மற்றும் கமல் சங்வி ஆகியோர் தங்களின் பொறுப்புகள் குறித்து வெளியிட்ட உண்மைகள் வரவேற்கத்தக்க ஒன்று. மக்களுக்கு சேவை உள்ளூர் அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளுடன் ரொட்டேரியன்கள் தொடர்ந்து பழக்கத்திலேயே இருக்கவேண்டும்.

சங்க அளவிலான சேவை (தலையங்கம்: சுந்தராவை பள்ளிக்கு அனுப்புவோம்) குறித்த உங்கள் கவனிப்பு அவசியமான ஒன்று. ரொட்டேரியன்கள் மற்றும் இன்னர்வீல் உறுப்பினர்களின் முயற்சிகளினால் ஆசிரமம் ஷாலா தொடர் மற்றும் சுந்தராவை பள்ளிக்கு அனுப்புவோம் போன்றவை கல்லாமையை ஒழிப்பதில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் ஆகும். ரொட்டேரியன்களாலும் புதிய ரோட்டரித் தலைவர்களாலும் RILM-ன் ஹேப்பி ஸ்கூல் சிஸ்டம் கொண்டாடப்பட வேண்டும்.

அருண் குமார் டேஷ்
RC பரிபடா — RID 3262

## ஹேம்பர்க் மாநாடு செய்தி, படங்கள் அருமை

ரோட்டரியின் மேல்மட்டத் தலைவர்களின் அழகானப் புகைப்படங்களுடன் ஹேம்பர்க் மாநாடு மற்றும் தங்களின் மாபெரும் சேவைத் திட்டப்பணிகளுக்காக தெற்காசிய ரொட்டேரியன்களுக்கான PRIP பேரி ராஸினின் பரிசுகள், உறுப்பினர் சேர்க்கையின் வளர்ச்சி மற்றும் TRF நன்கொடை போன்றவை குறித்த அருமையான சுருக்கத்தை ரஷீதா பகத் எழுதிய ஆசிரியர் பக்கம் தெரிவித்தது.

வரலாற்றிலேயே முதல் முறையாக 2020–21 ஆண்டுக்கான RI மேற்குழுவில் ஆறு பெண்மணிகள் இடம்பெறப் போவது மனதுக்கு இதமாக இருக்கிறது.

RIPN ஹோல்கர் நாக் அவர்களின் கட்டுரை ரோட்டரியின் நன்னெறியை பிரதிபலிக்கிறது. உடல்நலக் காரணத்தினால் PRID சுஷில் குப்தா பதவி விலகியதற்குப் பதிலாக இவர் தேர்ந் தெடுக்கப்பட்டதை,'' சோகமும் மகிழ்ச்சியும் கலந்த தருணம்'' என்று ஒப்புக்கொள்கிறார். ஆனால் அவரை ஊக்கப்படுத்தி பதவியேற்க வேண்டும் என்று வாழ்த்தினைத் தெரிவித்தார் குப்தா. அதுதான் ரோட்டரியின் உண்மையான மாயாஜாலம்.

நவீன் R கார்க்
RC சுணம் — RID 3090

## PRID பாஸ்கருக்கு வீரவணக்கம்

ஜூன் மாதத்தில் RI இயக்குனராக தன் பணிக்காலத்தை நிறைவு செய்த PRID பாஸ்கர் அவர்களுக்கு வீர வணக்கத்தையும் இதயங்கனிந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிரிஸ் சித்தாலே அவர்களின் மரணம் இந்திய ரொட்டேரியன்களுக்கு ஒரு மாபெரும் இழப்பு.

குயில்குப்பம் திட்டப் பணியில் (RC மெட்ராஸ் சென்ட்ரல்) அங்கம்வகித்த ரொட்டேரியன்களுக்கும் என் இதயபூர்வமான பாராட்டு.

S முனியாண்டி
RC திண்டுக்கல்
ஃபோர்ட் — RID 3000

RC ஜீவன்பீமாநகர் அற்புதமான முயற்சியை கார்பரேட்களின் கூட்டுறவை RID 3190 கௌரவப்படுத்தியது என்ற கட்டுரை (ஜூன் இதழ்) வெளிபடுத்தியது. தங்களது CSR முயற்சிகளின் மூலம் இந்தத் திட்டப்பணிகளுக்கு ஆதரவளிக்கும் ரோட்டரி மற்றும் கார்பரேட் நிறுவனங்கள் செய்யும் நல்ல பணி குறித்து விழிப்புணர்வை இந்த நிகழ்ச்சி பரப்புகிறது.

பரிதோஷ் சேகல்,
துணை-நிறுவனர், சயோக் பவுண்டேஷன்

ரோட்டரி நியூஸ் இதழை தமிழில் பார்க்க அருமையாக இருக்கிறது. நான் ஒரு ரொட்டேரியன் இல்லை. ஒரு வாசகனாக அனைத்து கட்டுரைகளையும் வாசித்தேன், அனைத்தும் அருமையாக வடிக்கப் பட்டுத் தொகுக்கப் பட்டுள்ளது. இந்த செய்திகள் கட்டாயம் வாசிக்க வேண்டியவை.

அருணாச்சலம்
வெற்றிவேல்

*உங்களுடைய கருத்துக்களை நாங்கள் வரவேற்கிறோம். ஆசிரியருக்கு எழுதுங்கள்:*
*rotarynews@rosaonline.org; rushbhagat@gmail.com*

To revert to **English or Hindi** version please mail to us at *rotarynews@rosaonline.org.*



# ரோட்டரியை விரிவு படுத்துவோம்

*அன்பிற்குரிய ரொட்டேரியன்கள் மற்றும்*
*ரோட்டரி குடும்பத்தினர்களே!*

2019–2020 காலகட்டத்தில், ரோட்டரியை வளர்க்க ரொட்டேரியன்களையும் ரோட்டராக்டர்களையும் ஊக்கப்படுத்துகிறேன். நமது சேவையையும் நமது திட்டப்பணிகளின் தாக்கத்தையும் நாம் மேம்படுத்த வேண்டும், ஆனால் மிக முக்கியமாக, நமது உறுப்பினர் சேர்க்கையை அதிகரிக்க வேண்டும், அதன் மூலம் நாம் நிறைய சாதிக்க முடியும்.

நமது உறுப்பினர் சேர்க்கைக்கு மிகவும் முறையான மற்றும் நோக்கம் சார்ந்த ஒரு திட்டத்துடன் கூடிய ஒரு புதிய உத்தியை முயற்சி செய்வோமா! சமூகத்தில் தலைமைப்பண்பில் முறையாகச் செயல்படக்கூடிய பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்களைக் கொண்டு ஒரு முனைப்பான உறுப்பினர் சேர்க்கை குழுவை உருவாக்க ஒவ்வொரு சங்கத்தையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதன்பிறகு உங்கள் சங்கத்திற்கு உறுப்பினர்சேர்க்கை குழு ரோட்டரியின் வகைப்பாட்டு முறையை பயன்படுத்த வேண்டும்-அதாவது, உங்கள் சமூகத்தில் மிகவும் வெளிக்காட்டும் பல்வேறு தொழில் பிரிவுகளில்-திறன், திறமை மற்றும் உங்கள் சங்கத்தை வலுப்படுத்தும் பண்புடன் கூடிய ஆற்றல்மிக்க தலைவர்களை அடையாளப் படுத்துங்கள். உங்கள் சங்கத்தின் உறுப்பினர் சேர்க்கைக் குழுவிற்கு இதை எப்படி முன்னெடுத்துச் செல்வது என்பது தெரியாவிட்டால், இந்த பணியைத் தொடங்குவதற்கான தெளிவாக முறைபடுத்திய படிநிலைகளுக்கு Rotary.org என்ற இணையதள பக்கத்தில் சங்க உறுப்பினர் சேர்க்கை குழுவின் சரிபார்ப்புப் பட்டியலைப் பார்வையிடுங்கள்.

ரோட்டரியை வளர்க்க நாம் வேறு எப்படி நம்மை இணைத்துக் கொள்வது? பல்வேறு கூட்ட அனுபவங்கள் மற்றும் சேவை வாய்ப்புகளில் ஈடுபடுவது போன்றவற்றுடன், புது வகையான சங்கங்களை அது சார்பற்ற சங்கங்களாகவோ அல்லது சேட்டிலைட் சங்கங்களாகவோ இருக்கலாம், இதை ரோட்டரி இல்லாத இடத்தில் மட்டுமல்ல, ஏற்கனவே ரோட்டரி வளர்ந்த இடத்திலும் கூட ஏற்படுத்துவோம். உலகத்தில் உள்ள அனைத்து விதமான சமூகப்பிரிவுகளுக்கு பணி செய்யக்கூடிய ரோட்டரி சங்கம் எதுவுமில்லை. அதனால், ஏற்கனவே உள்ள நம் சங்கங்களால் தொடர்பு கொள்ளமுடியாத சமுதாயத் தலைவர்களுடன் தொடர்புகொள்ளக்கூடிய புதிய சங்கங்களை நாம் தொடங்க செய்யவேண்டும்.

ரோட்டரியை வளர்வது என்பது தொடர்புகளைக் கொண்டு உலகத்தில் நமது அமைப்பை தனித்துவமாக உருவாக்கி, அதற்கு ஆற்றல் அளித்து பெருக்க வேண்டும். ரோட்டரி உலகத்தை இணைப்பது போல ரோட்டரியை வளர்ப்பதில் நம்மை ஈடுபடுத்தி அடுத்த தலைமுறை பெண் மற்றும் ஆண்களை வரவேற்போம்.

**மார்க் டேனியல் மலோனி**
RI தலைவர்



# அவருடைய நற்பணிகள் நிச்சயமாக சாம்பலோடு சாம்பலாக கரைந்து போகாது...

உத்தரகண்ட் மாநில முன்னாள் ஆளுநரும் முன்னாள் RI இயக்குனருமான சுதர்ஷன் அகர்வாலின் மரணத்தை இந்திய ரோட்டரி உலகம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை நினைக்கையில் ஆழ்ந்த துக்கமும் பேரிழப்பாகவும் இருந்தது. இந்த இதழில் வெளியிடப்பட்ட முன்னாள் RI தலைவர் ராஜேந்திர சாபூவின் இரங்கல் கட்டுரை மூலம், ஹிம் ஜோதி பள்ளியைச் சேர்ந்த சிறுமிகள் தான் அவரை இழந்து மிகவும் வாடுவார்கள் எனத் தெரிகிறது. கர்வால் இமயமலை மற்றும் அதைச் சுற்றிய பகுதிகளில் உள்ள ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த சிறுமிகளுக்கு உலகத் தரத்திலான கல்வியை இலவசமாக வழங்க டேராடூனில் இந்த பள்ளியை அமைத்தார். டெல்லியில் அவரைத் தகனம் செய்யும்போது அனைவரின் கண்களும் தாரைதாரையாக கண்ணீர் வடித்தது என்று கூறுகிறார் சாபூ. ஆனால் அங்கே இருந்த ஹிம் ஜோதி பள்ளியைச் சேர்ந்த சுமார் 40 மாணவிகள் குறித்து தான் அவர் ஸ்தம்பித்துப் போனார். “ஒவ்வொரு மாணவியும் தங்களின் தந்தை இறந்தது போல தேம்பிக்கொண்டிருந்தனர். அவர்களுக்கு சுதர்ஷன் அகர்வால் தான் பெற்றோர்-அனைத்துமாக இருந்தார்.’’

கனிவு, மென்மையான பேச்சு, புன்னகைத் தவழும் முகம், மிகுந்த பண்பு போன்றவை நிறைந்தவரான அகர்வால் ரோட்டரி நியூஸ் அறக்கட்டளையின் அறங்காவலர். அவருடைய பின்புலத்தைப் பற்றி எனக்குத் தெரியாமல் இருந்திருந்தால், அவர் உத்தரகண்ட் மாநில முன்னாள் கவர்னராகவும் ராஜ்யசபாவின் முன்னாள் பொதுச்செயலாளராகவும், உச்சநீதிமன்ற நீதிபதிக்கு இணையான அந்தஸ்து கொண்ட தேசிய மனித உரிமை ஆணையத்தின் உறுப்பினராகவும் அலங்கரித்தவர் என்று என்னால் கற்பனை செய்திருக்க முடியாமல் போகலாம். அதிகார போதையில் அவர் இருந்ததே இல்லை. PRIPகளான கல்யாண் பானர்ஜி மற்றும் K R ரவீந்திரன் போன்றோரின் அஞ்சலியிலிருந்து தெரிகிறது அவர் எந்தளவுக்கு தாராள மனப்பான்மையுடனும் ஒரு பண்பான உபசரிப்பாளராகவும் இருந்திருக்கிறார் என்று. தன்னை அவர் ஒரு “தொழில்முறை பிச்சைக் காரன்’’ என்று அழைத்துக்கொள்வார், ஹிம் ஜோதி பள்ளி போன்ற விஷயங்களுக்காக நிதி திரட்ட தன் நெருங்கிய நண்பர்களிடம் அடிக்கடி பணம் கேட்பதற்கு அவர் எவ்வித கூச்சமும் பட்டதில்லை. உங்களுக்கு வாய்ப்பிருந்தால் இந்த பள்ளிக்குச் சென்று சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த அந்த மாணவிகளுடன் கலந்துரையாடுங்கள், இங்கே கல்வி பெற்ற பிறகு அவர்கள் ஒட்டுமொத்தமாக எப்படி உருமாறியிருக்கிறார்கள் என்பது தெரியவரும், இது வெறும் ஏட்டறிவை விட பலமடங்கு அதிகமானது... இந்தப் பள்ளி அவர்களுக்கு மேம்பாடும், அற்புதமான பேச்சுத் திறமையும் எழுத்துத் திறமையும் தன்னம்பிக்கையும் மற்றும் எல்லாவற்றையும் விட சுயமதிப்பையும் வழங்குகிறது. உண்மையிலேயே, அகர்வாலின் இழப்பு ஈடுசெய்யமுடியாதது தான்.

மற்றவர் வாழ்வில் மாற்றங்களைக் கொண்டுவருவதற்காக சேவையாற்றவும் எது தூண்டு கோலாக இருக்கிறது? RC பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸ் சங்கத்தின் முன்னாள் தலைவர் D ரவிசங்கர், தன் சொத்தின் 85 சதவீதமாக இருக்கும் ரூ.100 கோடியை TRF-க்கு உடனடியாக நன்கொடை வழங்க எது உந்துசக்தியாக இருந்தது? அல்லது கேட்ஸ், வாரன் பஃப்ஃபே, அஜீம் பிரேம்ஜி, ராஜஸ்ரீ பிர்லா, டாடா போன்று உலகிலும் இந்தியாவிலும்கொடைவள்ளல்களாகத் திகழ்பவர்கள் தங்கள் சொத்தினைக் கொண்டு உலகிற்கு நல்லது செய்ய எது தூண்டியது? ரோட்டரி நிகழ்ச்சிகளில் பேச ரோட்டரி உலகத்தின் அழைப்புகளை உடனடியாக ரவிசங்கர் ஏற்றுக்கொள்கிறார், அதன்மூலம் குறிப்பிடத்தக்க வகையில் ஏதாவது வழங்கும் அவரது இயல்பினால் மற்றவர்கள் உத்வேகம் கொள்வார்கள்.

ஹிம் ஜோதி பள்ளியிலிருந்து வெளிவரும் ஒவ்வொரு மாணவிகள் மற்றும் அவர் உதவிசெய்த எண்ணற்றவர்களின் இதயங்களிலும் அகர்வால் செய்த நன்மைகள் என்றென்றும் நிலைத்திருக்கும்.

ரஷீதா பகத்

## Governors Council

| | |
|---|---|
| RI Dist 2981 | DG N Manimaran |
| RI Dist 2982 | DG Natesan A K |
| RI Dist 3000 | DG Dr A Zameer Pasha |
| RI Dist 3011 | DG Suresh Bhasin |
| RI Dist 3012 | DG Deepak Gupta |
| RI Dist 3020 | DG M Veerabhadra Reddy |
| RI Dist 3030 | DG Rajendra Madhukar Bhamre |
| RI Dist 3040 | DG Dhiran Datta |
| RI Dist 3053 | DG Harish Kumar Gaur |
| RI Dist 3054 | DG Bina Ashish Desai |
| RI Dist 3060 | DG Anish Shah |
| RI Dist 3070 | DG Sunil Nagpal |
| RI Dist 3080 | DG Jitendra Dhingra |
| RI Dist 3090 | DG Rajeev Garg |
| RI Dist 3100 | DG Hari Gupta |
| RI Dist 3110 | DG Kishor Katru |
| RI Dist 3120 | DG Sanjay Agrawal |
| RI Dist 3131 | DG Ravee Dhotre |
| RI Dist 3132 | DG Suhas Laxmanrao Vaidya |
| RI Dist 3141 | DG Harjit Singh Talwar |
| RI Dist 3142 | DG Dr Mohan Chandavarkar |
| RI Dist 3150 | DG Pandi Sivannarayana Rao |
| RI Dist 3160 | DG Nayan S Patil |
| RI Dist 3170 | DG Dr Girish R Masurkar |
| RI Dist 3181 | DG Joseph Mathew |
| RI Dist 3182 | DG Ramesh B N |
| RI Dist 3190 | DG Dr Sameer Hariani |
| RI Dist 3201 | DG R Madhav Chandran |
| RI Dist 3202 | DG A Karthikeyan |
| RI Dist 3211 | DG Shirish Kesavan |
| RI Dist 3212 | DG S Sheik Saleem |
| RI Dist 3231 | DG Sridar Balaraman |
| RI Dist 3232 | DG G Chandramohan |
| RI Dist 3240 | DG Dr Debasish Das |
| RI Dist 3250 | DG Gopal Khemka |
| RI Dist 3261 | DG Ranjeet S Saini |
| RI Dist 3262 | DG Debasish Mishra |
| RI Dist 3291 | DG Ajay Agarwal |

Printed by PT Prabhakar at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014, India, and published by PT Prabhakar on behalf of Rotary News Trust from Dugar Towers, 3rd Flr, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.

The views expressed by contributors are not necessarily those of the Editor or Trustees of Rotary News Trust (RNT) or Rotary International (RI). No liability can be accepted for any loss arising from editorial or advertisement content. Contributions – original content – is welcome but the Editor reserves the right to edit for clarity or length. Content can be reproduced, but with permission from RNT.

# RI இயக்குனர்



## நேருக்கு நேர்


ஐயோ! மறுபடியும் வேண்டாமே. நீங்கள் சொல்வது எனக்குக் கிட்டத்தட்ட கேட்கிறது. உறுப்பினர் சேர்க்கை குறித்த மற்றொரு கட்டுரை வேண்டாம். இதைத்தான் நாம் ஏற்கனவே படித்து/கேள்விப்பட்டு இருக்கிறோமே? நான் ஒரு கேள்வி கேட்கிறேன், “அடுத்த பத்தாண்டுகளில் ரோட்டரி சந்திக்கப்போகும் மிகப் பெரிய சவால் எது?’’ நான் 30 வருடங்களாக இதே கேள்வியை கேள் விப்பட்டிருக்கிறேன் என்பது ஆச்சர்யமாக இருக்கிறது, உறுப்பினர் சேர்க்கை என்பது வெறும் எண்ணிக்கை கள் மட்டுமல்ல; நமது அமைப்பின் உத்வேகம் தான் இந்த வளர்ச்சி. நமது மனித வளங்களை இது உயர்த்தி, தலைவர்களை உருவாக்குகிறது, மிக முக்கியமாக உறுப்பினர்களை ஈர்த்து, தக்கவைக்கத் தொடங்கும்போது, ரோட்டரி உறுப்பினர் சேர்க்கையின் மதிப்புக்கு, இது ஒரு அருமையான நற்சான்றிதழ் ஆகும்.

ஆகஸ்டு மாதம் உறுப்பினர் சேர்க்கை மற்றும் புதிய சங்க உருவாக்கத்திற்கான மாதம், இதுதான் ரோட்டரியின் சின்னம் தொடர்ந்து முத்திரை பதிக்க நாம் அனைவரும் சிறிய பங்கினையாவது கொடுக்கக் கூடிய நேரம். உங்களுக்குத் தெரிந்த ஒருவரிடம் ரோட்டரியைப் பற்றி சொல்லுங்கள். உறுப்பினர் சேர்க்கை யின் வளர்ச்சியின் இரகசியம் ஒரே ஒரு வார்த்தையில் நிலைபெறுகிறது -கேட்பது. ‘வேண்டாம்’ என்ற சொல்லை கேட்பதால் இதயம் நொறுங்கிவிட வேண்டாம். “ஒரு மரத்தை நடுவதற்கு சிறந்த நேரம் 20 ஆண்டுகளுக்கு முன்பு, இரண்டாவது சிறந்த நேரம் இப்போது தான்’’ என்று ஒரு பழமொழி இருக்கிறது. இது உறுப்பினர் சேர்க்கைக்கு அட்சர சுத்தமாகப் பொருந்தும். ஒரு நண்பனை ரோட்டரிக்கு அறிமுகப் படுத்தக் கூடிய நேரம் இன்று தான்.

தக்கவைப்பது என்பது முதன்மை யான நோக்கம்; ஒரு ஆற்றல்மிக்க உறுப்பினரை அடையாளம் கொள்ளும் நேரம்தான் இதற்கான சரியான நேரம். அவர்களின் திறமையில் கவனம் செலுத்துவதன் மூலமும் ஈடுபடுத்துதல் மூலமும் மட்டுமே தக்கவைக்க முடியும். உறுப்பினர்களிடம் அவர்களின் நேரத்தைக் கேட்பதை விட உங்கள் ரோட்டரி சங்கத்திற்கு அவர்களின் திறமையைக் கடனாகக் கேளுங்கள். என் மனதில் தகுதி என்பது- தகுதியானவர்களைச் சேர்ப்பது, தரமான தோழமை, தகுதியுடன் ஒன்றுபடுவது, ரோட்டரி குடும்பத்தை நன்றாகக் கவனித்துக் கொள்வது போன்ற செயல்கள் ஒன்றுபடுவதற்கும் தக்கவைப்பதற்கும் வழிவகுக்கும். நமது சங்கங்களில் தகுதி வாய்ந்தவர்களின் எண்ணிக்கையே நமக்கு வேண்டும்.

ரோட்டரியின் எதிர்காலம் உறுப்பினர் சேர்க்கையிலும் அது உங்களுடைய கைகளிலும் இருக்கிறது. மாற்றத்தைத் தொடங்குவோம்.

பாணியை மாற்றுவோம், நண்பனைச் சேர்ப்போம் அவரையே தக்கவைப்போம். ரோட்டரியைக் கொண்டாடுவோம், மகிழ்ச்சியுடன் இருப்போம்.



Dr பரத் பாண்ட்யா
RI இயக்குனர், Zones 4 and 7

# களின் செய்திகள்

## வளர்ச்சி மிக அவசியம்



எனது சக ரோட்டரியன்களே

2018-19 ஆம் ஆண்டில், நம்முடைய அறக்கட்டளையின் பங்களிப்புகள் 21 மில்லியன் டாலர் சாதனையை படைத்துள்ளன, மேலும் நாம் நம்முடைய உலகின் 2வது இடத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளோம். மிக முக்கியமானது, உலகில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் RIDகள் 3190 மற்றும் 3141 ஆகியவை முறையே 1வது மற்றும் 2வது இடத்தில் உள்ளன. இந்த இரண்டு மாவட்டங்களின் தலைமையை நான் பாராட்டுகிறேன், நம்முடைய மகத்தான நன்கொடையாளர்களுக்கு நன்றி கூறுகிறேன்.

2019-20ம் ஆண்டில், சவாலான TRF இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன; ஒவ்வொன்றும் சம அளவு முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதால் தயவுசெய்து TRF-ன் நிதிக்கு பங்களிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். வருடாந்திர நிதிக்கான பங்களிப்புகள் பாதி DDF ஆக மாவட்டத்திற்கு வரும் என்றும், மீதி பாதி உலக நிதிக்கு செல்லும் என்றும் உறுதி செய்கின்றன.

உலக நிதி மிகவும் முக்கியமானது. அது மனித நேய திட்டங்கள், உதவித் தொகைகள், VTTகள் போன்றவற்றுக்கு தேவையான நிதியை வழங்குகின்றது. அது இன்னும் நன்றாக பெருக வேண்டும்.

நாம் போலியோவை உலகத்திலிருந்து ஒழிப்பதற்கான தறுவாயில் இருக்கிறோம். நம்முடைய முயற்சிகளுக்கு கேட்ஸ் அறக்கட்டளை ஆதரவளித்து வருகிறது மேலும் ரோட்டரியின் வருடாந்திர இலக்கான 50 மில்லியன் ஆனது கேட்ஸ் அறக்கட்டளையின் 100 மில்லியனால் சாத்தியமாகியுள்ளது. ரோட்டரியின் போலியோ நிதி சேகரிப்புகளில் ஏதேனும் அளவு குறைந்திருந்தால் அது பிரச்சினையை உண்டாக்கியிருக்கக் கூடும்.

ஜூன் 2019 ஆரம்பத்தில், ரோட்டரியின் போலியோ நிதி இலக்கை நம்மால் எட்ட முடியவில்லை, ஆனால் பல முயற்சிகளுக்குப் பிறகு $50 மில்லியன் இலக்கை எட்டினோம். ராஜாஸ்ரீ பிர்லா அவர்களிடமிருந்து பெற்ற $1 மில்லியன், ஒரு எஸ்டேட்டிலிருந்து பெற்ற $2.2 மில்லியன் மற்றும் வேறு ஒரு நன்கொடையாளரிடமிருந்து மற்றொரு $1 மில்லியன் ஆகியவை நமக்கு கிடைத்தது. இவை 2019-20-ல் கிடைக்காமல் போகலாம். எனவே நமக்கு ஒவ்வொரு மாவட்டத்திடமிருந்து குறைந்தது 20 சதவீத DDF-ஐயும் மற்றும் ஒவ்வொரு சங்கத்திடமிருந்து குறைந்தது, $1,500-ஐயும் தேவைப்படுகிறது.

மானிய நிதி தொடர்ந்து பெருகி வருகிறது, மேலும் இது நடப்பு ஆண்டிலும் பல பெரிய பங்களிப்புகளை பெறும் என்று நான் நம்புகிறேன்.



**கமல் சங்வி**
RI இயக்குனர், Zones 5 and 6


### Board of Permanent Trustees & Executive Committee

| | |
|---|---|
| PRIP Rajendra K Saboo | RI Dist 3080 |
| PRIP Kalyan Banerjee | RI Dist 3060 |
| PRID Sudarshan Agarwal | RI Dist 3011 |
| PRID Panduranga Setty | RI Dist 3190 |
| PRID Sushil Gupta | RI Dist 3011 |
| PRID Ashok Mahajan | RI Dist 3141 |
| PRID Yash Pal Das | RI Dist 3080 |
| PRID Shekhar Mehta | RI Dist 3291 |
| PRID P T Prabhakar | RI Dist 3232 |
| PRID Dr Manoj D Desai | RI Dist 3060 |
| PRID C Basker | RI Dist 3000 |
| TRF Trustee Gulam A Vahanvaty | RI Dist 3141 |
| RID Dr Bharat Pandya | RI Dist 3141 |
| RID Kamal Sanghvi | RI Dist 3250 |

**Executive Committee Members (2019–20)**

| | |
|---|---|
| DG Deepak Gupta<br>Chair – Governors Council | RI Dist 3012 |
| DG Nayan Patil<br>Secretary – Governors Council | RI Dist 3160 |
| DG Dhiran Datta<br>Secretary – Executive Committee | RI Dist 3040 |
| DG Ajay Agarwal<br>Treasurer – Executive Committee | RI Dist 3291 |
| DG Rajendra Madhukar Bhamre<br>Member – Advisory Committee | RI Dist 3030 |



**ROTARY NEWS / ROTARY SAMACHAR**

**Editor**
Rasheeda Bhagat

**Senior Assistant Editor**
Jaishree Padmanabhan

**ROTARY NEWS / ROTARY SAMACHAR**

ROTARY NEWS TRUST
3rd Floor, Dugar Towers,
34 Marshalls Road, Egmore
Chennai 600 008, India.
Phone : 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org
Website :www.rotarynewsonline.org

# District Wise TRF Contributions as on June 2019

(in US Dollars)

| District Number | APF | PolioPlus | Other Restricted | Endowment Fund | Total Contributions | EREY Donors (in numbers) | EREY % |
|---|---|---|---|---|---|---|---|
| **India** | | | | | | | |
| 2981 | 179,404 | 28,768 | 0 | 48,243 | 256,415 | 617 | 13.58 |
| 2982 | 102,156 | 8,702 | 5,947 | 1,243 | 118,048 | 504 | 17.51 |
| 3000 | 33,098 | 13,237 | 441,752 | 115,861 | 603,948 | 47 | 0.95 |
| 3011 | 182,664 | 22,158 | 1,232,672 | 76,410 | 1,513,904 | 510 | 15.35 |
| 3012 | 224,240 | 1,761 | 386,351 | 8,800 | 621,151 | 293 | 8.68 |
| 3020 | 58,139 | 101,559 | 2,625 | 39,250 | 201,573 | 154 | 4.05 |
| 3030 | 104,383 | 29 | 300 | 23,887 | 128,599 | 139 | 3.01 |
| 3040 | 8,632 | 0 | 86,686 | 0 | 95,318 | 21 | 1.00 |
| 3053 | 219,612 | 2,729 | 26,117 | 0 | 248,458 | 212 | 7.70 |
| 3054 | (12,285) | 1,674 | 138,210 | 0 | 127,599 | 48 | 0.83 |
| 3060 | 249,475 | 79,982 | 355,361 | 292,219 | 977,037 | 1,628 | 39.56 |
| 3070 | 163,949 | 315 | 15,388 | 0 | 179,652 | 759 | 26.34 |
| 3080 | 158,327 | 50,930 | 95,382 | 11,000 | 315,638 | 434 | 13.84 |
| 3090 | 61,182 | 29 | 200 | 0 | 61,410 | 187 | 9.28 |
| 3100 | 23,017 | 475 | 0 | 0 | 23,492 | 86 | 5.17 |
| 3110 | 48,042 | 4,859 | 53,572 | 0 | 106,473 | 139 | 3.63 |
| 3120 | 87,782 | 2,302 | 240,697 | 15,000 | 345,782 | 141 | 4.46 |
| 3131 | 672,111 | 29,708 | 590,269 | 96,203 | 1,388,290 | 2,132 | 41.69 |
| 3132 | 94,609 | 23,024 | 18,179 | 115,000 | 250,812 | 365 | 10.07 |
| 3141 | 814,476 | 45,788 | 1,618,569 | 118,408 | 2,597,241 | 1,610 | 32.05 |
| 3142 | 466,919 | 2,070 | 678,039 | 0 | 1,147,028 | 1,079 | 34.16 |
| 3150 | 141,131 | 33,603 | 88,978 | 584,725 | 848,437 | 918 | 26.45 |
| 3160 | 180,103 | 1,844 | 0 | 18,777 | 200,724 | 237 | 9.87 |
| 3170 | 330,782 | 8,591 | 384,912 | 0 | 724,285 | 791 | 14.95 |
| 3181 | 184,142 | 938 | 0 | 103 | 185,183 | 805 | 26.75 |
| 3182 | 110,108 | 100 | 11,367 | 9,659 | 131,234 | 552 | 17.57 |
| 3190 | 551,474 | 36,321 | 451,614 | 2,014,918 | 3,054,327 | 1,539 | 32.20 |
| 3201 | 400,320 | 41,584 | 591,229 | 29 | 1,033,161 | 735 | 14.09 |
| 3202 | 56,829 | 48,883 | 35,563 | 0 | 141,275 | 96 | 2.01 |
| 3211 | 134,374 | 5,516 | 188,303 | 2,515 | 330,708 | 562 | 12.74 |
| 3212 | 261,848 | 14,323 | 9,450 | 47,501 | 333,122 | 261 | 6.61 |
| 3231 | 45,221 | 5,131 | 41,411 | 6,528 | 98,292 | 338 | 11.32 |
| 3232 | 358,723 | 16,454 | 780,428 | 13,975 | 1,169,580 | 526 | 12.28 |
| 3240 | 112,287 | 671 | 7,374 | 0 | 120,332 | 444 | 15.26 |
| 3250 | 69,394 | 2,334 | 19,530 | 0 | 91,258 | 192 | 5.20 |
| 3261 | 32,109 | 1,100 | 13,208 | 3,000 | 49,418 | 85 | 3.32 |
| 3262 | 48,282 | 1,000 | 17,430 | 5,413 | 72,124 | 216 | 6.59 |
| 3291 | 284,347 | 9,008 | 107,906 | 54,860 | 456,120 | 541 | 14.88 |
| **India Total** | **7,241,404** | **1,647,500** | **8,735,019** | **3,723,526** | **21,347,449** | **19,943** | **14.28** |
| 3220 **Sri Lanka** | 107,213 | 4,633 | 14,676 | 8,000 | 134,522 | 285 | 15.84 |
| 3271 **Pakistan** | 46,034 | 38,456 | 2,275 | 0 | 86,764 | 29 | 2.07 |
| 3272 **Pakistan** | 38,048 | 2,166 | 0 | 0 | 40,214 | 110 | 3.87 |
| 3281 **Bangladesh** | 229,771 | 5,762 | 235,920 | 21,179 | 492,632 | 540 | 9.90 |
| 3282 **Bangladesh** | 83,364 | 6,066 | 7,248 | 3,000 | 99,677 | 397 | 9.92 |
| 3292 **Nepal** | 261,854 | 32,509 | 504,913 | 25,000 | 824,276 | 506 | 11.61 |
| **South Asia Total** | **8,007,688** | **1,737,091** | **9,500,051** | **3,780,705** | **23,025,534** | **38,983** | **24.44** |
| **World Total** | **126,616,280** | **35,807,785** | **23,956,237** | **27,325,400** | **213,705,702** | | |

Source: RI South Asia Office

NiveshGuru™
SAMPATTI KI UNATTI

# GROW YOUR WEALTH

NiveshGuru, a one-stop solution for all your investment needs.

KshetraGuru® PROPERTY

SwarnaGuru® GOLD

FDGuru® FIXED DEPOSIT

VyaparGuru® STOCK BROKING

ShuruGuru™ IPO

YojanaGuru® GOVERNMENT BONDS

NidhiGuru™ MUTUAL FUND

AmulyaGuru™ PRECIOUS STONES



Nivesh Guru Advisors Private Limited
68-B, Nariman Bhavan, Nariman Point, Mumbai - 400021

+91 22 2288 0808 info@niveshguru.in www.niveshguru.in

# மறக்க முடியாத ஆண்டும், வியக்கவைத்த மனிதர்களும்!

ரஷீதா பகத்

ஹாம்பர்க் மாநாட்டின் நிறைவு நாளில் பேசிய ரோட்டரி தலைவர் பேரி ரஸ்ஸின், இந்த ஆண்டு மறக்கமுடியாத ஒரு ஆண்டாகவும், வியத்தகு மனிதர்களை சந்தித்து பற்றியும் ரோட்ராக்டர்கள் செயல்பாடுகள் பற்றியும் விரிவாக எடுத்துக் கூறினார்.

பீட்டில்ஸ் பாடகர்கள் (ராக் இசைக் கலைஞர்கள்) வெற்றிக் கதையை மாநாட்டுப் பிரிதிநிதிகளிடம் ரஸ்ஸின் உதாரணமாக எடுத்துக் கூறினார். அந்த இசைக் குழுவைச் சேர்ந்த நால் வரும் 31 வயதில் புகழின் உச்சத்தை அடைந்ததையும் பெருமையாகக் குறிப்பிட்டார். அத்தோடு நில்லாமல் தனது 8-வது வயதில் மோஸார்ட் சிம்பொனி பாடலை எழுதியதையும் பிரெஞ்ச் படைகளுக்கு ஜான் ஆஃப் ஆர்க் 17 வயதில் தலைமை தாங்கியதையும் சுட்டிக்காட்டினார். இவையெல்லாம் நீண்ட காலத்துக்கு முன்நிகழ்ந்தவை என்று சொல்பவர்களுக்கு ரஸ்ஸின் கூறும் பதில் இதுதான்:

மைக்ரோ சாஃப்ட் நிறுவனத்தை பில் கேட்ஸ் தொடங்கியபோது அவருக்கு 24 வயது தான். ஸ்டீவ் ஜாப்ஸ் வேறுசிலருடன் சேர்ந்து ஆப்பிள் நிறுவனத்தை தொடங்கியபோது அவருக்கு 21 வயது. மார்க் ஸுகர்பர்க் அவரது நண்பர்களுடன் இணைந்து பேஸ்புக் (முகநூல்) நிறுவனத்தைத் தொடங்கியது 20 வயதில்தான் என்று நினைவுபடுத்துகிறார் பேரி ரஸ்ஸின்.


உலகில் மாற்றங்கள் ஏற்பட வேண்டுமானால் அதற்கு வயது ஒரு பொருட்டல்ல. இன்றைய பெற்றோர்கள் அல்லது பெரியவர்கள் இளைஞர்களுக்குச் சொல்ல வேண்டியதெல்லாம் கனவு காணுங்கள், கனவை நனவாக்குங்கள் அல்லது செயல்படுத்துங்கள் என்பது தான். ரோட்டேரியன்களான நம்மால் நிறைவேற்ற முடியாத கனவு ஒன்றும் இல்லை என்பதை மனதில் நிலைநிறுத்துங்கள்.

புதியதோர் உலகை உருவாக்க வேண்டும் என்ற நீண்ட கனவுகளுடன் ரோட்டரி இயக்கத்தில் சேர்ந்துள்ள இளைஞர்களை சந்தித்தது எனக்கு முற்றிலும் புதுமையான அனுபவமாக இருந்தது. இளைஞர்கள் நிறைந்த உலகில் நாம் வாழ்கிறோம் என்பதை நினைக்கும்போது எனக்கு பெருமையாக இருந்தது மட்டுமல்லாமல், அவர்களின்பால் ஈர்ப்பும் ஏற்பட்டது. இந்த வயதில் அவர்கள், தாங்கள் சந்திக்க வேண்டிய சவால்களை நம்மைவிட நன்கு புரிந்துகொண்டுள்ளனர். வியப்பூட்டும் அந்த இளைஞர்களைப் பார்த்தபோது ரோட்டரி இயக்கத்துக்கு நல்ல எதிர்காலம் உள்ளது.

இந்த ஆண்டு மேலும் 1,000 ரோட்டரி சங்கங்கள் இணைக்கப்பட்டுள்ளன. துருக்கியில் ரோட்டரி உறுப்பினர்கள் அங்குள்ள குழந்தைகள் மருத்துவமனைக்கு 107 புதன்கிழமைகள் சென்று அவர்களுடன் சேர்ந்து விளையாடி மகிழ்ந்துள்ளனர். சங்கத்தின் மேலும் சில உறுப்பினர்கள் அங்குள்ள பல்கலைக்கழகத்துக்குச் சென்று புதிதாக சேர்ந்த மாணவர்களுக்கு திறன் வளர்ப்பு மற்றும் தலைமைப் பண்புகளை தெளிவாக எடுத்துக் கூறியுள்ளனர்.

இந்த நேரத்தில், மாநாட்டில் பால் முஷாஹோ என்பவர் கூறிய அரிய தகவலை உங்களுடன் நான் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். காங்கோ நாட்டில் வன்முறை உச்சக்கட்டத்தில் இருந்த சமயத்தில் அங்கிருந்து ஒருவர் தப்பி, உகாண்டா நாட்டுக்கு வந்து அகதிகள் முகாமில் சேர்ந்தார். அத்துடன் அவர் சும்மாயிருக்கவில்லை. அகதி முகாமிலேயே ரோட்டரி சங்கத்தை நிறுவி அதை சிறப்பாக நடத்திவந்தார். ஆச்சர்யமளிக்கும் தகவல் அல்லவா! அவரால் முடியும் என்றால் நம்மால் நாம் இருக்கும் இடத்தில் நமது சமூகத்தில் ஏன் புதிய சங்கங்களை உருவாக்க முடியாது. சவால்களை சந்திக்க முடியாது.

டொமினிகன் குடியரசு நாட்டில்



*RI தலைவர் பேரி ரஸ்ஸின் RAC நாகிவேல் (உகாண்டா)வின் தலைவர் பால் முஷாகோவுடன்.*

ரோட்டரி உறுப்பினர் ஒருவர் பிளாஸ்டிக் பொருள்களை மறுசுழற்சி மூலம் ஆபரணங்களாகத் தயாரித்து சுற்றுலாப் பயணிகளிடம் விற்று வருகிறார். அவருக்கு நல்ல வரவேற்பு கிடைத்து வருகிறது.

ரோட்டரி தலைவர் என்ற முறையில் பேரி ரஸ்ஸின் மற்றும் எஸ்தர் இருவரும் உலகில் பல்வேறு பகுதிகளில் ரோட்டரி சங்கத்தினரால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களைப் பார்வையிட்டு வந்தனர். பிலிப்பைன்ஸ் நாட்டில் உள்ள பரனாக் என்னுமிடத்தில் ரோட்டரி சங்கத்தினர் நதிக்கரையில் வாழ்ந்துவரும் சமூகத்தினருக்கு வீடு கட்டிக்கொடுத்து அந்த பகுதியை சுத்தப்படுத்தி அவர்களின் முன்னேற்றத்துக்கான திட்டங்களைச் செயல்படுத்தி வருவதை அவர்கள் சுட்டிக்காடி அகமகிழ்ந்தனர்.

நம் நாட்டில் ஒவ்வொரு பள்ளிகளிலும் சுகாதரத்தை பேணவும், மாணவ, மாணவிகள் கை, கால்களைக் தண்ணீரில் கழுவி சுகாதாரமாக இருக்கவும் வீட்டிலும் இதே சுகா தாரத்தை கடைபிடிக்கவும் ரோட்டரி சங்கம் திட்டங்களைச் செயல்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

கொலம்பியா நாட்டில், மருத்துவ மனைகளில் சிகிச்சை பெற்றுவரும் குழந்தைகளுக்கு அங்குள்ள ரோட்டரி சங்க உறுப்பினர்கள் புலி, கரடி, சிங்கம் போன்ற விலங்குகளின் பொம்மைகளைத் தயாரித்து வழங்கினர். அக்குழந்தைகள் அந்த பொம்மைகளை கட்டித்தழுவி மகிழ்ந்தது கண்கொள்ளா காட்சியாக இருந்தது.

ஹைதி நாட்டில் பூகம்பம் ஏற்பட்ட போது ரோட்டரி சங்க உறுப்பினர்கள் துரிதமாகவும் திறம்படவும் செயல்பட்டனர். பெண் மருத்துவ உதவியாளர்களை நாட்டின் மூலை முடுக்குகளில் உள்ள இடங்களுக்கு ஜீப்பில் அழைத்துச் சென்று கர்ப்பிணி களுக்கு பிரசவம் பார்த்தது மறக்க முடியாதது என்கிறார் பேரி ரஸ்ஸின்.

பிரேசில் நாட்டில் உள்ள சங்கத்தினர், ஜப்பான் நாட்டு ரோட்டரி சங்கத்தினருடன் இணைந்து சர்வதேச நிதியுதவித் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தினர். தங்கள் நாட்டில் உள்ள மகப்பேறு மருத்துவமனையில் குழந்தைகளைப் பாதுகாப்பதற்கான வசதிகளை அதிகரித்து, அவசர சிகிச்சைக்குத் தேவையான இங்கு பேட்டர் உள்ளிட்ட முக்கிய உபகரணங்களை வாங்கிக்கொடுத்து உள்ளூர் மருத்துவமனையின் தரத்தை உயர்த்தியதுடன் பல குழந்தைகளின் இறப்பைத் தடுத்துள்ளனர். அவர்களின் செயல் மெய்சிலிர்க்க வைத்தது.

நான் தலைவராக இருந்த காலத்தில் 35 நாடுகளின் தலைவர்களை சந்தித்துப் பேசினேன். அனைவரும் ரோட்டரியுடன் இணைந்து செயல்பட விருப்பம் தெரிவித்தனர். அவர்களில் இரு நாட்டுத் தலைவர்கள் ரோட்டரியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொள்ளவும் முன்வந்தனர் என்று குறிப்பிட்ட பேரி ரஸ்ஸின், உலகம் முழுவதும் ரோட்டரி சங்கத்தின் மீது மரியாதை இருப்பதற்கு தனிப்பட்ட முறையில் நானோ அல்லது நான் தலைவராக இருந்ததாலோ கிடைத்தது அல்ல. அது உங்களால், உங்கள் தொடர்புகளால், உங்கள் நாட்டில் நீங்கள் செய்த சேவைகளால் கிடைத்தது. அதுதான் ரோட்டரியின் வளர்ச்சி, செயல்பாடுகளுக்குக் காரணம் என்று பெருமையுடன் குறிப்பிட்டார்.

## இந்திய டாக்டர்களுக்கு பாராட்டு



RI தலைவர் ரஸ்ஸின் PRIP ராஜேந்திர சாபூவுடன் மடகாஸ்கரில் இந்திய மருத்துவ முகாமில்.

*உலகெங்கிலும் ரோட்டரி சங்கங்கள் மூலம் மெச்சத்தகுந்த பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதை சுட்டிக்காட்டிய பேரி ரஸ்ஸின், மடகாஸ்கரில், இந்திய டாக்டர்கள் செய்த அரும்பணிகளையும் வெகுவாக பாராட்டினார். அவர்களுடன் சேர்ந்து தாமும் தொண்டாற்றியதை பெருமையாகக் குறிப்பிட்டார்.*

*PRIP ராஜா சாபூ தலைமையில் 19-க்கும் மேலான இந்திய டாக்டர்கள் குழு 8 தினங்களில் 3,500-க்கும் மேலான பணிகளை மேற்கொண்டு சிறப்பாகச் செயல் பட்டதை கூறிய ரஸ்ஸின், 12 உள்ளூர் மருத்துவர்களுக்கு அறுவைச் சிகிச்சையில் பயிற்சி அளித்ததையும் குறிப்பிடத் தவறவில்லை.*

*நான் அவர்களின் பணிகளை ஆய்வு செய்ததுடன் நில்லாமல் அவர்கள் சேவையில் என்னையும் ஈடுபடுத்திக்கொண்டேன். குழந்தைகள் ஒவ்வொருவரும் கண் திறந்து நம்மைப் பார்த்து புன்னகைத்து தாங்க் யூ என்று அன்புடன் சொல்லுவதை ரொட்டேரியன்களாகிய நாம் ஒவ்வொருவரும் அனுபவ பூர்வமாக உணர வேண்டும். இதுதான் தாழ்மையான வேண்டுகோள் என்றார் ரஸ்ஸின்.*

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

# ரோட்டரி அறக்கட்டளைக்கு குவியும் நிதி!

ரஷீதா பகத்




*TRF தலைவர் பிரெண்டா கிரெஸ்ஸி.*

சிறு வயதில் என்னுடன் விளையாடிய தோழி சூசி, திடீரென ஒருநாள் காணாமல் போனாள். வாழ்க்கையே வெறுத்து விட்ட நான், என் அம்மாவிடம், சூசி எங்கே இருக்கிறாள். அவளுடன் நான் விளையாட முடியுமா என்று கேட்டபோது, சூசி இனி விளையாட வரமாட்டாள், அவளுக்கு போலியோ நோய் என்று கண்ணீர்மல்கக் கூறினார்.

ஹாம்பர்க் மாநாட்டில், போலியோ ஒழிப்பில் தனக்கு இருந்த ஈடுபாட்டை விவரிக்கும்போது அறக்கட்டளையின் தலைவர் பிரெண்டா கிரெஸ்ஸி இதைத் தெரிவித்தார்.

1989-ஆம் ஆண்டு வரை எனக்கு சூசி பற்றிய நினைப்பே வரவில்லை. ஒரு நாள், நான் சிறு வயதில் சூசியுடன் பாண்டி விளையாடியது நினைவுக்கு வந்தது. போலியோவால் சூசி பாதிக்கப்பட்டது குறித்து வருந்தினேன். உலகம் முழுவதும் போலியோ நோய் ஒழிப்பில் தீவிரம் காட்டி வரும் ரோட்டரி சங்கத்தின் சேவைகளைப் பற்றி கேள்விப்பட்ட நான், உடனடியாக அச்சங்கத்தில் சேர்ந்து போலியோ ஒழிப்பு நடவடிக்கைகள் பற்றி முழுமையாகத் தெரிந்துகொண்டேன். எந்த ஒரு குழந்தையும் அது ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி, போலியோ நோய் தாக்காமல் இருக்க வேண்டும், போலியோ இல்லாத உலகை உருவாக்க வேண்டும், அதற்கான சேவையில் என்னை ஈடுபடுத் திக் கொள்ள வேண்டும் என்று உறுதிமொழி எடுத்துக்கொண்டேன் என்றார் கிரெஸ்ஸி.

போலியோ ஒழிப்புதான் ரோட்டரி சங்கத்தின் முதன்மையான பணி என்று குறிப்பிட்ட கிரெஸ்ஸி, ரோட்டரி அறக்கட்டளையின் கடந்தகால செயல்பாடுகளை துல்லியமாக எடுத்துக் கூறினார்.

ரோட்டரி சங்கம் மூலம் உதவி வழங்குவதற்கான புதிய திட்டத்துக்கு நல்ல வரவேற்பு இருப்பதாகவும் கிரெஸ்ஸி குறிப்பிட்டார். ஒரு திட்டத்துக்கு உதவி அளிக்கும்போது உள்ளூர் மக்களின் தேவை, அத்திட்டம் தொடருமா, அதன் மூலம் வளர்ச்சி ஏற்படுமா என்று பார்த்துதான் செயல்படுகிறோம். நல்ல சேவைகள் மூலம் நாம் உச்சத்தை எட்டியுள்ளோம். இது தொடர வேண்டும்.

இந்த ஆண்டு காட்டுத் தீ, புயல், சூறாவளி, வெள்ளம், வறட்சி என பல துயரங்களை உலகம் சந்தித்திருப்பதால் ரோட்டரி உறுப்பினர்கள் அறக்கட்டளைக்கு தாராளமாக நிதியுதவி செய்ய முன்வரவேண்டும். இதற்காகவே ரோட்டரி பேரிடர் துயர்துடைப்பு நிதியத்தை ஏற்படுத்தியுள்ளோம். இதன் மூலம் விரைவாகவும், மேம்பட்ட முறையிலும் உதவ முடியும்.

இந்த ஆண்டு மே மாத இறுதிவரை ரோட்டரி அறக்கட்டளை 331.9 மில்லியன் டாலரை (ஒரு டாலர் ரூ.70-க்குச் சமம் என்றால் கணக்கு போட்டு பார்த்துக் கொள்ளுங்கள்-இந்திய ரூபாயில் சுமார் 2300 கோடி) நிதியாக திரட்டியுள்ளது. ஆண்டு இறுதிக்குள் இதை கணிசமாக அதிகரிக்க ரோட்டரி உறுப்பினர்கள் முயற்சி செய்ய வேண்டும். நீங்கள் அளிக்கும் நிதி மக்களின் வாழ்க்கைத் தரத்தை மாற்றுவதுடன் நமது எதிர்காலத் திட்டங்களுக்கும் உதவியாக இருக்கும். ரோட்டரி சங்கமும் அறக்கட்டளையும் சுமார் 2.025 பில்லியன் டாலர் நிதி திரட்டுவதை குறிக்கோளாகக் கொண்டு செயல்பட வேண்டும். இதை நிறைவேற்றினால், ரோட்டரி சங்கங்கள் மூலம் ஆண்டுக்கு 100 மில்லியன் டாலர் மதிப்பிலானசேவைத் திட்டங்களை நாம் செயல்படுத்த முடியும் .

ரோட்டரி அறக்கட்டளைக்கு வழங்கப்படும் நன்கொடைகள் மூலம் என்ன நன்மை ஏற்படுகிறது. அதனால் எத்தனை பேர் வாழ்வில் ஒளியேற்றப்படுகிறது என்பதை இந்த ஒரு அனுபவத்தின் மூலம் என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. நீங்கள் அளிக்கும் நன்கொடைகள் தான் மக்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்துகிறது. அவர்கள் சமூக முன்னேற்றத்துடனும் கண்ணியத்துடனும் வாழ வழிசெய்கிறது.

போலியோ ஒழிப்புதான் நம் தலையாய பணி என்பதை நாம் மீண்டும் நினைவில் கொள்ள வேண்டும். இந்த ஆண்டு கேட்ஸ் அறக்கட்டளை நமக்கு 100 மில்லியன் டாலர் வழங்க ஒப்புக்கொண்டுள்ளது. ரோட்டரி உறுப்பினர்களாகிய நாமும் 50 மில்லியன் டாலர் நிதி சேர்த்தால் போலியோ ஒழிப்புத் திட்டதை முற்றிலுமாக ஒழிப்பது சாத்தியப்படும்.

வருகிற ஆகஸ்ட் மாதம் நைஜீரியா முற்றிலும் போலியோ இல்லாத நாடாக உருவெடுக்க இருக்கிறது. பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் விஷயத்தில் இது இன்னமும் சவாலாகவே இருக்கிறது. உலகில் போலியோ ஒழிப்பு நடவடிக்கையில் நமது பங்கு முக்கியமானது. நாம் செல்லவேண்டிய தூரம் இன்னும் கொஞ்சம்தான். அதை வெற்றிகரமாக செயல்படுத்தி முடிப்போம்!■



2019 HAMBURG

# ரோட்டரி, ஆபத்தில் உதவும் அருமை நண்பன்

ரஷீதா பகத்


ஹேம்பர்க் மாநாட்டில் சுவாரஸ்யமான ஓர் அமர்வில் எப்படி ரோட்டரி சங்கத்தின் உறுப்பினர் என்ற ஒரே காரணத்தால் தங்களால் இக்கட்டான சூழ்நிலைகளிலிருந்து மீள முடிந்தது மற்றும் தங்கள் வாழ்க்கையில் முழுமாற்றத்தை அடைய முடிந்தது என்பதை சிலர் நினைவுகூறினர்.

RI ன் தலைமை வியூக அதிகாரி, டாம் தார்ஃபின்சன் தலைமை வகித்த அந்த அமர்வில், “நான் இன்றைக்கு இந்த நிலைமைக்கு வந்திருக்கிறேன் என்றால் அதற்கு ரோட்டரியே காரணம்’’ என்ற வாசகத்தை PRIP KR ரவீந்திரன் மீண்டும் வலியிறுத்தினார்.

“நான் 700 ஊழியர்கள் பணியாற்றுகிற ஓரளவு பெரிய வணிகத்தை நடத்துகிறேன், பிறகு ஏன் அதைக் கவனிக்காமல் வெளியே இவ்வளவு நேரத்தைச் செலவழிக்கிறீர்கள், அது உங்கள் நிதி விவகாரங்களைப் பாதிக்காதா? என்று அடிக்கடி என் நண்பர்கள் கேட்பார்கள். நல்ல கேள்வி தான், ஆனால் இதற்கான பதிலை ரொம்பச் சுருக்கமாகச் சொல்லிவிடலாம். நான் இன்றைக்கு இருக்கும் நிலைமைக்கு ரோட்டரி தான் காரணம்.’’

அவர் தன் வாழ்க்கைக் கதையைத் தொடர்ந்தார்: வாழ்வின் இள வயதிலேயே’’ நான் வியாபாரம் செய்யும் கட்டாயத்துக்குத் தள்ளப் பட்டேன். சிறிய கராஜ் போன்ற இடத்தில், கடன் பெற்ற பணத்தையும், என்னை நம்பிய முதலீட்டாளரையும் வைத்து தேயிலைப் பைகளுக்கான பேக்கிங் தயாரிப்பு நிறுவனம் ஒன்றைத் தொடங்கினேன்.’’ தொடக்கநிலை வணிகத்தில் பெரும்பாலும் நடப்பது போல, ரவீந்திரனுக்கும் மூன்றாண்டுகளுக்குப் பிறகு பணச்சிக்கல் ஏற் பட்டது.’’ நிதி ஆதரவு தேடி ஒன்றன் பின் ஒன்றாக வங்கிப் படிகளில் ஏறியிறங்கினேன், எல்லோரும் இன்னொரு கூடுதல் ஜாமீன் வேண்டும் என்று கேட்டார்கள், அது என்னிடம் இல்லை.’’

13ஆவது வங்கியில், தற்செயலாக RC கொலும்பு ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த நண்பர் ஒருவரைச் சந்தித்தேன். “என்னை கடனுதவிப் பிரிவு மேலாளரிடம் அறிமுகம் செய்து வைப்பீர்களா என்று கேட்டேன்.’’ அவர் அதையும், இதையும் பற்றி ரவீந்திரனோடு கதைக்கத் தொடங்கினார், ஆனால் ரவீந்திரனோ சற்று நடுக்கத்துடன் தான் வங்கிக்கு வந்த நோக்கத்தை, அதாவது கடனுதவி பற்றி விஷயத்தை அவருக்கு அமைதியாக நினைவுபடுத்தினார்.’’ அந்த நண்பர் அசால்டாக சில தாள்களை வெளியே எடுத்து, என்னிடம் கொடுத்து, அதை நான் பூர்த்திசெய்து கூடிய சீக்கிரம் திரும்பக் கொண்டுவர வேண்டும் என்றார். நான் அந்தத் தாள்களைப் பார்த்து,’ இது என்ன?’ என்றேன். ’நான் உங்கள் கடனுக்கு ஒப்புதல் அளித்துவிட்டேன். உங்களுக்குத் தேவையான கடனுதவித் தொகையை வழங்குவது என் அதிகாரத்துக்கு உட்பட்டது தான். எங்கள் கடனுதவிப் பிரிவு மேலாளரை நீங்கள் பார்க்கத் தேவையில்லை!’ என்றார்.’’



PRIP KR *ரவீந்திரன்,* RI *தலைமை வியூக அதிகாரி டாம் தார்ஃபின்சன் மற்றும்* RC *கம்பாலா மாயிஷாவைச் சார்ந்த கிம்பர்லி கஸானா.*

நடந்ததை நம்பவே முடியாமல் ரவீந்திரன் அந்தத் தாள்களை எடுத்துக்கொண்டு, அந்த ரொட்டேரியன் நண்பருக்கு நன்றி சொல்லி விட்டு, அவர் எழுந்துசெல்லப் போகும்போது அவரை நிறுத்தி சற்று தயக்கத்துடன், மற்ற வங்கிகள் கோரிய அந்த ஜாமீனைப் பற்றிக் கேட்டார். அவரோ புன்னகைத்த படி, நீங்கள் என் ரோட்டரி சங்க உறுப்பினர், இல்லையா? எனக்கு உங்கள் மேல் நம்பிக்கை இருக்கிறது, நீங்கள் தைரியமாகப் போய் உங்கள் வணிகத்தை வளர்க்கலாம்’ என்றார்.’’

அடுத்த ஐந்தாண்டுகளில் ரவீந்திரனின் நிறுவனம் வளர்ந்து அந்த வங்கியின் மிகப்பெரும் வாடிக்கையாளர்களில் ஒன்றாகவும், உலகளவில் தேயிலைப் பைகள் பேக்கேஜிங்கில் ஒரு பெரிய உற்பத்தியாளராகவும் உருவாகியது. நான் ரொட்டேரியன் என்பதற்காகவே ஒருவர் என்னை நம்பியதால் தான் இது நடந்தது. நான் இந்த நிலைக்கு வந்ததற்கு ரோட்டரியே காரணம் என ஏன் சொன்னேன் என்று இப்போது உங்களுக்குப் புரியும் என்று நினைக்கிறேன்.

தார்ஃபின்சன் அவர்களும் தனக்கு ஏற்பட்ட சம்பவத்தை நினைவுகூறினார். 400 மைல் தொலை விலுள்ள மின்னிசோட்டாவில் வசித்த தன் மகள் ஆஷ்லீ, இவான்ஸ்டனில் இருக்கும் தன்னை அழைத்து அவருடைய வீட்டின் கீழ்த்தளத்தில் வெள்ளநீர் புகுந்துவிட்டது என்று பதறினார். குளிர் காலத்தில் மிகுந்த பனி நிலவியதும், அதைத் தொடர்ந்து விரைந்துவந்த வசந்த காலத்தில் மழை கொட்டியதுமே இதற்குக் காரணம். அப்போது ஆஷ்லீயின் கணவர் கிறிஸ் வெகுதூரப் பயணமாக லண்டன் சென்றிருந்தார், தண்ணீர் பொங்கி அடுத்த மாடிக்கு வந்து கொண்டிருந்தது.'' இயலாமையில் தவித்த அப்பா'' 400 மைல்களுக்கு அப்பால் இருந்துகொண்டு என்ன செய்ய முடியும்.'' அன்றைக்கு சாயங்காலம் நான், தண்ணீர் பிரச்சனைகளைக் கையாளும் பல கான்ட்ராக்டர்களை உதவிகேட்க அழைத்தேன். எவரும் என் அழைப்புக்கு பதில் கூட அளிக்கவில்லை.''

இரவு முழுக்க அவருக்கு தூக்கமே வரவில்லை, அடுத்த நாள் காலை தன் ரோட்டரி சங்க (RC எல்டன் பிரைரீ நூன்) நண்பர் டாட் அவர்களை அழைத்தார். இருவரும் ஹாய்த்தியில் ஒரு தண்ணீர் திட்டத்துக்காக பயணம் செய்தபோது நல்ல நண்பர்களாகி இருந்தனர்.'' டாட், தோண்டும் தொழிலில் ஓர் ஓய்வுபெற்ற கான்ட்ராக்டர், ஒருவேளை அவர் எனக்கு உதவலாம் என்று நினைத்தேன். 'ஒன்றும் கவலைப்படாதீங்க, அதை நான் கவனித்துக் கொள்கிறேன்' என்றார் அவர். ஒரு மணிநேரத்துக்குள் அவர் நீரகற்றும் பம்புடன் என் மகளின் வீட்டை வந்தடைந்தார். அன்று தொழிலை கவனித்துக்கொண்டிருந்த அவருடைய மகனிடமிருந்து அந்த உபகரணத்தை வாங்கிக் கொண்டு அங்கே வந்தார். டாட் அன்றைய தினம் எட்டு மணிநேரம் முழுமூச்சாக வேலையில் இறங்கி கீழ்த்தளம் மற்றும் முற்றத்தில் தேங்கியிருந்த தண்ணீரை வெளியே இறைத்து அகற்றினார். அடுத்த நாள் கிறிஸ் லண்டனிலிருந்து திரும்பி வந்தபின் ஆஷ்லீ, கிறிஸ் இருவரும்' டாட், ரோட்டரி' என்று புகழாரம் பாடிக்கொண்டே இருந்தனர்!''

இன்னொரு மனதை-நெகிழ வைக்கும் சம்பவத்தை கிம்பர்லி கசானா கூறினார், அவர் கம்பாலா மாயிஷா, RI மாவட்டம் 9211 ரோட்டரி சங்கத்தின் சார்டர் பிரசிடென்ட். ஒருசில ஆண்டுகளுக்கு முன்பு, அவரும் அவர் மகள் தானியாவும் கிறிஸ்மஸ் விடுமுறைக்கு ரோம் செல்லத் தீர்மானித்தனர்.'' அதுதான் முதல் தடவையாக அவள் வெளிநாட்டுக்குப் போகிறாள், ரொம்ப குஷியாக இருந்தாள்.'' ரோம் வந்திறங்கியதும், பிரயாணிகளின் வரிசையில் நின்றபோது தங்கள் பாஸ்போர்ட்களைக் காணவில்லை.'' எனக்கு ஒரே பதைபதைப்பு, தானியா தொடர்ந்து 'அம்மா என்ன நடந்தது' என்று கேட்டபடி இருந்தாள்.'' வரிசையிலிருந்து விலகி, காணாமல்போன பாஸ்போர்ட்களை அவர் மும்முரமாகத் தேடினார், அப்போதுதான் அவளுக்கு அந்த ஞாபகம் வந்தது. எமிரேட்ஸ் விமானத்தில் பயணித்ததால் அதற்கு முந்தைய நிறுத்தமான துபாயில் இறங்கியிருந்தார்கள். அங்கே பாஸ்போர்ட் கட்டுப்பாட்டுச் சோதனைக்குப் பிறகு பயணிகள் காத்திருக்கும் பகுதியில் உட்கார்ந்திருந்த போது பாஸ்போர்ட்களை தனது கைப் பையிற்கு அருகே வைத்தார். அடுத்த விமானத்தில் ஏற போர்டிங் பாஸ் மட்டுமே தேவை என்ற நிலையில், ஒருவேளை அவற்றை அங்கே தவறவிட்டிருக்கலாம். தஞ்சம் தேடி வந்த மக்கள் ஒரு மூலையில் இருப்பதைப் பார்த்தார்,'' ஆனால் நாங்கள் உண்மையிலேயே பாஸ்போர்ட்களை தொலைத்துவிட்டோம் என்று யார் நம்புவார்கள் என்று நினைத்தேன். ஒவ்வொரு மணித்துளியும் ஒரு மணிநேரம் போலத் தோன்றியது. கடைசியாக ஒரு நேர்த்தியான ஆள் எங்களை நோக்கி நடந்துவந்தார்... வெளியேற்றத் துறை அதிகாரி வந்து விட்டாரோ என்று எனக்குள் சொல்லிக் கொண்டேன்.''

ஆனால் அங்கே ஏதோ மாய மந்திரம் நடந்தது,'' அவர் என்னை ரொட்டேரியன் என்று அழைத்தார். ரோட்டரி என்ற வார்த்தை காதில் விழுந்ததும் குடும்பத்தோடு இணைந்துவிட்ட தெம்பு வந்தது'' என்று கிம்பர்லி அதைச் சொன்ன போது கைதட்டும் சப்தம் காதைப் பிளந்தது.

இந்த “ஆபத்தில் உதவும் அருமை நண்பன் எங்களை தன் அலுவலக அறைக்கு அழைத்தார். நாங்கள் வேற்று மொழிக்காரர்கள் என்றபோதிலும் எங்களால் தகவல் பரிமாறிக்கொள்ள முடிந்தது. துபாயில் நான் கழித்த நேரம் பற்றிக் கேட்டு, நான் எங்கே பாஸ்போர்ட்களை விட்டிருக்கலாம் என்று ஞாபகப்படுத்திப் பார்க்க உதவினார். பிறகு அவரே எமிரேட்ஸ் விமான நிறுவனத்தை அழைத்தார், அதைத் தொடர்ந்து பல மணிநேரங்கள் வெவ்வேறு நபர்களுக்கு தொலைபேசி அழைப்பு பறந்தது, இறுதியில் எங்கள் பாஸ்போர்ட்கள் கிடைத்துவிட்டன.''

தாயும் மகளும் ரோம் விமான நிலையத்திலேயே அன்றிரவை கழிக்க நேர்ந்தது என்றபோதிலும், “அங்கே நாங்கள் சௌகரியமாக இருப்பதையும், அடுத்த நாள் எங்கள் பாஸ்போர்ட்கள் வந்திறங்குவதையும், மறக்கமுடியாத கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தையும் அவர் உறுதிசெய்தார்.''

நிறைவாக தார்ஃபின்சன் பேசியபோது, ''நாம் தோழர்களாக ஆவதற்கு ரோட்டரி ஏராளமான வழிகளைத் திறந்துவிடுகிறது, வியாபாரம் அல்லது வேறு காரணத்தின் மூலம் நம்மை மற்ற ரொட்டேரியன்களுடன் இணைத்து, உலகளவிலும் தனிப்பட்ட அளவிலும் வாழ்நாள் முழுக்க நண்பர்களாக இருக்க உதவுகிறது'' என்று கூறினார்.■

# முழுவீச்சில் எழுத்தறிவு இயக்கம்

ரஷீதா பகத்

இந்தியாவில் எழுத்தறிவு இல்லாதவர்களே இல்லை என்ற நிலையை உருவாக்கும் நோக்கத்தில் ரோட்டரி தனி இயக்கத்தை தொடங்கிய ஐந்தாறு ஆண்டுகளிலேயே அத்திட்டத்துக்கு அமோக பலன் கிடைத்தது. இதற்காக ரோட்டரி எழுத்தறிவு இயக்கம் 47,000 ஆசிரியர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளித்தது. அவர்கள் மூலம் 70 லட்சம் மாணவர்கள் பயன் பெற்றனர்.

எழுத்தறிவு திட்டத்தைச் செயல்படுத்த மின்னணு கல்விமுறைதான் சிறந்தது என்பதைப் புரிந்துகொண்டு அதற்கு ஏற்றவாறு தொழில்நுட்பம், கற்பித்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்தினோம். சுமார் 15,000 பள்ளிகளில் கணினி கல்வி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. அடுத்து வரும் மூன்றாண்டுகளில் ஒரு லட்சம் பள்ளிகளில் இந்த வசதியை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் எங்கள் நோக்கம் என்றார் ஹாம்பர்க் மாநாட்டுக் கூட்டத்தின் இடையே பேசிய ரோட்டரியின் முன்னாள் இயக்குநரும், ரோட்டரி இந்தியா எழுத்தறிவு இயக்கத்தின் தலைவருமான சேகர் மேத்தா .

எழுத்தறிவு இயக்கம் உருவானதன் பின்னணியையும் அவர் விவரித்தார். கல்யாண் பானர்ஜி ரோட்டரி இண்டர்நேஷனல் தலைவராக இருந்த சமயத்தில், இயக்குநர்கள் குழுவில் நான் இடம்பெற்றிருந்தேன். தெற்காசியாவில் எழுதப்படிக்கத் தெரியாதவர்களே இல்லை என்ற நிலையை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் எழுத்தறிவு இயக்கத்தை தொடங்கினோம். முதலில் இதற்கான ஆய்வுகளை மேற்கொண்டோம். இந்தியாவில் 74 சதவீதம் பேர் கல்வியறிவு பெற்றவர்களாகவும் எஞ்சிய 26 சதவீதம் பேர் எழுத்தறிவு இல்லாதவர்களாக இருப்பதும் தெரியவந்தது. பள்ளிகளில் போதிய ஆசிரியர்கள் இல்லாதது, கல்வி கற்பதில் ஆர்வம் இல்லாமல் இருப்பது, பள்ளி படிப்பை பாதியில் நிறுத்தியது, பெரியவர்கள் பலர் படிப்பறிவில்லாமல் இருப்பதுமே இதற்கு காரணம் என்பது புரிய வந்தது.

ஒரு நாட்டில் உள்ள அனைத்து மக்களும் எழுத்தறிவு பெற்றவர்களாக இருந்தால் அங்கு மோதலுக்கு வழியில்லை, குற்றச்செயல்கள் குறைந்துவிடும், அமைதிக்கு வழிவகுக்கும், வறுமை ஒழிந்து விடும். மேலும் சுகாதாரம் மேம்படும், பன்முக கலாசாரம் அதிகரிக்கும். எல்லாவற்றுக்கும் மேலாக சுயமரியாதை கிடைக்கும், ஜனநாயகம் தழைக்கும் என்பதை நன்கு புரிந்துகொண்ட நாங்கள் அரசியல்வாதிகள், அதிகாரிகள், கல்விச்சேவை புரிந்துவரும் தொண்டு நிறுவனங்கள் ஆகியவர்களுடன் கலந்துபேசி எழுத்தறிவு இயக்கத்தை ஆரம்ப நிலையிலிருந்து தொடங்க முடிவு எடுத்தோம்.

பள்ளிகளுடன் தொடர்புடைய வர்களைச் சந்தித்துப் பேசிய போது மேலும் சில சீர்திருத்தங்கள் செய்ய வேண்டியது தெரியவந்தது. அதாவது சில பள்ளிக் கட்டடங்கள் பாழடைந்த நிலையில் இருந்தன. சில பள்ளிகளில் கழிப்பறை வசதிகளே இல்லை. இன்னும் சில பள்ளிகள் மாணவர்கள்




*RID பரத் பாண்டியா, எழுத்தறிவு திட்டத்தைப் பற்றி மாநாட்டில் உரையாற்றுகிறார். மேடையில் RID கமல் சங்வி, PRID சேகர் மேத்தா PDGs நான்சி பார்பி, ஃபயஸ் கித்வாய், கீதா மனேக் ஆகியோரும் உள்ளனர்.*

கல்வி கற்பதற்கான உபகரணங்கள், உட்காருவதற்கான பெஞ்சுகள், எழுதுவதற்கான மேஜைகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகளே இல்லாமல் இருப்பதும் தெரியவந்தது. உடனடியாக ஆசிரியர்கள் பாடம் சொல்லிக்கொடுப்பதற்கும், மாணவர்கள் அதை கருத்துடன் கேட்பதற்கும் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க தயாரானோம். மாணவர்கள் விரும்பி வந்து கல்வி கற்பதற்கான சூழ்நிலைகளை உருவாக்கினோம்.

நன்கு கற்பிக்கும் திறன்பெற்ற ஆசிரியர்களை அங்கீகரிக்கும் வகையில் அவர்களுக்கு தேச த்தின் வளர்ச்சிக்கு ஆர்வம் காட்டும் ஆசிரியர்கள் விருது வழங்கவும் முடிவு செய்தோம். இத்திட்டத்தின் கீழ் சுமார் 20,000 ஆசிரியர்கள் கௌரவிக்கப் பட்டனர். மாநில அரசுகள் பலவும் இத்திட்டத்தில் தங்களைச் சேர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொண்டனர். இதையடுத்து சிறந்த ஆசிரியர்களுக்கு அந்தந்த மாநில அரசின் சின்னம் பொறிக்கப்பட்ட சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

ரோட்டரியின் கணினிமுறை கல்வித் திட்டத்துக்கு பெரிய அளவில் வரவேற்பு இருப்பதைப் பார்த்த மத்திய அரசும், மகாராஷ்டிரம், குஜராத், பஞ்சாப் உள்ளிட்ட மாநில அரசுகளும் இதில் தங்களையும் இணைத்துக் கொள்ள விரும்பின. அமைச்சர்களும், அதிகாரிகளும் எங்கள் திட்டக்குழுவில் சேர்ந்து பணியாற்ற விருப்பம் தெரிவித்தனர். இதையடுத்து அடுத்த ஐந்து ஆண்டுகளில் இந்தியாவில் அனைத்துப் பள்ளிகளிலும் கணினி கல்வி செயல்பாட்டில் இருப்பதை உறுதிசெய்ய ஒன்றாக பணிபுரிய சபதம் ஏற்றுக்கொண்டோம்.

வயதுவந்தோர் கல்வித் திட்டத்தை செயல்படுத்திய நிலையில் அதிலும் மத்திய, மாநில அரசுகள், ரோட்டரியுடன் இணைந்து செயல்பட விருப்பம் தெரிவித்தன. ஆனால் இதில் சிறு பிரச்னை இருந்தது. பிச்சை க்காரர்களின் குழந்தைகள், வீடுகள் இல்லாமல் தெரு ஓரத்தில் வசி க்கும் குழந்தைகள் உள்ளிட்டோரை பள்ளிக்கு படிக்க அழைத்துவருவது நிஜமாகவே பெரும் பணியாக இருந்தது. ஆனாலும் ரோட்டரி உறுப்பினர்கள், ரோட்டரியுடன் இணைந்து பணியாற்றியவர்களின் கடும் உழைப்பின், முயற்சியால் 35,000-த்துக்கும் மேலான குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பிவைத்தோம்.

சாதாரண பள்ளிகளை, குழந்தைகள் மகிழ்ச்சியுடன் வந்து கல்வி கற்கும் இடமாக மாற்றியமைப்பது எங்களுக்கு புதிய அனுபவமாக இருந்தது. கழிப்பறை இல்லாத அல்லது போது மானதாக இல்லாத பள்ளிகளுக்கு கழிப்பறைகள் கட்டிக்கொடுத்தோம். தரையில் அமர்ந்து படித்த மாணவர் களுக்கு உட்காருவதற்கு பெஞ்சுகளும், எழுதுவதற்கு வசதியாக மேஜைகளும் ஏற்படுத்திக் கொடுத்தோம். சில பள்ளிகளுக்கு நூலகம் ஏற்படுத்தித் தந்தோம். இப்படி 6 மில்லியன் டாலர் (ஒரு டாலர் இந்திய ரூபாயில் 70-க்குச் சமம் என்றால் கணக்கிட்டுக் கொள்ளுங்கள்) செலவில் 2,500 மகிழ்ச்சிப் பள்ளிகளை உருவாக்கி அதன் மூலம் 4 லட்சம் குழந்தைகள் பலன்பெற வைத்தோம். இப்போது இந்த திட்டம் மேலும் விரிவடைந்து அரசு, தொண்டு நிறுவனங்கள், கார்ப்பொரேட் நிறுவனங்கள் என பலரும் ரோட்டரியுடன் இணைந்து செயலாற்ற ஆர்வம் காட்டி வருகின்றனர். போலியோ ஒழிப்புத் திட்டத்தை நாங்கள் வெற்றிகரமாகச் செயல்படுத்தியதால் கார்ப்பொரேட் நிறுவனங்கள் எங்களின் இத்திட்டத்துக்கு தாராளமாக நிதி ஒதுக்கவும் முன்வந்துள்ளனர் என்றார் சேகர் மேத்தா.



## பெண் கல்வியின் முக்கியத்துவம்

மாநாட்டில் பேசிய எழுத்தறிவு திட்டத்தின் தலைமைப் பயிற்சியாளரும் ரோட்டரி இயக்குநருமான பரத் பாண்ட்யா, எழுத்தறிவு பெறுவதில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையே நீண்ட இடைவெளி இருப்பது தமக்கு கவலை அளிப்பதாகக் குறிப்பிட்டார். அபாயகரமானது என்றும் எச்சரித்தார். ஒரு பெண்ணுக்குச் சிறந்த ஆபரணம் கழுத்தில் தங்க நெக்லெஸ் அணிவதோ அல்லது காதில் தோடு அணிவதோ இல்லை. அவர்களுக்கு நல்ல கல்வியைத் தருவதுதான் சிறந்த ஆபரணம் என்று சொல்லுவார்கள். அதுதான் நாங்கள் இந்த திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு முக்கிய காரணம்.

ஆண் குழந்தைகளுக்கு எழுத்தறிவு சொல்லிக்கொடுப்பதில் காட்டும் ஆர்வத்தைவிட பெண் குழந்தைகள் கல்வியில் நாங்கள் அதிக முக்கியத்துவம் தருகிறோம். சிலந்திகள் ஒன்று சேர்ந்து வலை பின்னினால் தாக்க வரும் சிங்கத்தைக்கூட தடுத்து நிறுத்திவிடும் வல்லமை பெற்றது. அதேபோல் நாம் ஒன்றிணைந்து செயல்பட்டால் போலியோ நோய் ஒழிப்பைப்போல், இத்திட்டத்தையும் வெற்றிகரமாக செயல்படுத்த முடியும். எந்த ஒரு திட்டமானாலும் ரோட்டரி உறுப்பினர்களோ அல்லது ரோட்டரி சங்கங்களோ மட்டும் நிறைவேற்றிவிட முடியாது. ரோட்டரியுடன் அனைவரும் இணைந்து செயல்பட்டால் மட்டுமே எழுத்தறிவு இயக்கம் முழுமைபெறுவது சாத்தியமாகும்.

முன்னதாக இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முறையே பயிற்சி தேவை என்பது வலியுறுத்தப்பட்டது. எனவே ரோட்டரி சங்கம், மாவட்டம், மண்டல அளவில் பயிற்சி அளிக்கப்பட்டது. இந்தியா, வங்கதேசம், நேபாளம், பாகிஸ்தான் ஆகிய நாடுகளை உள்ளடக்கிய தெற்காசிய நாடுகளில் மூலை முடுக்கு களில் வாழும் அனைவரும் எழுத்தறிவு பெற வேண்டும் என்பதுதான் எங்கள் குறிக்கோளாகும். அதை நாங்கள் வெற்றிகரமாக செய்து முடிப்போம் என்று பெருமையுடன் குறிப்பிட்டார் பரத் பாண்டியா.

## கற்பித்தல் திட்டத்தில் அமெரிக்காவின் ஒத்துழைப்பு

அமெரிக்காவில் ரோட்டரி மாவட்டம் 7730-ன் முன்னாள் மாவட்ட ஆளுநர் நான்ஸி பார்பி, கற்பித்தல் திட்டத்துடன் நெருங்கிய தொடர்பில் இருந்தார். 20

ஆண்டுகளுக்கு முன் தாம் இந்தியா வந்ததையும், ரோட்டரி இயக்குநர் கமல் சங்வியை நேரில் சந்தித்துப் பேசியதையும் நினைவுகூர்ந்தார். இந்தியாவில் ரோட்டரி மூலம் செயல்படுத்தப்படும் போலியோ ஒழிப்பு, பெண்களுக்கு திறன் பயிற்சி அளிப்பது உள்ளிட்ட பல்வேறு திட்டப் பணிகள் நடந்துவரும் இடங்களுக்கு அழைத்து சென்று ரோட்டரி இயக்குநர் கமல் சிங்வி விளக்கியதை பெருமையுடன் குறிப்பிட்டார்.

இந்தியாவில் ரோட்டரி சங்கத்தினர் ஆற்றிவரும் அரிய சேவைகளைக் கண்டு வியந்த நான், அது முதல் அடிக்கடி இந்தியாவுக்கு வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தேன். அப்படி ஒருமுறை வந்தபோது தான் சேகர் மேத்தாவை சந்தித்தேன். அதைத் தொடர்ந்து நான் அவருடன் இணைந்து இந்தியாவிலும், அமெரிக்காவிலும் ஏழை மக்களுக்குத் தேவையான பல்வேறு திட்டங்களை சர்வதேச நிதியுதவியுடன் செய்ய முன்வந்தோம். எழுத்தறிவித்தல் எனக்குப் பிடித்தமான செயல் என்று சேகர் மேத்தாவுக்கு நன்கு தெரியும் என்பதால் அவருடன் இணைந்து நூலகங்கள் அமைக்க உதவினேன். இதை பலரும் பாராட்டினர்.

அமெரிக்காவில் நான் தொடர்புடைய ரோட்டரி மாவட்ட ஆளுநரையும் இத்திட்டத்தில் இணைய ஏற்பாடு செய்தேன். 10 பள்ளிகளை மகிழ்ச்சிப் பள்ளிகளாக மாற்ற உறுதியெடுத்துக் கொண்டோம். அதில் 7 பள்ளிகள் இப்போது ஹாப்பி ஸ்கூல் மகிழ்ச்சிப் பள்ளிகளாக மாற்றப்பட்டுவிட்டன. கல்வி தான் வெற்றிக்கு முதல்படி. குழந்தைகள் தரமான கல்வியைப் பெறவேண்டும் என்பது தான் எங்கள் லட்சியம். இளம் வயதில் கல்வி கற்பது அமைதிக்கு வழிவகுக்கும் என்பது எனது நம்பிக்கை.

இந்திய ரோட்டரியின் நூற்றாண்டு விழாவை இந்த ஆண்டு கொண்டாடு கிரிக்க இச்சூழ்நிலையில் சர்வதேச அளவில் எங்களால் முடிந்த அளவு நிதியுதவியை அளிக்க தயாராக இருக்கிறோம். இந்தியா வேகமாக முன்னேற வேண்டும் என்பது எனது இதயபூர்வமான கருத்து.

இந்தியாவில் அனைவரும் எழுத்தறிவு பெற்றவர்களாகத் திகழ வேண்டுமானால் அதற்கு கற்பித்தல் திட்டம்தான் சரியான வழி. இது தெற்காசியா முழுவதும் எதிரொலிக்க வேண்டும். ஆப்பிரிக்க நாடுகள் சிலவற்றிலும் இதைச் செயல்படுத்த வேண்டும் என்ற திட்டமும் மனதளவில் உள்ளது. எங்கள் ரோட்டரி மாவட்டத்தின் மூலம் ஏற்கெனவே நைரோபியில் கற்பித்தல் திட்டத்தை செயல்படுத்த சர்வதேச நிதியுதவி கிடைத்துள்ளது என்றார் நான்ஸி பார்பி.

### பாகிஸ்தானில் மகளிர் கல்லூரி

ரோட்டரி தெற்காசியாவின் கூட்டுறவு மற்றும் வளர்ச்சித் திட்டத்தில் பாகிஸ்தானையும் இணைத்துக் கொண்டதற்காக ரோட்டரி முன்னாள் தலைவர் பானர்ஜி, ரோட்டரி முன்னாள் இயக்குநர் மேத்தா ஆகியோருக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாக பாகிஸ்தான் ரோட்டரி மாவட்டம் 3271 முன்னாள் இயக்குநர் ஃபயஸ் கித்வாய் நன்றி தெரிவித்துக் கொண்டார். மிகப்பெரிய நாடான இந்தியா, கற்பித்தல் திட்டத்தை சவாலாக எடுத்துத்துக் கொண்டு வேகமாகவும் வெற்றிகரமாகவும் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் உயர்ந்த நிலையை எட்டியுள்ளதற்கு மேத்தா போன்றவர்கள்தான் காரணம் என்றும் கித்வாய் புகழாரம் சூட்டினார். (ரோட்டரியின் கற்பித்தல் திட்டத்துக்கான ஆய்வுக் கூட்டத்தில் பாகிஸ்தான், வங்கதேசம், நேபாளம் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு ஒருமித்த கருத்துகளைத் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.)

பாகிஸ்தான் எழுத்தறிவு இயக்கத்தின் செயல்பாடுகளை கித்வாய் சுருக்கமாக பின்வருமாறு விவரித்தார்:

நாங்கள் இந்த திட்டத்தை செயல் படுத்த தொடங்கியபோது பல்வேறு சவால்களை சந்திக்க நேர்ந்தது. பாகிஸ்தானின் வடக்குப்பகுதியில் நூற்றுக்கணக்கான பள்ளிக்கட்டடங் கள் அழிக்கப்பட்டிருந்தன. 6 லட்சம் குழந்தைகள் பள்ளிக்கூடம் என்றால் என்னவென்று தெரியாமலே இருந்தனர். ஆரம்பத்தில் அரசுடன் இணைந்து செயல்படுவது என்பது மற்றொரு சவாலாகவே இருந்தது. ஆனால், எங்கள் ரோட்டரி சங்க உறுப்பினர்களும், ரோட்டரி பிரதிநிதிகளும் சற்றும் மனம் தளராமல் சவால்களை சேவையாற்ற கிடைத்த வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்டு முதல் கட்டமாக பெண்களுக்கு என்று தனி கல்லூரி ஒன்றை கட்டிக் கொடுத்தனர். உள்ளூர் நிர்வாகத்துடன் இணைந்து சமூக கலாசாரத் தடைகளால் கல்வி கற்பதை பாதியில் கைவிட்ட பெண்கள் மீண்டும் கல்வி கற்க நாங்கள் வழிசெய்தோம். இதன் மூலம் அவர்கள் கனவு நனவானது. இப்போது அந்தக் கல்லூரியில் 1,200-க்கும் மேலான மாணவிகள் படித்து வருகின்றனர் என்றார்.

### ஆப்பிரிக்காவிலும் வேண்டும்

கென்யா நாட்டில் உள்ள ரோட்டரி மாவட்டம் 9212-ன் முன்னாள் மாவட்ட ஆளுநர் கீதா மனேக், ஆப்பிரிக்க நாடுகளில் எழுத்தறிவு இயக்கத்தை செயல்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். இதேபோன்று பலரும் கற்பித்தல் திட்டத்தை தங்கள் நாடுகளில் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர்.

ஆப்பிரிக்க நாடுகள் பலவற்றில் எழுத்தறிவு இயக்கத்துக்கு தேவை உள்ளது. அங்குள்ள ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொருவிதமான சவால்கள் கொண்டவை. ஆனால், ரோட்டரி இயக்கம் தகுந்த நபர்கள் அல்லது சேவை அமைப்புகளுடன் இணைந்து கடுமையாக உழைத்தால் இது சாத்தியமே. கணினி கல்வி மூலம் ஆப்பிரிக்க நாடுகளில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த முடியும் என்று குறிப்பிட்டார் கீதா மனேக்.

இந்த மாநாட்டில் ரோட்டரி இயக்குநர் கமல் சங்வி, தனது அறிமுக உரையில், மனித இனம் முன்னேற எழுத்தறிவு அவசியம். அதன் மூலம் ஒவ்வொரு ஆண், பெண் மற்றும் குழந்தைகள் தங்களின் முழுமையான ஆற்றலை புரிந்துகொள்ள முடியும் என்று ஐ.நா. சபையின் முன்னாள் பொதுச் செயலர் கோஃபி அன்னான் கூறியதையும் கல்வி என்பது மேற்கத்திய அல்லது கிழக்கத்திய கலாசாரம் அல்ல, கல்வி என்பது கல்விதான் என்று நோபல் பரிசு வென்ற மலாலா யூசுப்ஸாய் கூறிய வார்த்தைகளையும் சுட்டிக்காட்டினார். உண்மை அதுதானே!

புகைப்படங்கள்: ரஷீதா பகத்



# இன்னும் கொஞ்சம் தாராள மனம் கொள்வோம்


நி ஹாவ் ரொட்டேரியன்களே!

ரொட்டரி உலகளாவிய மானியத்திற்கான கோரிக்கைகளின் எண்ணிக்கை அபரிதமாக இருக்கிறது. நமது மானியங்களின் அற்புதமான தாக்கத்தை ரொட்டேரியன்கள் பார்த்து, கனவுத் திட்டப்பணிகளை எடுப்பதற்கு உலகளாவிய மானிய நிதிகளின் ஆற்றலை சாதகமாகப் பயன்படுத்த அவர்கள் விரும்புகிறார்கள்.

ஒரு திட்டப்பணியைத் திட்டமிடும்போது, அதன் நிரந்தரத் தன்மையை மிகைபடுத்துவதே நமது உலகளாவிய மானிய நிதிகளின் முக்கியமான ஒரு அம்சம். ஒரு பிரச்னையை தீர்க்க நாம் ஒன்றிணையும் போது, சும்மா பார்த்து விட்டு போக மாட்டோம். நாம் வாழ்வை மாற்றுகிறோம். நிரந்தரத் தீர்வுகளைக் கொண்டுவருகிறோம். உலகளாவிய மானிய நிதிகளுக்கான விண்ணப்பங்களின் வளர்ச்சி ஒரு அருமையான பிரச்சனை தான்; இது சேவைக்கான ரொட்டேரியன்களின் அர்ப்பணிப்பைக் காட்டுகிறது. ஆனால் உலகளாவிய மானிய நிதிகளை அதிகமாக வழங்க ரோட்டரி பவுண்டேஷனையும் தொடர்ந்து வளர்க்க வேண்டும்.

பேரிடர் ஏற்பட்ட பகுதிகளில் நிவாரணம் வழங்க ரொட்டேரியன்களின் விருப்பத்திற்கு எந்தளவுக்கு நன்றாக உதவி செய்யமுடியும் என்பது தான் மற்றொரு நல்ல பிரச்சனை. நமது பேரிடர் மீட்பு திட்டத்தின் மூலம், ஒரு பேரிடர் ஏற்படும் போது சங்கங்கள் புதிய நிதிகளைப் பெற முடியும் - நீங்கள் அதற்கு நிதி அளித்தால் மட்டுமே. நமது சக ரொட்டேரியன்கள் உடனடியாக மீண்டுவர நாம் உதவி செய்ய முடியும்.

போலியோவை நாம் கிட்டத்தட்ட ஒழித்து விட்டோம். நமது வாழ்க்கையில் நம் அனைவரும் மாபெரும் விஷயங்களைச் செய்திருக்கிறோம். ஆனால் போலியோவை உலகத்தை விட்டே வெளியேற்றும் அந்த கடைசி சொட்டுகளுக்கு நீங்கள் நன்கொடையளிப்பதை நீங்கள் சற்று கற்பனை செய்துபாருங்கள். இதை விட உங்கள் வாழ்வில் மிக அற்புதமான மிக முக்கியமான எதையும் செய்யப்போவதில்லை.



**கேரி C K ஹுவாங்**

TRF அறங்காவலர் தலைவர்



# போலியோ நிதியை ஆதரிப்போம்

எனது சக ரொட்டேரியன்களே!

2018–19ம் ஆண்டில், நம்முடைய அறக்கட்டளையின் பங்களிப்புகள் 21 மில்லியன் டாலர் சாதனையை படைத்துள்ளன, மேலும் நாம் உலகின் 2வது இடத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளோம். மிக முக்கியமானது, உலகில் உள்ள அனைத்து மாவட்டங்களில் RIDகள் 3190 மற்றும் 3141 ஆகியவை முறையே 1வது மற்றும் 2வது இடத்தில் உள்ளன. இந்த இரண்டு மாவட்டங்களின் தலைமையை நான் பாராட்டுகிறேன், நம்முடைய மகத்தான நன்கொடையாளர்களுக்கு நன்றி கூறுகிறேன்.

2019–20 ஆம் ஆண்டில், சவாலான TRF இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன; ஒவ்வொன்றும் சம அளவு முக்கியத் துவம் வாய்ந்தவை என்பதால் தயவுசெய்து எந்தவொரு TRF-ன் நிதிக்கும் பங்களிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். வருடாந்திர நிதிக்கான பங்களிப்புகள் பாதி DDF ஆக மாவட்டத்திற்கு வரும் என்றும், மீதி பாதி உலக நிதிக்கு செல்லும் என்றும் உறுதி செய்கின்றன.

உலக நிதி மிகவும் முக்கியமானது ஆகும், ஏனெனில் அது மனித நேய திட்டங்கள், உதவித் தொகைகள், போன்றவற்றுக்கு தேவையான நிதியை வழங்குகின்றது. அது இன்னும் நன்றாக பெருக வேண்டும். நாம் போலியோவை உலகத்திலிருந்து ஒழிப்பதற்கான தறுவாயில் இருக்கிறோம். நம்முடைய முயற்சிகளுக்கு கேட்ஸ் அறக்கட்டளை ஆதரவளித்து வருகிறது மேலும் ரோட்டரியின் வருடாந்திர இலக்கான $50 மில்லியன் ஆனது கேட்ஸ் அறக் கட்டளையின் $100 மில்லியனால் நிகர் செய்யப்பட்டது.

ஜூன் 2019 ஆரம்பத்தில், ரோட்டரியின் போலியோ நிதி இலக்கை நம்மால் எட்ட முடியவில்லை, ஆனால் பல தனிப்பட்ட தொலைபேசி அழைப்புகளுக்குப் பிறகு $50 மில்லியன் இலக்கை எட்டினோம். ராஜாஸ்ரீ பிர்லா அவர்களிடமிருந்து பெற்ற $1 மில்லியன், ஒரு எஸ்டேட்டிலிருந்து பெற்ற $2.2 மில்லியன் மற்றும் வேறொரு நன்கொடையாளரிடமிருந்து $1 மில்லியன் ஆகியவை நமக்கு கிடைத்தது. நமக்கு ஒவ்வொரு மாவட்டத்திடமிருந்து குறைந்தது 20 சதவீத DDF மற்றும் ஒவ்வொரு சங்கத்திடமிருந்து குறைந்தது, $1,500 போலியோ நிதிக்கு தேவைப்படுகிறது.

மானிய நிதி தொடர்ந்து பெருகி வருகிறது, மேலும் இது நடப்பு ஆண்டிலும் பல பெரிய பங்களிப்புகளை பெறும் என்று நான் நம்புகிறேன்.



**குலாம் வஹன்வதி**

TRF அறங்காவலர்

# இரங்கல்: சுதர்ஷன் அகர்வால் ஒரு ஜாம்பவான்

ராஜேந்திர சாபூ

எப்பேர்பட்ட மனிதர் அவர்! அவரை என்னவென்று சொல்வது, ஒரு நிர்வாக அதிகாரியா, சட்ட அறிஞரா, நிர்வாகியா, கொடைவள்ளலா, செயல்வீரரா, பிச்சைக்காரரா, இலட்சியவாதியா அல்லது ஒரு தொலைநோக்குள்ளவரா? டெல்லி லோதி மயானத்தில் அவரைத் தகனம் செய்யும்போது அனைவரின் கண்களும் தாரைதாரையாக கண்ணீர் வடித்தது. 88 வயதில் இறப்பது என்பது ஒரு நிகழக்கூடிய ஒன்று தான், ஆனால் அநேகமாக டேராடூனில் இருந்து வந்திருந்த ஹிம் ஜோதி பள்ளி மாணவிகள் சுமார் 30 முதல் 40 பேர் இதை உணர்ந்திருக்கவில்லை. ஒவ்வொரு மாணவியும் தங்களின் தந்தை இறந்தது போல தேம்பிக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு சுதர்ஷன் அகர்வால் தான் பெற்றோர் - அனைத்துமாக இருந்தார்.

1974 ஆம் ஆண்டு RC டெல்லி சங்கத்தின் தலைவராக இருந்த சுதர்ஷனை நான் சந்தித்தேன். அப்போது டெல்லியும் சண்டிகரும் ஒரே மாவட்டம் தான். அதுதான் அவருடனான என் பயணத்தின் தொடக்கம்.

அவர் எந்த துறையைத் தேர்வு செய்தாலும் அதில் அவர் புலமை வாய்ந்தவராக இருந்தார், ஆனால் ரோட்டரியின் உச்சியை அடைவது அவரது நோக்கமாக இல்லை. ரோட்டரி திட்டங்களில் இருக்கும்போதும் சரி அல்லது அவர் எடுத்துக்கொண்ட எவ்வித பிரச்சனையானாலும் பேரார்வத்துடனும் ஊக்கத்துடனும் செயல்படுவார்.

அப்போது ரோட்டரி உலகம் போலியோபிளஸ் திட்டத்தில் முழுமூச்சாக அர்ப்பணித்துக் கொண்டிருந்த நேரம் மற்றும் போலியோவை ஒழிக்க சுதர்ஷன் முழுமனதுடன் ஈடுபட்டார். அப்போது அவர் இந்திய பாராளுமன்றத்தின் மேல்சபையான ராஜ்யசபா பொதுச் செயலாளராக இருந்தார்; போலியோ ஒழிப்பில் எவ்வித முன்னேற்றத்தையும் இந்தியா காட்டவில்லை. இந்திய அரசாங்கத்திலும் பாராளுமன்றத்திலும் உள்ள மூத்த அதிகாரிகளுடன் கொண்ட தன் நட்பினை பயன்படுத்தினார், மேலும் ராஜ்யசபாவில் உள்ள செயல்படும் உறுப்பினர்கள் சிலரும்,'' போலியோ ஒழிப்புத் திட்டத்தில் ஏன் மெத்தனப்போக்கு?'' என்று கேள்வி எழுப்பினர். இதன் விளைவாக, சுகாதாரத் துறையை கையில் வைத்திருந்த பிரதமர் ஒரு புதிய உத்தி உருவாக்கப்படும் என்று உறுதியளித்தார். அந்த நேரத்தில், டெல்லி அரசாங்கத்தின் சுகாதாரத் துறை அமைச்சரான Dr ஹர்ஷ் வர்தன், NID (தேசிய சொட்டுமருந்து தினம்) உத்தியைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தார். சுதர்ஷன் அவரைச் சந்தித்தார், இருவரும் இணைந்தனர், அதாவது ரோட்டரியும் டெல்லி அரசாங்கமும் கைகோர்த்தது. இது தான் ஒட்டுமொத்த தேசத்திற்கான NID செயல்பாட்டின் தொடக்கம். போலியோ இல்லாத இந்தியா திட்டத்தின் முன்னோடிகளில் ஒருவர் என்று சுதர்ஷனை நாம் நிஜமாகவே அழைக்கலாம்.

ராஜ்யசபாவின் பொதுச்செயலாளர் பதவியிலிருந்து ஒய்வு பெற்றபின்பு, உச்சநீதிமன்ற நீதிபதிக்கு இணையான அந்தஸ்து கொண்ட தேசிய மனித உரிமை ஆணையத்தின் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். அவரது பதவி காலத்தில், ரோட்டரி இரத்தவங்கியை



*மைக்ரோசாஃப்ட் நிறுவனர் பில் கேட்ஸ்,* PRID OP *வைஷ்,* PRID *சுதர்ஷன் அகர்வால் மற்றும்* PRIP *இராஜேந்திர சாபூ.*

டெல்லியில் நிறுவினார், இது 2002 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் தொடங்கப்பட்டது. இன்றையதினம் வரை இந்த தேசத்தில் இந்த இரத்தவங்கி சிறப்பான ஒன்று என்று கருதப்படுகிறது, ரோட்டரியைப் பிரபலப்படுத்துவதுடன் மனிதநேய சேவைகளைச் செய்யும் அவரது தீர்மானத்திற்கு ஒரு நினைவுச் சின்னமாக இது நிலைகொள்கிறது.

2003 ஆம் ஆண்டு ஜனவரி 7 அன்று தான் தொலைநோக்கு, இலட்சியம் மற்றும் செயல் போன்றவற்றுடன் சுதர்ஷனின் படைப்புத்திறன் உச்சத்தை அடைந்தது, உத்ராஞ்சல் (இப்போது உத்தரகண்ட்) மாநில ஆளுநராகப் பதவியேற்க டெல்லியிலிருந்து டேராடூனுக்கு தன் மனைவி உஷா மற்றும் நண்பர்களுடன் அவர் இரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தார். இரயிலில் தன்னுடைய தொலைநோக்குத் திட்டத்தை தன் நண்பர்களுடனும், சண்டிகரில் இருந்து டேராடூனுக்கு வந்துசேர்ந்த என்னிடமும் பகிர்ந்தார். அவர் ரூ.25 இலட்ச நிதியை அறிவிக்க விரும்பினார், இதிலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு



திறமையுள்ள மாணவர்களுக்கு குறிப்பாக உத்திராஞ்சல் மாநிலத்தைச் சேர்ந்த பெண்களின் உயர் தொழில்நுட்பக் கல்விக்காகப் பயன்படுத்தப்படும். அவருடைய நண்பர்களிடமிருந்து ரூ.25 இலட்ச த்தைத் திரட்டினார், ஒவ்வொருவரும் தலா ரூ.1 இலட்சத்தை நன்கொடை யளித்தனர். பதவியேற்பு நடந்த உடனே அவர் இதை அறிவித்து, அந்த மாநில நலனுக்காகத் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். இப்படித் தான் கல்விக்காக ஹிம் ஜோதி ஸ்தாபனம் தொடங்கப்பட்டது, மேலும் இதன் இன்றைய மதிப்பு சுமார் ரூ.40 கோடி. மிகவும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த 280 மாணவிகள் இப்பள்ளியில் படிக்கிறார்கள், ஒவ்வொரு ஆண்டும் 35 திறமையான மாணவிகளை உருவாக்குகிறது, அவர்களில் பெரும்பாலோனோர் உயர்கல்வியையும் தொழில் திறன்களையும் அடைகிறார்கள். மேலும், ஒரு தொழிற்பயிற்சி மையம் பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பத்தைச் சேர்ந்த சுமார் 100 மாணவர்களைத் தேர்ந்தெடுத்து 6 மாத பயிற்சியின் மூலம் பல்வேறு திறன்களை வழங்குகிறது. அவர்கள் அனைவரும் பணியில் அமர்கிறார்கள் அல்லது தொழில் முனைவோர்களாக மாறுகிறார்கள்.

சுதர்ஷன் தன்னை ஒரு "தொழில் முறை பிச்சைக்காரன்" என்று அழைத்துக்கொள்வார், எந்தவிதமான சேவையை அவர் எடுத்துக் கொண்டாலும் அதைச் செயல்படுத்துவதற்கான நிதிகளைத் திரட்டும் சாமர்த்தியம் அவரிடம் இருந்தது. உண்மையிலேயே பணம் ஒரு முக்கிய மூலம் தான் ஆனால் பண்பும் நம்பிக்கையும் தான் அவர் பின்பற்றிய மரபு.'' மனித குலத்துக் கான சேவை அறக்கட்டளையின்'' ஸ்தாபன அறங்காவலர்களில் அவரும் ஒருவர், இதன் மூலம் ஊழலுக்கு எதிராக போராடுபவர்களுக்கு ஊக்கமும் அங்கீகாரமும் கொடுத்தார். இதில் முதன் முதலில் அங்கீகாரம் பெற்றவர் அன்னா ஹசாரே தான், அப்போது அவர் இந்தளவுக்குப் பிரபலமானவர் இல்லை.

மறைந்த இந்த முன்னாள் RI இயக்குனருக்கு ரோட்டரியின்'' நான்கு வழி சோதனை'' விருப்பமான ஒன்று, உத்தராஞ்சல் மாநில ஆளுநராக மரண தண்டனைக்கான கருணை மனு மீது முடிவு எடுக்கும்போது, அவர் இந்த நான்கு வழிச் சோதனையை பயன்படுத்தி எடுத்த முடிவினை மாநில அரசுக்குப் பரிந்துரை செய்ததாக என்னிடம் ஒருமுறை கூறினார். சுதந்திர தினம் அல்லது குடியரசு தின உரைகளிலோ அல்லது செய்திகளிலோ நான்கு வழிச் சோதனை மற்றும் ரோட்டரியின் கொள்கைகளை அவர் மேற்கோள் காட்டுவார்.

ஒரு சாமானியனுக்கு இருக்கும் சில பழக்கங்களும் இந்த அற்புதமான வரிடம் உண்டு, பயணம் செய்கையில் ஷாப்பிங் செய்வது அவருக்கு ரொம்ப பிடிக்கும். ஒருமுறை வங்கதேசத்தில் தாகாவில் நாங்கள் இருந்த போது, என்னை வற்புறுத்தி சந்தைக்கு அழைத்துச் சென்றார். அவர் வாங்கியதைப் பார்க்கையில் எனக்கு ஆச்சர்யமாக இருந்தது! வேறொன்றும் இல்லை, பீங்கானால் செய்யப்பட்ட தேநீர் சாமான்கள்! ஆனால் அவர் தன் மனைவி உஷா மீது பயம் கொண்டிருந்தார், காரணம் இந்த வீட்டில் வைக்க இடம் இல்லை என்று எப்போதும் அவர் சொல்வார். நாங்கள் டெல்லிக்கு திரும்பியபோது, பேக்கிங் செய்த தேநீர் சாமான்களை காரிலேயே இருக்கட்டும் மனைவியிடம் (உஷா) சொல்லவேண்டாம் என்று தன் டிரைவரைக் கேட்டுக்கொண்டார், அடுத்த நாள் காலை அதை அலுவலகத்திற்கு எடுத்துச் சென்றார். பெரும்பாலான நேரம் அவர் வாங்குவதையெல்லாம் பரிசுகளாக கொடுத்து விடுவார். தானம் செய்வது என்பது அவர் பழக்கம்,'' பெறுவதை விட அதிகமாகக் கொடுக்கவேண்டும்'' என்று எப்போதும் சொல்வார்.

பிரபலமான நாடக ஆசிரியரும் நிருபருமான டக்லஸ் வில்லியம் ஜெரால்ட்,'' அவர் இரக்கமும் கருணையும் கொண்டவர் அதுதான் அவரது தவறான ஆர்வம், வாத்து மழையில் நனைகிறதே என்று சொல்லி அதற்குக் குடை பிடிப்பார்'' என்று எழுதினார். சுதர்ஷனின் இயல்பு மற்றும் நடவடிக்கைக்கு இது அட்சர சுத்தமாகப் பொருந்தும்.

இதன் ஆசிரியர் ஒரு முன்னாள் RI தலைவர்.

# என்றும் நினைவிலிருக்கும் அகர்வாலின் சாதனைகள்

ரஷீதா பகத்

2014ம் ஆண்டு ரோட்டரி நியூஸ் இதழின் ஆசிரியராக சேர்ந்த உடனே முன்னாள் RI இயக்குனர் சுதர்ஷன் அகர்வாலிடமிருந்து நேர்த்தியான கடித முகப்பு கொண்ட ஒரு கடிதம் எனக்கு வந்தது. அந்த எழுத்து நடை, அதனுடைய நயமானத் தொனியும் தோரணையும் என்னை கவர்ந்திழுத்தது, மேலும் இந்தக் கடிதம் அதை எழுதியவரின் திறமைக்கு சாட்சியாக இருந்தது. நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு சென்னையில் மெட்ராஸ் ரோட்டரி சங்க கூட்டத்தின் செய்திகளைச் சேகரிக்க இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழில் ஒரு இளம் நிருபராக ரோட்டரிக்குச் சென்ற போது, என் குழுவினரிடம் கேட்டேன் யார் அவர் என்று.

இப்போதும் அவரைப் பற்றி கேட்கையில் அவர் உத்தரகண்ட் மாநில முன்னாள் கவர்னர், ராஜ்யசபாவின் முன்னாள் பொதுச் செயலாளர் மற்றும் மிகுந்த செல்வாக்குமிக்கவர் என்றும் ஒரு சக ஊழியர் பெருமதிப்புடன் கூறினார். இந்தியாவில் உள்ள பழம்பெரும் முன்னாள் இயக்குனர் களில் அவரும் ஒருவர். "ஒருமுறை தரிசனத்திற்காக கேதார்நாத்திற்கு நாங்கள் சென்ற போது, அவரின் உதவியை நாடினோம், எங்களுக்காக அற்புதமான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். நீண்ட வரிசையில் நாங்கள் காத்திருக்காமல் அருமையான தரிசனத்தைப் பெற்றோம்,'' என்று அவர் தன் நினைவலைகளை நன்றியுடன் பகிர்ந்துகொண்டார்.

டேராடூனில் உள்ள ஹிம் ஜோதி பள்ளியைப் பார்வையிட வருமாறு என்னை அந்தக் கடிதத்தில் அகர்வால் கேட்டுக்கொண்டார், உத்தரகண்ட் மாநிலத்தின் மலைப்பிராந்தியத்தில் உள்ள மிகவும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த சிறுமிகளுக்காக அவர் அமைத்திருக்கிறார். அதற்கான வாய்ப்பு அடுத்த மாதமே வந்தது, முந்தைய ஆண்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கர்வால் ஹிமாலயா பகுதியில் சேதமடைந்த பள்ளிகளைச் சீரமைப்பதில் PRID Y P தாஸ் அவர்களின் தலைமையில் ரோட்டரி செய்திருந்த குறிப்பிடத்தக்க பணியினைப் பார்வையிட சென்ற போது இதையும் சேர்த்துக்கொண்டேன்.

ஹிம் ஜோதி பள்ளியில் ஒருநாள் முழுவதும் இருந்து, அங்கிருக்கும் மாணவிகளுடன் கலந்துரையாடியது எனக்கு
ஆச்சர்யம் நிறைந்ததாக இருந்தது. அட்சர சுத்தமாக அவர்கள் ஆங்கிலத்தில் பேசியது, ஷேக்ஸ்பியர் நாடகத்திலிருந்து ஒரு காட்சியை நடித்துக்காட்டும் போது வேகமாக பேசிய வசனங்கள் போன்றவற்றைப் பார்க்கும்போது, சாதாரண குடும்பத் தைச் சேர்ந்த இந்த குழந்தைகளின் உருமாற்றத்தை பார்த்து வியந்தேன், இதற்கெல்லாம் தனி ஒருவனின் இலட்சியமும் இரக்க குணமும் தான் காரணம். அந்த மாணவிகள் எனக்காகப் பாடினார்கள், எனக்காக ஆடினார்கள், என்னிடம் பேசினார்கள் மற்றும் என்னுடன் சேர்ந்து சாப் பிட்டார்கள், இவையெல்லாம் மாபெரும் கல்வி உங்களுக்கு வழங்கக்கூடிய தன்னம்பிக்கை மூலம் சாத்தியம்.

முன்னாள் RI இயக்குனராக இருந்த அகர்வாலை கடந்த சில வருடங்களாக நான் சந்தித்தேன், அப்போது அவர் ரோட்டரி நியூஸ் அறக்கட்டளையின் அறங்காவலர்களில் ஒருவராக இருந்தார், இந்த அமைப்பு தான் இந்த மாத இதழை வெளியிடுகிறது, மேலும் மண்டல மற்றும் எழுத்தறிவு உச்சி மாநாடுகள் போன்ற பல்வேறு ரோட்டரி நிகழ்ச்சி




PRID *அகர்வால் இலங்கையில் சுனாமியால் அவதியுற்றோருக்கு உதவ* PRIP K R *ரவீந்திரனிடம் காசோலை வழங்குகிறார்.*




PRID *அகர்வால், முன்னாள் இந்திய பிரதமர்* I K *குஜரால்,* PRID OP *வைஷ்,* PRIP *வில்ஃப் வில்கின்சன், முன்னாள் இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா,* PRIP *கல்யாண் பானர்ஜீ மற்றும்* PRID *அஷோக் மகாஜனுடன்.*

களை நடத்துகிறது. மென்மை, பரிவு, பாசம் மற்றும் தோழமை போன்றவற்றுடன் நகைச்சுவையையும் கலந்து பேசுவதை எப்போதும் பார்த்திருக்கிறேன். இந்திய ரோட்டரி குழுமத்திற்கு இது பேரிழப்பு என்பதை சமூக ஊடகமெங்கிலும் பொங்கி வழியும் தன்னிச்சையான அஞ்சலிகள் மற்றும் மூத்த ரோட்டரி தலைவர்களிடமிருந்து வரும் இரங்கல்கள் போன்றவற்றின் மூலம் தெரிந்துகொள்ளலாம்.

### குழு அமைப்பதில் கெட்டிக்காரர்

முன்னாள் RI தலைவர் கல்யாண் பானர்ஜி பேசுகையில், "உத்தராஞ்சல் மாநில கவர்னராகவும் ராஜ்யசபா செயலாளராகவும் அவர் இருந்ததால், அவருடைய தொடர்புகள் மற்றும் அவருடைய மாபெரும் செல்வாக்கைப் பற்றியுமே கிட்டத்தட்ட அனைவரும் பேசுகிறார்கள். டெல்லி இரத்த வங்கியை எதுவுமில்லாமலே தொடங்கி நன்றாக செயல்படுத்தினார். அவருக்கு செல்வாக்கு இருந்தது அதனால் நிறைய நபர்களிடமிருந்து உதவி பெறலாம் என்று மக்கள் சொல்கிறார்கள். ஆனால் நல்ல விஷயங்களுக்கு மட்டுமே தன்னுடைய செல்வாக்கு மற்றும் ஆதரவினை எப்போதும் பயன்படுத்தினார் என்பது தான் முக்கியம்.

PRIP K R ரவீந்திரன், தான் சங்கத்தின் தலைவராக இருந்தபோது பிலாடெல்ஃபியா மாநாட்டில் முதல் முறையாக அகர்வாலைச் சந்தித்த தருணத்தை தன் நினைவோடையில் இருந்து பேசுகையில், "வானதியை ஒரு பட்டுப் புடவையில் பார்த்தவுடன் நாங்கள் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் என்று எண்ணிக்கொண்டு, எங்களுடன் பேசினார். நாங்கள் இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்று கூறியபோது, உடனே அன்று மாலையில் தான் நடத்தும் ஒரு வரவேற்பு நிகழ்ச்சிக்கு தன்னுடன் வருமாறு எங்களுக்கு அழைப்பு விடுத்தார்.''

### தோழமை கொண்ட உபசரிப்பாளர்கள்

ரவீந்திரன் DG-ஆக பதவி பெற்றபோது அகர்வால் அவர்களைப் பற்றி நன்றாக அறியும் வாய்ப்பினைப் பெற்றார், "அவருடைய நட்பினைக் கொண்டாடினேன், அவருடைய வீட்டில் தங்கி அவரின் விருந்தோம்பலில் திளைத்திருந்தேன். சுதர்ஷன் மற்றும் உஷா அகர்வால் இருவரும் தோழமை கொண்ட உபசரிப்பாளர்கள்.

சண்டிகர் ஸ்தாபனத்திற்குப் பிறகு, நான் PDG ஆக இருந்தபோது இலங்கையைச் சேர்ந்த அனைத்து முன்னாள் ஆளுநர்களை நைனிதாலில் இரண்டு நாள்கள் அவருடனும் உஷாவுடனும் தங்குவதற்கு அழைத்தார். ஒரு மாநிலத்தின் ஆளுநரும் குமாயின் குன்றுகளில் உள்ள ஸ்காட்லாந்து அரண்மனையின் தலைவருமான அவர் எங்களை உபசரித்தது எங்கள் வாழ்வில் மறக்கமுடியாத ஒரு அனுபவம், என்று தெரிவித்தார்.

அகர்வாலின் தோழமையும் இதமான உபசரிப்பையும் குறித்து பானர்ஜி வெளிப்படுத்துகையில், ராஜ்யசபாவில் தன் அமைப்பிலோ அல்லது டெல்லியில் தன் இல்லத்திலோ, தான் இந்த பதவியில் இருக்கிறேன் என்ற அதிகார போதை அவரிடம் இல்லை என்று கூறினார். ராஜ்யசபா பொதுச்செயலாளராக இருந்தபோது, அரசியல் கட்சிகள் என்ற பாகுபாட்டையும் தாண்டி MP-களால் மிகவும் மதிக்கப்பட்டவர், மேலும் அவர் பரிவுள்ளம் கொண்ட உபசரிப்பாளர். "நீங்கள் பாராளுமன்றத்திற்கு எந்த நேரத்தில் சென்றாலும் அவர் உங்களை உற்சாகமாக வரவேற்பார்.

அவர் அவருடைய அறையில் இல்லாவிட்டாலும் கூட, அவர் வரும் வரை அவருடைய ஊழியர்கள் உங்களை உட்கார வைத்து உங்களுக்குத் தேநீர் தந்து உபசரிப் பார்கள். மற்ற ரொட்டேரியனிடம் எப்படி பேசுவாரோ அதே போலத்தான் உங்களிடம் பேசுவார். ராஜ்யசபாவின் பொதுச்செயலாளர் என்பது போல நடந்துகொள்ளமாட்டார்.

"ஜாம்பவான்'' என்று அகர்வாலின் தாராள குணத்தை விவரித்து, ரவீந்திரன் பேசுகையில் "உடனடியாக கொடுக்கும் குணம், பல்வேறு பிரச்சனைகளை சமாளிக்கும் வேகம் மற்றும் உடனடியாக மற்றவரின் உணர்வுகளைப் புரிந்துகொள்வது மற்றும் யாரோ ஒருவர் அவரிடம் கொண்டுவந்த முழுவதும் சம்பந்தமே இல்லாத ஒரு சமூகத்திற்கு உதவி செய்வது போன்ற குணநலன்களைக் கொண்டவர்.'' 2004 ஆம் ஆண்டு இலங்கை சுனாமி தாக்குதலால் கடுமையாகப் பாதிக்கப்பட்டபோது, கொழும்பு இன்ஸ்டிடியூட்டில் உள்ள மேடையில் இருந்து உடனடியாக அவர் ஒரு மில்லியன் ரூபாயை நன்கொடையளித்தார். அவர் ஏற்கனவே ஒரு காசோலையுடன் தயாராக வந்து எங்களை ஆச்சர்யப் படுத்தினார்,'' என்று கூறினார்.

### மனிதருள் மாணிக்கம்

அகர்வாலுக்கு அஞ்சலி செலுத்தி முன்னாள் RI இயக்குனர் சுஷில் குப்தா பேசுகையில், "அவர் ஒரு அருமையான ரொட்டேரியன் மட்டுமல்ல ஒரு மகத்துவமான மனிதரும் கூட. அவரை எனக்கு 40 ஆண்டுகளுக்கு மேலாகத் தெரியும், அத்துடன் என் ரோட்டரி பயணத்தில் எனக்கு மாபெரும் உதவியாக இருந்து கொண்டிருந்தார். அவர் மனிதருள் மாணிக்கம்; எப்போதும் சிரித்த முகத்துடன் இருந்து, எப்போதும் புதுமையான யோசனைகளுடன் சேவை செய்யத் தயாராக இருப்பார்.

அன்னாரின் மரணம் "ரோட்டரிக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த மனித இனத்திற்கே மாபெரும் இழப்பு'' என்று கூறினார். முக்கியமான பிரச்சனைகளிலிருந்து நட்பினை வேறுபடுத்திப் பார்க்கும் அவரது அரிதான இயல்பை குறித்து பேசு கையில், 2009 ஆம் ஆண்டில் நடந்த நிகழ்ச்சியை நினைவுகூறுகிறார், சுதர்ஷன் இயக்குனராக இருந்த RI மேற்குழு தன்னையும் சேர்த்து அகர்வாலின் மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து முன்னாள் அலுவலர்களை எச்சரித்தது, "அந்த மகிழ்வற்ற சூழ்நிலைக்காக எனக்கு ஆதரவாக இருந்தார்.'' பிறகு ரவீந்திரன் அவருக்கு ஃபோன் செய்து, "என் மீது மிகுந்த கோபத்தில் இருப்பார் என்று தெரிந்தாலும் கூட, அவரைத் தனிப்பட்ட முறையில் சந்திப்பது எனது பொறுப்பு என நினைத்தேன்.''

ஒரு முன்னேற்பாடாக, "தனது உடன்பிறப்பு போலவே இருந்த அமரர் PRID OP வைஷ் உடன் சென்றார்.

### வசைமாரி பொழிந்தது!

சுதர்ஷன் என்னை அன்புடன் காரில் ஏற்றிக்கொண்டு தனது அலுவலகத்தின் தனியறைக்குச் சென்று ஈவிரக்கமில்லாமல் என்னைத் திட்டித்தீர்த்தார். என் வாழ்விலேயே நான் அதுவரை கேட்டிருக்காத வசைமொழிகள்! ஆனால் சுதர்ஷன் என்பதால் மட்டுமே அவரை எதிர்த்து மறுவார்த்தை கூட பேசாமல் நான் கேட்டுக்கொண்டேன். அந்தத் தருணத்தை நான் கிட்டத்தட்ட கொண்டாடினேன் என்று சொல்வேன், என் பள்ளி நாட்களில் நான் செய்த எதற்கோ என் அப்பா என்னைத் திட்டியது போல இருந்தது.''

ஆனால் கோபம் அத்தனையும் கரைந்தபிறகு, பழையபடி அவர் தன் சுயரூபத்திற்கு மாறி, "உள்ளார்ந்த பரிவுடன் என்னை நடத்தினார். பிறகு பொறுமையுடன் நான் சொல்வதைக் கேட்டுக்கொண்டு, அந்த மாதிரி ஒரு சூழலில் அப்படி நடந்துகொண்டது அவசியம் தான் என்று அவரே ஒப்புக்கொண்டார்.''

RI இயக்குனராக இருக்கும்போது அவர் அரிதாகவே தனிநபர் திட்டப்பணிகளைப் பார்வையிடுவார், ஆனால் ஹிம் ஜோதி பள்ளி மட்டும் இதற்கு விதிவிலக்கு, ஒவ்வொரு செங்கலும் ஒவ்வொரு தூணும் அகர்வால் கண்முன்னே கட்டிடமாக மாறியது. நலிவடைந்த பின்னணியைச் சேர்ந்த சிறுமி களுக்கான நடத்தப் படும் ஒரு பிரமாதமான பள்ளி.

கட்டாயம், அவரது பிரிவு ஒரு இழப்புதான், ஆனால் அன்னாரின் ஆன்மா என்றும் நிலைத்திருக்கும், அந்தப் பள்ளியிலிருந்து படித்து வெளிவரும் ஒவ்வொரு குழந்தையிடம் அவரின் ஆன்மா நிறைந்திருக்கும். எப்பேர்பட்ட ஒரு ஜாம்பவான் அவர்!''

PRID *சுஷில் குப்தா* PRID *அகர்வாலுடன்.*



வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

# RI தலைவரிடமிருந்து சேவை விருது பெற்ற ரொட்டேரியன்




*DG ஜமீர் பாஷா, PDG RVN கண்ணன், சரளா கண்ணன் மற்றும் DGE AL சொக்கலிங்கம் Rtn R ஸ்ரீனிவாசனிற்கு விருது வழங்குகின்றனர்.*

DG RVN கண்ணன் (2018-19) அவர்களின் பரிந்துரையின் பேரில், ரொட்டேரியன் R ஸ்ரீனிவாசன் அவர்களுக்கு கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக RID 3000 சங்கத்திற்கு அவர் அளித்த பங்களிப்புகளைப் பாராட்டி RI-இன் சேவைப்பிரிவுகள் விருது வழங்கப்பட்டது.

ஒரு விஷேசமான ரோட்டரி பின் கொண்ட கவர்ச்சியான பதக்கத்தை ஸ்ரீனிவாசனுக்கு RI தலைவர் பேரி ராஸின் (2018-19) சார்பாக கண்ணன் வழங்கினார், மதுரையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் DG Dr A ஜமீர் பாஷா, DGE AL சொக்கலிங்கம் மற்றும் மாவட்டத்தின் இதர தலைவர்கள் கலந்து கொண்டனர்.

1977-78 ஆம் ஆண்டு ஸ்ரீனிவாசன் RC மதுரை வெஸ்ட் சங்கத்தில் இணைந்தார், பிறகு 1980-81 ஆம் ஆண்டில் RC மதுரை மிட்டவுண் சங்கத்தின் ஸ்தாபக உறுப்பினராக மாறினார். தனது பணிக்காலத்தில் சங்கத் தலைவர், மாவட்ட செயலாளர், மாவட்ட மாநாட்டுச் செயலாளர் மற்றும் மற்றவர்களுடன் சேர்த்து ஜப்பான் ஒசகாவுக்கான GSE தலைவர் உட்பட பல்வேறு பதவிகளில் பணியாற்றினார். TVS குழும நிறுவனத்தின் மூத்த அலுவலராக இருந்த ஸ்ரீனிவாசன், இப்போது மதுரையில் உள்ள டயர் உற்பத்தி நிறுவனமான TVS ஸ்ரீசக்ரா நிறுவனத்தின் ஆலோசகராக இருக்கிறார்.

அந்த விருதுப்பட்டையில், "இரக்க குணம் கொண்ட உற்சாகம் மற்றும் சேவைக்கான அர்ப்பணிப்பு போன்றவற்றின் மூலம், சமுதாயத்திற்கு ரோட்டரி வழங்கும் சிறந்தவற்றை இவர் வெளிப்படுத்துகிறார்.'' தனது செய்தியில் RI தலைவர் பேரி ராஸின் (2018-19), "ஒவ்வொரு சேவைப்பிரிவு களில் தனித்துவமான முயற்சி களுக்காக'' அவருக்கு இந்த விருது வழங்கப்படுகிறது என்றார்.■

# கொல்கத்தா பள்ளிக்கு புதிய வசதிகள்

ரோட்டரி செய்திக்குழு

RC சந்தன்நகர் RID 3291 சங்கம் தனது WinS திட்டப் பணியின் அங்கமாக, மத்திய GST மற்றும் மத்திய சுங்கவரித் துறைகளுடன் இணைந்து, ஹூக்ளி மாவட்டத்தில் பத்ரேஷ்வரில் உள்ள அரவிந்த வித்யாபித் பள்ளியில் கழிவறைக் கட்டிடங்களைக் கட்டியுள்ளது.

வருமான வரித்துறை ஆணையர் தேவேந்திர நாக்வெங்கர் இப்பள்ளியில் புதிய குடிநீர் மற்றும் கழிவறை வசதிகளைத் திறந்துவைத்தார்.




*சங்கத்தினர் ஒரு பள்ளிக்கு ஈ-லேர்னிங் உபகரணங்களை வழங்குகின்றனர்.*

Dr சித்தல் பிரசாத் கோஷ் ஆதர்ஷ் மேல் நிலைப்பள்ளி மற்றும் இந்துமதி பெண்கள் உயர்நிலைப்பள்ளி போன்ற மற்ற இரு பள்ளிகளில் வகுப்பறைக் கல்வியை மேம்படுத்த ஈ-லேர்னிங் உபகரணங்களை ரொட்டேரியன்கள் வழங்கினர். பள்ளி செல்லும் ஏழைக் குழந்தைகளுக்கு புத்தகங்கள் மற்றும் சீருடைகளை வாங்க ஆண்டுதோறும் ரூ.5,000 நிதியுதவியை இந்த சங்கம் வழங்குகிறது. ■

# இருளிலிருந்து
# வெளிச்சத்துக்கு வாருங்கள்!

ரஷீதா பகத்



*கடந்த ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற ரோட்டராக்ட் மாநாட்டில் RI தலைவர் பாரி ரஸ்ஸின், எஸ்தர் மற்றும் DRR கிறிஸ் வெல்ஸ், RIBIன் ஜிம் டேவிஸ் மற்றும் RID ப்ரையன் ஸ்டோயல் அவர்களுடன்.*



ஹாம்பர்க் மாநாட்டின் முக்கிய அம்சமே ரோட்டரி இயக்கத்தில் இளைஞர்களை ஊக்குவிக்க வேண்டும். அவர்களிடம் தலைமை பொறுப்பை ஒப்படைத்து அவர்களின் திறமைகள் வெளிப்படச் செய்ய வேண்டும். அவர்களிடம் புதிய சக்தியையும் உத்வேகத்தையும் ஏற்படுத்த வேண்டும், உலகளவில் மாற்றத்தையும் முன்னேற்றத்தையும் ஏற்படுத்த வேண்டும் என்பதுதான். ரோட்டரி உறுப்பினர்களின் சராசரி வயதை குறைக்க வேண்டும் என்ற நியாயமான காரணமும் இதில் அடங்கும்.

இந்த மாநாட்டில் கட்டுரையாற்ற இங்கிலாந்தில் உள்ள மார்க்கெட் ஹார்பரோ ரோட்டரி சங்கத்தின் நிறுவனரும் முன்னாள் தலைவரும், ரோட்டரி சர்வதேச மாவட்டம் 1070-ன் தற்போதைய கௌரவத் தலைவருமான கிறிஸ் வெல்ஸ், ரோட்டரி தலைவர் பேரி ரஸ்ஸினால் அழைக்கப்பட்டிருந்தார்.

பொதுவாக இதுபோன்ற மாநாட்டில் கிறிஸ் வெல்ஸ் அதிகம் பேசியதில்லை என்றாலும் அன்று அவர் பேசியது ரோட்டரி பிரிதிநிதிகள் அனைவரையும் கவரும் வகையில் இருந்தது. முதலில் அவர் சற்று பதற்றத்துடன் இருந்தாலும் பின்னர் சுதாரித்துக்கொண்டு மாநாட்டில் பேசினார். இதன் மூலம் அவரது நீண்டநாள் கனவு நிறைவேறியது.

கிறிஸ் வெல்ஸ் பேசுவதற்கான உரையை தயாரித்துக் கொடுத்தது மார்க்கெட் ஹார்பரோ ரோட்டரி சங்கத்தைச் சேர்நதவரும் தற்போது RIBI ரோட்டரி தூதராகச் செயல்படுபவருமான ஜிம் டேவிஸ் என்பவர்தான். 2015-ஆம் ஆண்டு கிறிஸ் வெல்ஸ் ரோட்டரி இயக்கத்தில் சேர முக்கிய காரணகர்த்தாவாக இருந்தவரும் இவர்தான்.

---

*உலகம் முன்னேற வேண்டும் என்ற குறிக்கோளுடன் ஒன்றிணைந்து செயல்பட்டால் எதையும் சாதிக்கலாம்.*

---



ரஷீதா பகத்




மாநாட்டு மேடையில் கிறிஸ் வெல்ஸ் கையில் மைக்கை பிடித்துக் கொண்டு இங்கும் அங்கும் நடந்தவாறும், துள்ளிக் குதித்தபடியும் உற்சாகத்துடன் உரையாற்றினார். அவரது பேச்சில் நளினம், நகைச் சுவை, உத்வேகமும் கலந்திருந்தது. அவரது பேச்சில் சில சமயங்களில் கடினவார்த்தைளும் இடம்பெற்றிந்தது. அவரது பேச்சின் சாராம்சம் இதுதான்:

2015-ஆம் ஆண்டில், பொதுவாக 20 வயது இளைஞர்களுக்கு இருக்கும் மனோநிலைதான் என்னிடம் இருந்தது. பட்டப்படிப்பை முடித்து, ஊடகத்துறையில் மற்றொரு பட்டம் வாங்கியபோதிலும் நான் எதையோ இழந்தவன் போல்தான் காணப்பட்டேன். படிப்பது, வேலைக்குச் செல்வது, வருமானத்துக்கு வரி செலுத்துவது, கடைசியில் உயிர் துறப்பது இதுதான் வாழ்க்கையா என்ற எண்ணமே என்னிடம் மேலோங்கியது.

ஒரு நாள் நான் எதையோ பறிகொடுத்தவன் போல் இருப்பதை கவனித்த எனது நண்பன், என்னை அழைத்துச் சென்று ரோட்டரி சங்க உறுப்பினர் ஜிம் டேவிஸிடம் அறிமுகப்படுத்தினான். அவரிடம்

## தனிமை வேண்டாம்!

*வாழ்க்கையில் ஏற்படும் பின்னடைவுகளுக்குத் தனிமையும் முக்கிய காரணம். இன்றைய உலகில் லட்சக்கணக்கான மக்கள் தனிமை நோயால் தவிக்கின்றனர். மன அழுத்தத்தில் இருக்கும் பல இளைஞர்கள் இணைய தளத்தின் ஆதிக்கத்துக்கு அடிமைப்பட்டு கிடக்கின்றனர்.*

*நான் எனது உரையின் தொடக்கத்தில் பேசியபடி, வாழ்க்கையில் வெறுப்புற்றுத்தான் இருந்தேன். எனது மன நிலையும் எதையோ பறிகொடுத்தது போலவே இருந்தது. மன அழுத்தத்துக்கு உண்டான அனைத்து காரணங்களும் என்னிடம் இருந்தது. உணவு சுவைக்கவில்லை, இசை ரசிக்கவில்லை, வாழ்க்கையே இருண்டுவிட்டதாகத்தான் நினைத்தேன். ஒருவித பயமும் என்னை கவ்விக்கொண்டது.*

*மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் அப்படியே இடிந்துபோய் உட்கார்ந்துவிடக்கூடாது. மன அழுத்தத்தை நாம் கண்டு கொள்ளாமல் விட்டால் அதன் பின்விளைவுகள் அதிகமாக இருக்கும். அதிலிருந்து விடுபட மருத்துவ ரீதியாகவும், தொழில் ரீதியாகவும் அதற்கான முயற்சிகளில் நாம் ஈடுபட வேண்டும்.*

*ரோட்டரியால் மன அழுத்தத்தை குணப்படுத்த முடியாது என்றாலும் அதில் சேர்ந்து பணியாற்றிய பிறகு இருளிலிருந்து வெளிச்சத்திற்கு வந்தது போல் உணர்ந்தேன். நான் ரோட்டரி சங்கத்தை உருவாக்கிய போது ரோட்ராக்டர்கள் என்னை உற்சாகப்படுத்தியதால்தான் என்னால் பல நல்ல பணிகளை மேற்கொள்ள முடிந்தது. அதனால் தான் என்னால் இந்த மேடையில் தலைநிமிர்ந்து பேசமுடிகிறது. உலகில் என்னைப் போல் பலர் இருண்ட நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு வழிகாட்ட, வாழ்வில் ஒளிவீச ரோட்டரியும், ரோட்ராக்டர்களும் தயாராக இருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது!*




நான், ரோட்டரி என்றால் என்ன, அதன் செயல்பாடுகள் என்ன என்று பல்வேறு கேள்விகளை எழுப்பினேன். அவர் அனைத்து கேள்விகளுக்கும் பொறுமையுடனும் நிதானத்துடனும் பதிலளித்தார். உடனே நானும் எனது நண்பனும் புதிதாக ரோட்டரி சங்கத்தை நிர்மாணிக்க முடிவெடுத்தோம். 2015-ம் ஆண்டில் பிறந்ததுதான் ரோட்டரி மாவட்டம் 1070. எங்கள் இருப்பிடத்தைச் சுற்றி 9 ஆயிரம் சதுர கி.மீ. பரப்பளவுக்கு 3 ரோட்டரி சங்கங்கள் இருந்த போதிலும் அதில் 12 ரோட்ராக்டர்கள் மட்டுமே இருந்தனர். 1990-களில் ஆயிரக்கணக்கான ரோட்ராக்டர்கள் இருந்ததாக நாங்கள் கேள்விப்பட்டோம். ஆனால், எங்களிடம் மிகக் குறைந்த அளவில் ரோட்ராக்டர்கள் இருந்ததால் சங்கத்தை வலுப்படுத்த நினைத்தோம்.

ரோட்டரி சங்கத்தை ஆரம்பித்து விட்டாலும் என்ன செய்வது என்பது எங்களுக்குத் தெரியவில்லை. ஆனாலும் மனம் தளராமல் நண்பர்கள் உதவியுடன் சங்கத்திற்கு உறுப்பினர்களைச் சேர்க்கத் தொடங்கினோம். ரோட்டரி இயக்கம் என்ன செய்கிறது என்பது புரியாவிட்டாலும், நற்பணிகளைச் செய்து வருகிறது என்பதை மட்டும் புரிந்துகொண்டோம். நாங்கள் சந்தித்தவர்களிடம் அதைக் கூறியே அவர்களை எங்கள் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்த்தோம்.

எங்கள் சங்கத்தில் கணிசமான உறுப்பினர்கள் சேர்ந்ததும் அடுத்த கட்டமாக புட்டியில் அடைக்கப்பட்ட உணவுப் பொருள்களைச் சேகரிப்பது, விநாடி-வினா போட்டிகள் நடத்துவது, நிதி திரட்ட கலை நிகழ்ச்சி நடத்துவது போன்ற காரியங்களில் ஈடுபட்டோம். ஏழைகளின் வாழ்வில் மறுமலர்ச்சி யை ஏற்படுத்துவது, சுகாதாரத்தை பேணுவது, சுற்றுச்சூழலை பாது காப்பது, மக்களிடம் சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதுதான் ரோட்டரி இயக்கத்தின் முக்கிய நோக்கம் என்பதை விரைவில் புரிந்துகொண்டு அதற்கேற்ப செயல்பட்டோம். எங்கள் உழைப்புக்கு பலன் கிடைத்தது. விரைவிலேயே எங்கள் பகுதி ரோட்டரி மாவட்டத்திலேயே புதிது புதிதாக ரோட்டரி சங்கங்கள் உருவாயின. அவற்றின் வளர்ச்சியும் சாத்தியமாயிற்று என்றார் கிறிஸ் வெல்ஸ்.

ரோட்டரி சங்கங்களும் அதன் உறுப்பினர்களும் ஏழைகளின் முன்னேற்றத்துக்கு பாடுபட வேண்டும். உலகம் முன்னேற வேண்டும் என்ற குறிக்கோளுடன் ஒன்றிணைந்து செயல்பட்டால் எதையும் சாதிக்கலாம் என்பதுதான் கிறிஸ் வெல்ஸ் சொல்ல வரும் சுருக்கமான செய்தி.

திட்டங்களை உருவாக்குவதிலும், திட்டங்களைச் செயல்படுத்துவதிலும் ரோட்ராக்டர்களுக்கு ரோட்டரி உறுப்பினர்கள் உதவிகரமாக இருக்கின்றனர். இதேபோல ரோட்ராக்டர்களும் ரோட்டரி உறுப்பினர்களுக்கு நவீன தொழில்நுட்பங்களைச் சொல்லிக் கொடுத்து அவர்களுக்கு உதவிகரமாக இருக்கின்றனர். மக்களுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள சமூக வலைதளங்கள் உள்ளிட்ட விளம்பர சாதனைகளை எப்படி பயன்படுத்த வேண்டும் என்றும் கற்றுக்கொடுக்கின்றனர். இந்த உண்மைகளை நாங்கள் புரிந்துகொண்டதால்தான் எங்களால் நல்ல பணிகளை முன்னெடுத்துச் செல்ல முடிகிறது என்கிறார் கிறிஸ் வெல்ஸ்.■

# இந்தியாவில் ரோட்டரி நூற்றாண்டு விழாவின் முன்னோட்டம்!

ஜெய்ஸ்ரீ

இந்தியாவில் ரோட்டரி இயக்கத்தின் நூற்றாண்டு விழாவை உற்சாகமாக கொண்டாட அனைவரும் தயாராகி வரும் நிலையில் அதற்கு முன்னோட்டமாக கொல்கத்தாவில் ரோட்டரி இயக்குநராக கமல் சங்வி உள்ளிட்ட மூன்று நிர்வாகிகள் பதவியேற்பு விழா விமரிசையாக நடைபெற்றது. நாடு முழுவதிலிருந்து ரோட்டரி சங்கத்தின் பிரதிநிதிகள் ஏராளமானோர் இதில் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இந்த விழாவே கலகலப்புடன் அனைவரும் வியக்கும் வகையில் இருந்தது எனில் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தில் எத்தனை பேர் பங்கேற்பார்கள் என்பதை நினைத்தாலே பிரமிப்பாக இருந்தது.

கொல்கத்தா மாநகரில் நடைபெற்ற விழாவில் ரோட்டரி இயக்குநர் கமல் சங்வி, RC கொல்கத்தா மகாநகர் சங்கத்தலைவர் வினோத் மஹிப்பால் மாவட்ட ஆளுநர் அஜய் அகர்வால் ஆகியோர் பதவியேற்பு விழாவில் ரோட்டரி முன்னாள் தலைவர் கல்யாண் பானர்ஜி உள்ளிட்ட பல பிரமுகர்கள் பங்கேற்றனர்.

கல்யாண் பானர்ஜி ஆற்றிய உரையின் சாராம்சம் இதுதான்:

நான் இதுவரை இருவர் பதவி யேற்பு விழாவில் பங்கேற்றிருக்கிறேன். ஆனால், இந்த முறை ரோட்டரி நிர்வாகிகளாக மூவர் பதவியேற்பு விழாவில் பங்கேற்க எனக்கு வாய்ப்பு கிடைத்தது. அதுவும் கொல்கத்தா நகரில். பதவியேற்பு விழாவுக்கு என்னை சேகர் மேத்தா அழைத்தபோது பைடு பைப்பர் இசையில் மயங்கி எப்படி எலிகள் பின் தொடர்ந்தனவோ அதுபோல் நானும் அவரது பேச்சில் மயங்கி வருவதாக தலையாட்டிவிட்டேன். மேலும் கொல்கத்தா நான் பிறந்து வளர்ந்த நகரம் என்பதால் அவரது அழைப்பை என்னால் மறுக்கவும் முடியவில்லை என்று நிகழ்ச்சியில் ரோட்டரி முன்னாள் தலைவர் கல்யாண் பானர்ஜி கூறிய போது அரங்கமே அவருக்கு கரவொலி எழுப்பி வரவேற்றது.

ரோட்டரி நூற்றாண்டு விழாவை இந்தியாவில் கொண்டாட திட்டமிட்டு வரும் நிலையில் அதற்கு முன் நடைபெறும் நிகழ்ச்சி என்பதால் இந்நிகழ்ச்சிக்கு ரோட்டரி முன்னாள் இயக்குநர் சேகர் மேத்தா விரிவான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். அதுமட்டுமல்ல: கொல்கத்தாவில் தான் ரோட்டரி நூறாண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்டது என்ற பெருமை உள்ளது.



*IPDG முகுல் சின்ஹா புதிய ஆளுநராக அஜய் அகர்வாலை நியமிக்கிறார். சோனல் சங்வி, ராகி சின்ஹா, மம்தா அகர்வால், RID கமல் சங்வி, DGE சுதிப் முக்கர்ஜீ மற்றும் RC கல்கத்தா மகாநகர் புதிய தலைவர் வினோத் மஹிபால் ஆகியோரும் உள்ளனர்.*

# ரோட்டரிதான் அவருக்கு உயிர்மூச்சு!

இந்த நிகழ்ச்சிக்கு முத்தாய்ப்பாக சங்வி, அவரது மனைவி சோனால் இருவரும் பங்கேற்ற கேள்வி-பதில் நிகழ்ச்சிக்கு சேகர் மேத்தாவும், ராஷி மேத்தாவும் ஏற்பாடு செய்திருந்தனர்.

**சேகர் மேத்தா:** ரோட்டரி இயக்கத்தில் உங்கள் பயணம் எப்படி

**சங்வி:** ரோட்டரி மூலம் பல நண்பர்கள் அறிமுகமானார்கள். ரோட்டரி இயக்கத்தின் மூலம் பல நல்ல பணிகளைச் செய்ய முடிகிறது. இது எனக்கு மன நிறைவைத் தருகிறது. ரோட்டரி இயக்குநராக நான் பதவியேற்கும் இந்த ஒரு மணி நேர நிகழ்ச்சியில் எண்ணற்ற நண்பர்கள் வந்து கலந்துகொண்டு என்னை கௌரவப்படுத்தியது மறக்க முடியாதது. அது தான் ரோட்டரி.

ஹைதராபாதில் நடந்த தெற்காசிய எழுத்தறிவு இயக்க மாநாட்டில் நான் கலந்துகொண்டு, 200 முன்னாள் ஆளுநர்கள், 100க்கும் மேற்பட்ட ரோட்டரி உறுப்பினர்களுடன் இணைந்து பணியாற்றியதை மறக்க முடியாது.

**மேத்தா:** ரோட்டரி இயக்கத்தின் மீது உங்களுக்கு ஈடுபாடு வந்தது எப்படி

**சங்வி:** நிச்சயமாக இதற்கு கல்யாண் பானர்ஜி தான் காரணம். அவர் எனக்கு மட்டுமல்ல, ரோட்டரி மக்களுக்கே கடவுளாக இருப்பவர்.

இவான்ஸ்டனில் நடைபெற்ற நிர்வாகக்குழு கூட்டத்தில் பங்கேற்ற போது ரோட்டரி இயக்கத்தின் தீர்மானங்கள், புதிய சட்டதிட்டங்கள், கொள்கை முடிவுகள் தொடர்பாக 200 பக்கங்களை படித்தபோது எனக்கு மலைப்பாக இருந்தது.

ஒரே விஷயத்துக்கு உலகம் முழுவதிலிருந்தும் பல்வேறு கருத்துக்கள் வந்திருந்தன. ஜப்பானிய பிரதிநிதி கூறிய கருத்தும், தென் ஆப்பிரிக்காவைச் சேர்ந்த பிரதிநிதி கூறிய கருத்தும் வேறுப்பட்டு இருந்தது.

இவான்ஸ்டனில் நடைபெற்ற நிகழ்ச்சியில் புதிய இயக்குநர்களான எனக்கும் (சங்வி), பரத் பாண்ட்யாவுக்கும் பதவி விலகும் இயக்குநரான C பாஸ்கர், பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். பாஸ்கர் இருக்கையிலிருந்து எழுந்து எனக்கு இடம் தந்தபோது ஒரு புறம் மகிழ்ச்சியாகவும் மறுபுறம் பொறுப்புகள் தலையில் சுமப்பதுபோல் நானும் பாண்ட்யாவும் உணர்ந்தோம்.

**மேத்தா:** ரோட்டரி, வேலை, குடும்பம் இதில் எதற்கு முன்னுரிமை அளிப்பீர்கள்

**சங்வி:** முதலில் குடும்பம், அடுத்து வேலை அதன் பிறகு ரோட்டரி என்றார். உடனே அவரது மனைவி சோனால் குறுக்கிட்டு அவருக்கு ரோட்டரி-ரோட்டரி-ரோட்டரிதான் முதலில். மற்றவை எல்லாம் பிறகு தான் என்றார். பதிலுக்கு சங்வி நகைச் சுவையுடன், எனது மனைவிக்கு எல்லாமே பரோடா, பரோடா, பரோடா தான் என்றார்.

எனக்கு பிடித்த நடிகை காத்ரீனா கைஃப், பிடித்த படம் ஷோலே என்றும் சங்வி தனது உரையாடலின்போது தெரிவித்தார்.

அது சரி சங்வி பற்றி நிகழ்ச்சியில் பங்கேற்ற ரோட்டரி உறுப்பினர்களின் கருத்து என்ன என்கிறீர்களா. சங்விக்கு நண்பர்கள் அதிகம். அவரால் எதையும் சாதிக்க முடியும் என்று அனைவரும் ஒருமித்த குரலில் தெரிவித்தனர்.



வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கொல்கத்தா மகாநகர் ரோட்டரி சங்கத்தின் தலைவராக பொறுப் பேற்றுள்ள வினோத் மஹிபாலுக்கு நல்ல வாய்ப்பு கிடைத்துள்ளது. அவரும் அவரது மனைவி ஜோதியும், சங்கத்தின் வளர்ச்சி மற்றும் நல்வாழ்வுத் திட்டங்களை சிறப்பாகச் செய்யலாம் என்று பானர்ஜி பேசியபோது அனைவரும் அதை வரவேற்றனர். பானர்ஜி மேலும் பேசியதாவது:

2016-2017-ஆம் ஆண்டு நூற்றாண்டு விழா கொண்டாட்டங்களின் போது நான் ரோட்டரி அறக்கட்டளைக்கு தலைமைவகித்தது என்னால் மறக்கமுடியாதது. அந்த ஆண்டுதான் ரோட்டரி மூலம் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ரோட்டரி அறக்கட்டளைக்கு நிதி சேர்ப்பதில் இந்தியா இரண்டாவது இடத்தைப் பிடித்தது. ரோட்டரி சங்கங்கள் சிறியதா அல்லது பெரியதா என்று பார்க்காமல் அனைத்து மாவட்டங்களும் இந்த நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தை முன்னிட்டு ரோட்டரி அறக்கட்டளைக்கு அதிக அளவில் நிதியுதவி வழங்க முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

ரோட்டரி நூற்றாண்டு விழாவை பெரிய அளவில் ரோட்டரி தலைவர் மார்க் மலோனியின் முன்னிலையில் கொண்டாடுவது என்று தீர்மானித்தோம். விழாக் குழுவின் ஆலோசகர்களாக நானும் (கல்யாண் பானர்ஜி), முன்னாள் தலைவர் ராஜேந்திர சாபூவும் செயல்படுவோம்.

உலகம் முழுவதும் உள்ள ரோட்டரி உறுப்பினர்கள் 45 மில்லியன் மணி நேரங்கள் தன்னார்வ தொண்டுப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களின் பணிக்கான மதிப்பை கணக்கிட்டால் 850 மில்லியன் டாலருக்குச் சமமாகும் என்று ஜான் ஹாப்கின்ஸ் பல்கலைக் கழக ஆராய்ச்சி தகவல் கூறுகிறது.



*நிகழ்ச்சியில் PRID சேகர் மேத்தா, PRIP கல்யாண் பானர்ஜீ, RID கமல் சங்வி மற்றும் சோனல் சங்வி.*

மேற்குவங்கத்தைச் சேர்ந்த நான் (கல்யாண் பானர்ஜி), குஜராத்தில் வசிப்பதுபோல், குஜராத்தியான கமல் சங்வி மேற்கு வங்கத்தில் வசித்து வருகிறார். நான் குஜராத்தி மொழி பேசுகிறேன். கமல் சங்வி, வங்காள மொழி பேசுகிறார். எங்கள் இருவருக்கும் என்ன ஒற்றுமை பாருங்கள் என்று கல்யாண் பானர்ஜி கூறியபோது அனைவரும் வியந்து போனார்கள்.

ரோட்டரி மாவட்ட ஆளுநர்களாகப் பதவியேற்பவர்களுக்கு பயிற்சி அளிக்கும் வாய்ப்பு கமல் சங்விக்கு பானர்ஜி தலைவர் பதவியிலிருந்த காலத்திலிருந்து தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் கிடைத்தன. அப்படி ஒருவாய்ப்பு கிடைப்பது மிகவும் அரிது. அதுபோன்ற வாய்ப்பு எனக்கோ அல்லது ராஜா சாபூக்கோ கிடைக்கவில்லை, என்றார் அவர்.

நிர்வாகப் பிரச்னையிலும் சரி, வழக்கு விவகாரங்களிலும் சரி, RI நாம் மற்ற நாடுகளை விட அதிகம் செலவழிக்க வைக்கிறோம். இந்த நேரத்தில் உலகம் முழுவதும் ரோட்டரி என்பது ஒரே குடும்பம் என்று ரோட்டரி நிறுவனர் பால் ஹாரிஸ் கூறியதை நாம் நினைவில் கொள்ள வேண்டுகிறேன்.

2021-22-ம் ஆண்டில் ரோட்டரி தலைவராக ஹோல்கர் நாக் பதவியேற்க உள்ளார் என்கிற செய்தி அனைவருக்கும் தெரியும். அவரைத் தொடர்ந்து ரோட்டரித் தலைவராக இந்தியர் ஒருவர் வரலாமே. ஏன் வரக்கூடாது நம்மிடம் தலைவர் பதவிக்கு துகுதியான ஒருவர் இருக்கிறார். அவரை நியமனக்குழுதான் தேர்வு செய்ய வேண்டும். ஆகஸ்ட் மாதம் மூன்றாவது வாரத்தில் குழு கூடும்பொழுது இதைச் செய்யும் என நம்புகிறேன். நாம் நினைப்பது நடந்துவிட்டால் ரோட்டரி நூற்றாண்டு விழாவை இந்தியாவில் இன்னும் சிறப்பாகக் கொண்டாடலாம் என்று பானர்ஜி கூறியபோது அரங்கமே கரவொலி எழுப்பி அவரது பேச்சை ஆமோதித்தது.

கமல் சங்வி, தனது உரையில், கல்யாண் பானர்ஜியின் பேச்சுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டார். நான் விரும்பும் ஒருவரின் முன்பு, நான் புதிய பொறுப்பு ஏற்பதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது. நமக்கு அவ்வப்போது ஊக்கமளித்து வரும் கல்யாண் பானர்ஜியின் வழியிலேயே நான் செயல்பட விரும்புகிறேன் என்றார். மாவட்ட ஆளுநர்கள் விவேக் குமார், சஞ்சய் கெம்கா, மாவட்ட ஆளுநர் கோபால் கெம்கா மற்றும் DGN ராஜன் கண்டோத்ரா ஆகியோர் சங்வியின் மாவட்டமான 3250விலிருந்து கொல்கத்தாவிற்கு வந்து ஆதரவு தெரிவித்தனர்.

RID 3291-ன் தலைவர்கள், செயலாளர்கள் மற்றும் இந்தியாவில் உள்ள ரோட்டரி சங்க உறுப்பினர்கள் பல நல்ல திட்டங்களை வகுத்து செயல்படுத்துவதுடன், ரோட்டரி அறக்கட்டளைக்கும் தாராளமாக நிதி வழங்க வேண்டும். புதிய வரலாறு படைக்க வேண்டும். நிர்வாகப் பொறுப்பில் இருந்தால் மட்டும் போதாது, புதிய இலக்கை நோக்கி நாம் பயணிக்க வேண்டும் என்று சங்வி தனது உரையில் குறிப்பிட்டார்.

(இந்த சமயத்தில் சங்வியின் தாயார் மற்றும் மைத்துனரையும் ராஷி மேத்தா மேடைக்கு அழைத்து வந்து ஆச்சரியத்தை ஏற்படுத்தினார். இதைத் தொடர்ந்து சங்வி தம்பதிகளுக்கு ஆரத்தி எடுக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.)

முன்னதாக ரோட்டரி புத்தாண்டு நிகழ்ச்சியின் முக்கிய அம்சமாக 34 ரோட்டரி சங்கங்கள் மற்றும் ரோட்ராக்டர்கள் இணைந்து மாவட்டம் முழுவதும் மருத்துவ முகாம்களை நடத்தின. 33 முகாம்களில் நடந்த மருத்துவ முகாம்களில் 8 ஆயிரம் பேர் பலன் பெற்றதாக மாவட்ட ஆளுநர் அஜய் அகர்வால் தெரிவித்தார்.

புகைப்படங்கள்: ஜெயஸ்ரீ

ADVT

# bs builders

Engineers & Contractors



## N. Manimaran, B.E.,

41-B, 4th Cross, Arulanandha Nagar,
Thanjavur-613 007.

+91 94433 53364

nmanibsb@gmail.com

# பிறவிக் குறைபாடுள்ள பிஞ்சுகளைக் காப்பாற்ற ரோட்டரி கரம் கொடுக்கிறது

கிரண் ஜெஹ்ரா

வேலூரைச் சேர்ந்த 11 மாத பெண் குழந்தையான விவிக்ஷா, முகம் நிறைய புன்னகை யுடன் சிவப்பு மற்றும் நீல மலர்களுடன் கூடிய வெள்ளை நிற ஆடையில் தேவதை போல காட்சியளிக்கிறாள். அவள் அம்மா அந்தக் குழந்தையின் முதுகில் உள்ள ஒரு தழும்பைக் காட்டும் வரை உங்களால் சொல்ல முடியாது அவள் ஒரு உயிரைக் காக்கும் தண்டுவட அறுவைசிகிச்சையை செய்திருக்கிறாள் என்று. RC மெட்ராஸ் நார்த் RI மாவட்டம் 3232, TRF, தமிழ்நாடு அரசு மற்றும் சென்னை காவேரி மருத்துவ மனை போன்றவை இணைந்து செயல்படுத்தும் திட்டப்பணி 'தளிர்கள்' தொடக்க நிகழ்ச்சியின் போது, அவளுடன் சேர்த்து மேலும் ஐந்து பிஞ்சுக் குழந்தைகள் பாராட்டப் பட்டனர், பிறந்த குழந்தைகளில் இருக்கும் பிறவி இயலாமைகளுக்கு சரிபடுத்தும் அறுவைசிகிச்சைகள் இலவசமாக செய்யப்படுகிறது.

TRF அறங்காவலர் குலாம் வாஹன்வதி சங்கத்தின் முயற்சியைப் பாராட்டி பேசுகையில், "அரசுடன் கைகோர்த்து மருத்துவ மனையின் உதவியுடன் 39 குழந்தை களுக்கு இலவச அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக செய்து முடித்துள்ளது" என்று தெரிவித்தார். பவுண்டேஷனுக்குத் தாராளமாக நன்கொடை அளிக்கும்படி அனைத்து ரொட்டேரியன்களையும் அவர் கேட்டுக்கொண்டு, "இது போலியோ ஒழிப்பு, அமைதியை முன்னிறுத்துவது மற்றும் சமூக வளர்ச்சி போன்ற நமது சேவைத் திட்டப்பணிகளுக்கு நிதியுதவி செய்கிறது, எனவே, உங்கள் பணம் ஒரு மாற்றத்தை உருவாக்குகிறது என்பதற்கு இந்த குழந்தைகளின் புன்னகையே ஒரு சான்று" என்று கூறினார்.




**இடதிலிருந்து:** P *சதீஷ்,* DGE S *முத்துபழநியப்பன்,* M *அம்பலவாணன், சுசித்ரா சாகர்,* IPDG *பாபு பேரம், அரவிந்தன் செல்வராஜ்,* M *கணபதி,* Dr. *பாலமுரளி, தமிழ்நாடு சுகாதாரத்துறை அமைச்சர்* Dr. *விஜயபாஸ்கர்,* TRF *அறங்காவலர் குலாம் வஹன்வதி,* PDG G *ஒளிவண்ணன்,* N *வெங்கடேஷ்,* DG G *சந்திரமோகன் மற்றும்* DGN J *ஸ்ரீதர்.*

பிறக்கும் 1,000 குழந்தைகளில் ஒன்று தண்டுவடம் மற்றும் மூளை கோளாறுகளால் பாதிக்கப்படுவதாக இந்தத் திட்டப்பணியை வழிநடத்தும் மூத்த ஆலோசகரும் நரம்பியல் அறுவைசிகிச்சை நிபுணருமான Dr G. பாலமுரளி தெரிவித்தார். இது போன்ற குழந்தைகள், மோசமான IQ திறன் மற்றும் இயலாமையால் பாதிக்கப்படுகிறார்கள், மேலும் கொஞ்ச காலத்திற்குப் பிறகு சக்கர நாற்காலியில் உட்காரும் நிலையும் ஏற்படக்கூடும். "மூளை உருக்குலைவுகள் கொண்ட குழந்தைகளுக்கு சிகிச்சையளிப்பதில் நிறைய சிக்கல்கள் இருக்கிறது. ஆனால் TRF மற்றும் மாநில அரசு எடுத்த முயற்சிகளின் பலனாக, இது போன்ற குறைபாட்டுடன் பிறக்கும் குழந்தைகளுக்கு தரமான மருத்துவம் கிடைக்க வழிசெய்கிறது."

இப்போது 8 மாத குழந்தையான ரியான் சிரிப்புடன் தன்னைச் சுற்றியிருப்பவர்களுக்கு உற்சாகத்தை




*குழந்தை ரியான் தன் பெற்றோருடன்.*



வழங்குவதால், ரியானின் அம்மா தன் சோகத்திலிருந்து மீண்டு வந்து, "பல மாதங்களாக ஒய்வு ஒழிச்சல் இல்லாமல் அவனது அழுகையை நாங்கள் கேட்டோம்; ஆனால் இப்போது அவனது மழலைச் சத்தம் எங்கள் காதுகளுக்கு இனிமையாக இருக்கிறது," என்று சொல்கிறார்.

சிறப்பு விருந்தினராக வருகை புரிந்த தமிழ்நாடு சுகாதாரத்துறை அமைச்சர் Dr விஜய பாஸ்கர், "சமூகத்தில் நலிவடைந்த பிரிவினர்கள் தங்களது பொருளாதாரத்தில் தன்னிறைவு அடைவதற்கு உதவியும் பிறவியிலேயே இயலாமைகளுடன் பிறக்கும் குழந்தைகளுக்கு ஒரு புதுவித வாழ்வையும் வழங்குகிறது. இதைச் சாத்தியப்படுத்திய இங்குள்ள அனைத்து ரொட்டேரியன்களுக்கும் எனது நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்," என்று ரோட்டரியின் பங்கினைப் பாராட்டினார்.

லிண்டா (மாவட்டம் 6060, அமெரிக்கா), துஷன் சோஸா (மாவட்டம் 3220, இலங்கை), ஜேம்ஸ் ரோக்ஸ்லோ (மாவட்டம் 6780 அமெரிக்கா) மற்றும் RC பிராட்லி சன்ரைஸ், கிளீவ்லாந்து ரோட்டரி சங்கத் தலைவர் ரிக் கிரீசி போன்ற சர்வதேச கூட்டாளிகளை அழைத்து வருவதில் முக்கியக் காரணமாக இருந்த PDG G ஒளிவண்ணன், இந்தத் திட்டப்பணி தொடர்ந்து நடைபெற வேண்டும் என்று சொல்லி, "அதன் மூலம் நம்மால் முடிந்தளவு நிறைய குழந்தைகளைக் காப்பாற்ற முடியும்" என்று ரொட்டேரியன்களை வலியுறுத்தினார். ரூ.34 இலட்சம் மதிப்புள்ள குழந்தைகளுக்கான அறுவைசிகிச்சைகள், திட்டப்பணி தளிர்கள் தவிர, மூளை மற்றும் தண்டுவட பிறவிக்குறைபாட்டுடன் பிறக்கும் சிசுக்களை, கர்ப்பத்தின் ஆரம்பக்கட்டத்திலேயேக் கண்டறிய மருத்துவர்களுக்கு விழிப்புணர்வும் பயிற்சியும் கொடுக்கப்படும், மேலும் பிறவிக் குறைபாடுகளைத் தடுக்க கர்ப்பிணிகளிடையே விழிப்புணர்வும் ஏற்படுத்தப்படும்.■

புகைப்படங்கள்: கிரண் ஜெஹரா

# சென்னையில் ஒரு எலும்பு வங்கி

ஜெய்ஸ்ரீ

நம்மில் பலருக்கு இரத்த வங்கி பற்றியும், கண்தான வங்கி பற்றியும் நன்றாகத் தெரியும். ஆனால், எலும்பு வங்கி பற்றி ஒரு சிலர் மட்டுமே கேள்விப்பட்டிருப்பார்கள். சென்னை அடையாறு புற்றுநோய் மருத்துவ மனையில் ரோட்டரி சங்கம் சென்னை மத்திய பிரிவின் ஆதரவுடன் மிகப் பெரிய எலும்பு வங்கி ஏற்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் முதன்முறையாக, நாட்டிலேயே மூன்றாவதாக அமைந்துள்ள எலும்பு வங்கி இதுதான்!

மும்பையில் உள்ள டாடா புற்றுநோய் மருத்துவமனையிலும், பெங்களூரில் உள்ள M S ராமையா மருத்துவக் கல்லூரியிலும் இதேபோன்று எலும்பு வங்கிகள் தொடங்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன.

மூளைச்சாவு அடைந்தவர்களி டமிருந்து எலும்புகள் தானமாக பெறப்பட்டு இந்த வங்கியில் பாதுகாப்பாக வைக்கப்படுகின்றன. விபத்தில் காயமடைந்தவர்களுக்கும், எலும்பு புற்றுநோயால் அவதிப்படுபவர்களுக்கும் எலும்பு மாற்று அறுவைச்சிகிச்சை மூலம் புதுவாழ்வு அளிக்க முடியும் என்கிறார் இந்த வங்கியின் தலைவரும் எலும்பு மூட்டு மாற்று சிகிச்சை நிபுணருமான Dr K சந்திரகுமார்.

அடையாறு புற்றுநோய் மருத்துவ மனையில் எலும்பு வங்கியை தொடங்கிவைத்த ரோட்டரி இயக்குநர் கமல் சங்வி, நாட்டின் இதர பகுதிகளிலும் இதுபோன்று எலும்பு வங்கிகள் உருவாக்கப்பட வேண்டும் என்பதே தமது ஆசை என்று குறிப்பிட்டார். எலும்பு புற்றுநோயால் அவதிப்படுபவர்களுக்கு இந்த வங்கி ஓர் வரப்பிரசாதம் என்றும் அவர் கூறினார்.

இந்த எலும்பு வங்கிக்கு ரோட்டரி மெட்ராஸ் சென்ட்ரல் பிரகலாத் ராய் சரோகி எலும்பு வங்கி எனப் பெயரிடப்பட்டுள்ளது. கடராகி கிங்ஸ்டன், நிபிகான், கம்பாலா வடக்கு, சன்ரைஸ் கம்பாலா ஆகிய ரோட்டரி சங்கங்கள் மற்றும் ரோட்டரி அறக்கட்டளை உதவியுடன் இந்த வங்கி நிறுவப்பட்டுள்ளது.

இத்திட்டம் தோன்றியது எப்படி என்று விவரிக்கிறார் விநோத் சரோகி: 2016-ஆம் ஆண்டு அடையாறு புற்றுநோய் மருத்துவ மனையின் தலைவர் Dr V சாந்தா வுடன், ரோட்டரி சங்க முன்னாள் தலைவர் Dr மனோஜ்ராஜன் மற்றும் S R பாலகிருஷ்ணன் ஆகியோர் பேசிக்கொண்டிருந்த போது இதற்கான திட்டம் உருவானது.



*எலும்பு வங்கி திறப்பு விழாவில் RID கமல் சங்வி, IPP R. சரண்யன், IPDG பாபு பேரம், விநோத் சரோகி, Dr K. சந்திரகுமார், PDG அபிராமி ராமநாதன் மற்றும் மனோஜ் ராஜன்.*

எலும்பு வங்கிக்குத் தேவையான உபகரணங்களை வாங்க ரூ.70 லட்சம் தேவைப்பட்டது. இதில் சரோகி, தனது குடும்ப அறக்கட்டளையிலிருந்து ரூ.30 லட்சம் தர முன்வந்தார். ரோட்டரி முன்னாள் மாவட்ட ஆளுநர் நடராஜன் நாகோஜி, DDF மூலம் ஒரு தொகையையும் அளிக்க முன்வந்தார். இது தவிர சர்வதேச சங்கங்கள் சிலவும், ரோட்டரி அறக்கட்டளை மூலமும் எஞ்சிய தொகை வசூலானது. எலும்பு வங்கி அமைப்பதற்கான இடத்தை அடையாறு புற்றுநோய் மருத்துவமனை அளித்தது. அது மட்டும் அல்லாமல் தேவைப்படும் நோயாளிகளுக்கு இலவச சிகிச்சையும் அளிக்க ஒப்புக் கொண்டது. எலும்பு மாற்று அறுவைச் சிகிக்சை அளிப்பதற்காக Dr சந்திரகுமார், சிங்கப்பூரிலும், தென்கொரியாவிலும் சிறப்புப் பயிற்சி பெற்றுள்ளார் என்கிறார் சரோகி.

மூளைச்சாவு அடைந்தவர் களிடமிருந்து பெறப்பட்ட, தானமாக வழங்கப் பட்ட எலும்புகள் முறையாக வேதிப்பொருள்கள் மூலம் மேம்படுத்தப்பட்டு குளிர் பதனப் பெட்டிகளில் பதப்படுத்தி வைக்கப்படுகிறது. விபத்தில் காயமடைந்தவர்கள், எலும்பு புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவைப்பட்டால் எலும்பு மாற்று சிகிச்சை அளிக்கப்பட்டு புதுவாழ்வு அளிக்கப்படுகிறது.

இதுவரை எலும்பு முறிவு ஏற்பட்டவர்களுக்கு ஸ்டீல் தகடுகள் பொருத்தி அறுவைச்சிகிச்சை செய்யப்பட்டு வந்தது. இதற்கு லட்சக் கணக்கில் செலவாகும் என்பதுடன் 15 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் இதே சிகிச்சையை அளிக்க வேண்டியிருக்கும். ஆனால், எலும்பு மாற்று அறுவைச்சிகிச்சை செய்துகொண்டால் நிரந்தரத் தீர்வு அளிப்பதுடன் செலவும் குறையும் .ஒருவரிடம் தானமாகப் பெற்ற எலும்பைக்கொண்டு 20 பேருக்குச் சிகிச்சை அளிக்கலாம். இந்த வங்கி மூலம் ஆண்டுக்கு 40 முதல் 50 பேர் சிகிச்சை பெற்று பயனடைய முடியும் என்கிறார் சரோகி.

இந்நிகழ்ச்சியில் ரோட்டரி முன்னாள் இயக்குநர் P.T.பிரபாகர், மாவட்ட ஆளுநர் பாபுபெரம், சங்கத் தலைவர் R.சரண்யன் மற்றும் முன்னாள் ஆளுநர்கள், சங்க உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

எலும்பு வங்கியை ஏற்படுத்திக் கொடுத்த ரோட்டரி சங்கத்துக்கு மிக்க நன்றி. இதன் மூலம் எங்களால் தேவையானவர்களுக்கு இலவசமாக சிகிச்சை அளிக்க முடியும் என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார் அடையாறு புற்றுநோய் மருத்துவ மனையின் துணைத் தலைவர் ஹேமந்த் ராஜ்.■

# நாசிக்கில் ரோட்டரி கட்டிய அணைகள்

ரோட்டரி செய்திக்குழு

RC நாசிக், RID 3030 ஆம்பே கிராமத்தில் ஷிவ்செட் ஜல்பந்த் மற்றும் ஷிவ்செட் கிராமத்தில் ஸ்ரீராம் ஜல்பந்த் போன்ற இரண்டு இடங்களில் தடுப்பு அணைகளைக் கட்டியுள்ளது; இவை இரண்டும் பேத் தாலுகாவில் உள்ளது. இந்த இரண்டு அணைகளையும் சேர்த்து சுமார் 1.1 கோடி லிட்டர் தண்ணீரைச் சேகரிக்க முடியும்.

இந்த கிராமங்களில் தண்ணீர்த் தட்டுப்பாடு இருப்பதைக் கேள்விப்பட்ட உடனே ரொட்டேரியன்கள் போர்கால அடிப்படையில் செயல்பட்டனர். ஆம்பே கிராமத்தில் ஒரு அணை கட்டுவதற்கு நமது குழு அனுமதியளித்த பிறகு, மகிந்திரா & மகிந்திரா நிறுவனத்திலிருந்து CSR நிதிகளுக்கான வேலைகளை அங்கே அலுவலராக இருக்கும் நமது சங்க உறுப்பினர் மூலம் ஆரம்பித்தோம், என்று சொல்கிறார் கிராம தத்தெடுப்பு திட்டப்பணியின் (2018-19) இயக்குனர் ஸ்ரீநந்தன் பாலேராவ்.

கார்ப்பரேட் நிறுவனத்து டன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டது மற்றும் கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் இந்த அணை கட்டிமுடிக்கப் பட்டது. மழைக்காலத்திற்குப் பிறகு இந்த தடுப்பு அணை யில் தண்ணீர் இருப்பதைப் பார்க்க கிராமத்தினர் குதூகல மடைந்தனர், என்று கூறினார் பாலேராவ்.

வெகு விரைவில் ஷிவ்செட் கிராமத்தில் மற்றொரு வசதிக்கான கோரிக்கையை இந்த சங்கம் பெற்றது. இந்த முறை இந்தியன் வால்வ்ஸ்



நிறுவனம் களத்தில் இறங்கி ஒரு தடுப்பணை கட்ட முன்வந்துள்ளது.

இந்த புதிய வசதி களின் மூலம், இந்த இரு குக்கிராமங்களில் தண்ணீர் தட்டுப்பாடு முழுமையாகத் தீர்க்கப்பட்டுள்ளது மிக முக்கியமாக, இந்த கிராமத்தில் பயிரிடும் முறையில் ஒரு மிகப் பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது, இப்போது விவசாயிகள் ஒரு விளைச்சலை மட்டும் நம்பி இருக்காமல் தடுப்பணைகளில் உள்ள நீரைப் பயன்படுத்தி இரண்டு பயிர் வகைகளை நடவு செய்ய முடியும், என்று சொல்கிறார் பாலேராவ். இந்த பெருமாற்றம் அவர் களின் வருமானத்தை அதிகரிக்கும், இதனால் அவர்கள் நகரங்களுக்குப் படையெடுப்பது குறையும்.■

# ஃபிரூஸாபாத்தில் மாபெரும் அறுவைசிகிச்சை முகாம்

ரோட்டரி செய்திக்குழு



*அமெரிக்க மருத்துவக் குழுவுடன், RID 3110 ரோட்டாப்ளாஸ்ட் திட்ட குழுவினர்.*

ஃபிரூஸாபாத் யூனிட்டி மருத்துவ மனையில் ஒரு 10-நாள் 'ரோட்டாபிளாஸ்ட்' மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. முகாமுக்கு RCs ஆக்ரா தாஜ்மஹால், ஃபிரூஸாபாத், ஆக்ரா நார்த், ஷிகோஹாபாத், RID 3110, ஆகிய சங்கங்கள் ஆதரவளித்தன. இதில் மேவாய்ப் பிளவு மற்றும் தீ புண்களுக்காக 55க்கும் மேற் பட்டவர்கள் சிகிச்சை பெற்றனர்.

21 வெளிநாட்டு மருத்துவர்கள் அடங்கிய குழுவுக்கு மருத்துவ இயக்குநர் கார்லா வெர்ணிங்காஸும், துணைமருத்துவ ஊழியர்களுக்கு செவிலியர் மேரியான் மெக்கென்ஸியும் தலைமைதாங்கினர். இதர தன்னார் வலர்களும் சேவை செய்தனர். RC ஆக்ரா தாஜ்மஹாலை சேர்ந்த தலைவர் ராகுல் வத்வா, ரொட்டேரியன் திவ்யா வத்வா; மற்றும் RC ஃபிரூஸாபாத்தை சேர்ந்த தலைவர் PDG லக்ஷ்மிகாந்த் பன்சால், DG அருண் ஜெயின் ஆகியோர் இத்திட்டத்தை பொறுப் பேற்று நடத்தினார்கள்.



இந்த மாபெரும் சுகாதாரத் திட்டத்தை நடத்துவதற்கு முன்பு ஒரு சில மாதங்களாக ஃபேஸ்புக் மற்றும் வாட்ஸ்அப் மூலம் மூலம் இந்தச் சங்கங்கள் பொது மக்களுக்கு பிரச்சாரம் செய்தன. ஆக்ரா, ஃபிரூஸாபாத், ஷிகோஹாபாத் மற்றும் 70 இன்னபிற கிராமங்களில் உள்ள வெவ்வேறு இடங்களில் 100க்கும் அதிகமான விளம்பரப் பலகைகளும் பதாகைகளும் பார்வைக்கு வைக்கப் பட்டன. அறுவை சிகிச்சைக்கான தேவை உள்ளவர்களை இனங்காண பல்வேறு இடங்களில் ஸ்கிரீனிங் முகாம்கள் நடத்தப்பட்டன.

மாவட்ட நீதிபதி செல்வகுமாரி, ஃபிரூஸாபாத் CMO Dr S K தீட்சித், ரொட்டேரியன் டி வி ஷர்மா, PDG நரேஷ் சூத் ஆகியோரும் முகாமுக்கு ஆதரவுக்கரம் அளித்தனர், என்றார் வத்வா. ■

The Rotary Foundation | END POLIO NOW

Rotary INDIA 100 YEARS

# நம் முதல் கடமை

## உலகிலிருந்து போலியோவை ஒழிப்பது ...

## ₹. 1 லட்சம் நன்கொடையாக

## போலியோ திட்டத்திற்கு** வழங்குங்கள்

3 பலன்களை பெறுங்கள்

Rotary EPF END POLIO FELLOW







1. நீங்கள் கொடுக்கும் ₹ **1 லட்சத்திற்கு** ஈடாக பில் & மெலிண்டா கேட்ஸ் பவுண்டேஷன் ₹ **2 லட்சம்** நன்கொடையாக கொடுப்பார்கள். எனவே போலியோ ஒழிப்பு திட்டத்திற்கு மொத்தம் ₹ **3 லட்சம்** சென்றடையும்.
2. தாங்கள் இதுவரை கொடுத்துள்ள நன்கொடையுடன் இந்த ₹1 லட்சமும் சேர்ந்து தங்களுக்கானதொரு **PHF / MPHF / Major Donor** போன்ற அங்கீகாரம் மற்றும் 80G சான்றிதழை ரோட்டரி பவுண்டேஷன் உங்களுக்கு வழங்கும்.
3. போலியோவுக்கென நன்கொடை கொடுத்தால் கீழ்காணும் **மாவட்ட சிறப்பு அங்கீகாரங்கள்*** உங்களுக்கு கிடைக்கும்.
   a. சிறப்பு போலியோ ஒழிப்பு நன்கொடை பின் (Pin)
   b. உங்களை கௌவுரவிக்க போலியோ அங்கவஸ்திரம்
   c. RID, Trustee, EPNC மற்றும் DG கையெழுத்திட்ட சான்றிதழ்

** Cheque or DD favouring
**ROTARY FOUNDATION (INDIA)**
payable at New Delhi Or
online www.endpolio.org/donate

* நிபந்தனைக்குட்பட்டது

**For Details Contact - Your DG, DRFC, Dist. Polio Chair & EPNC**




EPNC **Dr. Saga**
**Rtn. PDG Dr E.K. Sagadhevan,** Member - INPPC
End Polio Now Coordinator, for Zone 5 & 7, India & Sri Lanka.
RID 3202. pdgdrsaga@gmail.com +91 99944 77725
MD, Lotus Hospital, Erode - 638 002.

# சில ஹாம்பர்க்




RI *தலைவர் பாரி ரஸ்ஸின் மற்றும் எஸ்தர் தங்கள் குடும்பத்தாருடன்.*




RIDs *பரத் பாண்டியா, கமல் சங்வி மற்றும் சோனல் சங்வி.*




# தருணங்கள்





மெடிசின் ஹில்ட் நிறுவனர் Dr பியா ஸ்காராபீஸ் - குவர் ஃபெல்ட். இந்நிறுவனம் அகதிகளுக்கு இலவச மருத்துவம் அளிக்கிறது.



PRID அஷோக் மகாஜன், PRIP ஃப்ராங்க் டெவ்லின் மற்றும் PRID YP தாஸ்.




RID C பாஸ்கர் மற்றும் அவர் மனைவி மாலா.



ரோட்டரி இளைஞர் பரிமாற்றத்திட்ட மாணவி இந்திய பிரதிநிதியாக தேசிய கொடியுடன்.





**மேலே:** *மாநாட்டின் துவக்க விழாவில் ஜெர்மன் பிரேக் நடனம்;* **இடது:** RID C *பாஸ்கர் மற்றும் மாலா,* RIDEs *பரத் பாண்டியா மற்றும் கமல் சங்வியுடன்;* **கீழே:** கோல்ஃப் *மைதானத்தில்* RI *தலைவர் பாரி ரஸ்ஸினுடன்* PRID Y P *தாஸ்.*



*புகைப்படங்கள்: ரஷீதா பகத் மற்றும் சிறப்பு ஏற்பாடுகள்.*




# RC மைசூர் பிளாட்டினம் விழாவைக் கொண்டாடுகிறது

ரஷீதா பகத்

உங்கள் 75வது ஆண்டை கொண்டாடுகையில், ஒரு பெரிய, நலத்திட்டம் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்த வருடத்திலேயே நீங்கள் அதை முடிக்க வேண்டிய அவசியமில்லை. உடல்நல பாதுகாப்பு மற்றும் கல்வியறிவு ஆகிய இரண்டிலும் நீங்கள் வலுவாக இருப்பதால், இந்த இரண்டு பகுதிகளிலும் ஒரு திட்டத்தை பரிசீலிக்கலாம், என்று மைசூர் ரோட்டரி சங்கத்தின் 75வது ஆண்டு கொண்டாட்டங்களில் கலந்து கொண்டபோது முன்னாள் RI தலைவர் கல்யாண் பானர்ஜி கூறினார்.

ஜூலை 5, 1944-ல் சங்கத்திற்கு சாசனம் கிடைத்த போது, இது இந்தியாவின் முதல் 10 ரோட்டரி சங்கங்களில் ஒன்றாக மாறியது என்று அவர் கூறினார். (இது முன்னதாக 3180 எனப்பட்ட, RI மாவட்டம் 3181-ன் மூத்த சங்கமாகும்).

### சிறந்த சேவை திட்டங்கள்

75 ஆண்டுகளில் சங்கம் மேற்கொண்ட சிறந்த சேவைத் திட்டங்களுக்காகவும், அவற்றை பல ஆண்டுகளாக நிலைநிறுத்தியத்திற்கும் விரிவுபடுத்தியதற்கும் பாராட்டுகள் தெரிவித்தார், கல்வி மற்றும் சுகாதாரத் துறையில் RC மைசூர் எடுத்த பல முன்முயற்சிகளில் அவர் தொடர்பு கொண்டிருந்ததாக தெரிவித்தார். “ரோட்டரி ஒருங்கிணைந்த பள்ளிக்கு அடிக்கல் நாட்டியது எனக்கு நினைவில் உள்ளது, இப்போது ஆட்டிசம் மற்றும் டிஸ்லெக்ஸியாவால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான முழு அளவிலான பள்ளி மற்றும் செயல்பாட்டு மையத்தை நீங்கள் கொண்டிருக்கிறீர்கள்.” அந்த பள்ளி விரிவுபடுத்தப் பட்டுள்ளது, அன்று காலை ரோட்டரி மைசூர் ஆண்டு விழா கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டியதில் பானர்ஜி மகிழ்ச்சியடைந்தார்.

இந்த புதிய கட்டிடம் ஆட்டிசம் மற்றும் டிஸ்லெக்ஸியா கொண்ட குழந்தைகளை சாதாரண




ரஷிதா பக்தி

*விழாவில் PRIP கல்யாண் பானர்ஜீ, துணை ஆளுநர் S ராகவேந்திரா, S ராமச்சந்திர ராஜே உர்ஸ், GS சுமீத், PDGs P ரோஹிநாத், M லட்சுமி நாராயண், DG ஜோஸஃப் மாத்யூ, சங்கத் தலைவர் சேத்தன் விஸ்வநாத் மற்றும் செயலாளர் ரவிசங்கர் ஆகியோர்.*

குழந்தைகளுடன் வகுப்புகளில் ஒருங்கிணைக்க உள்ளதாக RC மைசூர் உறுப்பினரான PDG M லட்சுமி நாராயண் தெரிவித்தார். இதற்கான செலவு ரூ.60 லட்சம் ஆகும் மேலும் ஆட்டிசம் மற்றும் கற்றல் குறைபாடுகள் உள்ள குழந்தைகளுக்கான கல்விக்காக 10 வகுப்பறைகள் இருக்கும். தற்போது இந்த குழந்தைகளுக்கான வகுப்பறைகள் ஏற்கனவே உள்ள பள்ளி வளாகத்தில் இருக்கின்றன.

ரோட்டரி மைசூர் செயற்கை உறுப்புகள் மையத்தின் 75ஆம் ஆண்டு விழா கட்டிடத்தையும் PRIP பானர்ஜி திறந்து வைத்தார், இந்த ரோட்டரி மையத்திலிருந்து செயற்கை கை கால்கள் பெற்ற பயனாளிகளுடன் உரையாடினார். செயற்கை உறுப்புகளை இலவசமாக வழங்கும் ஒரு அமைப்பு மைசூரில் முற்றிலும் இல்லாததால் ஏழையான, கைகால்கள் பாதிக்கப்பட்டவரின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக இந்த மையம் 1998ல் அமைக்கப்பட்டது. இது இதுவரை 426 செயற்கை கைகால்கள் விநியோக முகாம்கள் மூலம் 9,200 செயற்கை கைகால்களை தயாரித்து நன்கொடையாக அளித்துள்ளது.

### உங்கள் மாவட்டத்தில் முழுமையான கல்வியறிவை உறுதி செய்யுங்கள்

இந்தியாவை முழு கல்வியறிவு பெறச் செய்வதில் இந்திய ரொட்டேரியன்கள் அரசாங்கத்துடன் இணைந்து தீவிரமாக ஈடுபடுகின்றனர் என்று பானர்ஜி கூறினார். நம் நாட்டிலிருந்து போலியோவை ஒழிக்க உதவியது போல் இதையும் ஆதரிக்குமாறு அரசாங்கம் ரோட்டரியை கேட்டுக் கொண்டுள்ளது. தடுப்பூசிகள் நம் குழந்தைகளின் வாழ்க்கையைப் பாதுகாக்கின்றன; கல்வியறிவு சிறந்த வழியில் நம் குழந்தைகளை அவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கு தயார்படுத்துகிறது என்றார்.

குறைந்தபட்சம் மைசூர் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு குழந்தையும் கல்வியறிவு பெற்றவர்களாக இருப்பதை RC மைசூர் உறுதி செய்ய வேண்டும் என்றார். பெற்றோர்களையும் அவர்களது குழந்தைகளையும் சந்தியுங்கள், கிராமப் பள்ளிகளுக்குச் சென்று, அவர்களுக்கு ஆசிரியர்கள், வகுப்பறைகள் மற்றும் பெண் மாணவர்களுக்கான கழிப்பறைகள் இருப்பதை உறுதி செய்யுங்கள். மகாராஷ்டிரா மற்றும் குஜராத்தில் செய்வது போல, மாவட்டத்தின் ஒவ்வொரு பள்ளிக்கும் நீங்கள் ஒரு மடிக்கணினி அல்லது தகவல் தொழில்நுட்ப வசதியை வழங்கலாம். இந்த யோசனைகள் உங்களை உற்சாகப்படுத்துகிறதா? அப்படி செய்தால், இந்த சிறப்பு ஆண்டில் நாம் செல்ல வேண்டிய பாதை அதுதான்.

### உங்கள் TRF பங்களிப்பை அதிகரிக்கவும்

TRF பங்களிப்பில் சங்கத்தின் வரலாறு பற்றி தானும் ஆய்வு செய்துள்ளதாக பானர்ஜீ கூறினார். கடந்த 75 ஆண்டுகளில் TRF-க்கான மொத்த பங்களிப்பு $298,547 ஆகவும், அதன் ஆண்டு சராசரி வருடத்திற்கு சுமார் $12,000 முதல் $13,000 வரையும் இருந்துள்ளது. இந்த ஆண்டில் ஒரு உறுப்பினருக்கு ரூ.75,000 அல்லது ஒரு நபருக்கு $75 ஆக தரலாம். இந்த தொகையை விட உங்கள் பணியே மிக முக்கியமானதாகும்.

ரோட்டரி மைசூர் பள்ளியில் $48,000 மதிப்புள்ள கல்வியறிவு குறித்த ஒரு உலகளாவிய மானிய திட்டத்தை சங்கம் மேற்கொண்டிருந்தது. “இப் போது அதை விரிவுபடுத்த வேண்டிய



**மேலே:** *ஐடியல் ஜாவா ரோட்டரி பள்ளியில் கம்ப்யூட்டர் பயிலும் மாணவர்கள்.*

**வலது படம்:** *ரோட்டரி மைசூர் செயற்கைக் கால் மையத்தில் PRIP பானர்ஜீயுடன், DG மாத்யூ, சங்கத் தலைவர் விஸ்வநாத், PDGs லஷ்மி நாராயண், ரோஹிநாத் மற்றும் R குரு.*

**கீழே:** *ரோட்டரி மைசூர் நூலகம்.*







*ரோட்டரி இன்டக்ரேட்டட் பள்ளியில் PRIP பானர்ஜீயுடன் அளவலாவும் குழந்தைகள்.*

நேரம் வந்துவிட்டது. அதிகமான பள்ளிகளையும், அதிகமான குழந்தைகளையும் கவனியுங்கள். இந்த சிறப்பு ஆண்டில், பல இந்திய ரோட்டரியன்கள் செய்வதை போல, உங்கள் சங்கம் உங்கள் மாவட்டத்திற்கு உங்கள் முதல் AKS உறுப்பினரைக் கொடுக்கலாம்.

மேலும், மைசூர் போன்ற தொழில்நுட்ப நகரத்தில் சங்கம் இருப்பதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும், கணினி கல்வி இல்லாத பள்ளிகளில் மாணவர்களுக்கு மின்-கற்றலை கொண்டு வர உதவ வேண்டும் என்றும் அவர் பரிந்துரைத்தார். அவர்கள் 75வது ஆண்டைக் கொண்டாடும் அதேசமயம், அனைத்து ரோட்டரிகளும் இந்தியாவில் ரோட்டரியின் 100வது ஆண்டு கொண்டாடப்படுகிறது. ரோட்டரி முதன்முதலில் கொல்கத்தாவில் 1919-ல் உருவானது. அடுத்த மாதம், நியமனக் குழுவால் தேர்வு செய்யப்பட்டு இந்தியாவிற்கு நான்காவது RI தலைவர் கிடைத்தால் நம்முடைய மகிழ்ச்சி மேலும் பெருகும். இந்தியாவை சேர்ந்த நன்கு அறியப்பட்ட இரண்டு ரோட்டேரியன்கள் தேர்வுக்காக தங்கள் பெயர்களை தந்ததற்





காக நாம் கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டாமா? துரதிர்ஷ்டவசமாக, தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, உடல்நலக் காரணங்களால் விலகிய டெல்லியைச் சேர்ந்த PRID சுஷில் குப்தாவிற்காக நாம் வருந்துகிறோம். எனவே இந்தியாவை சேர்ந்த மற்றொரு தலைவரை பெறுவோம் என்று நாம் அனைவரும் நம்புவோம்.''

நகரம் மற்றும் மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் ஆளுநர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள் தெரிவித்தார் - 94 வயதானாலும் எப்போதும் கட்டுக்கோப்புடன் இருக்கும் வாசுதேவ மூர்த்தி, வெள்ளத் தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகள் கட்டித் தருவதில் சிறப்பாக செயல்படும் B M செங்கப்பா, H S சிவண்ணா, G K பாலகிருஷ்ணன், R குரு, ரவி அப்பாஜி, இந்த மாவட்டத்தில் ஒரு உதாரணமாக திகழும் R குரு, நான் வரவேண்டாம் என்றபோதும் என்னை பாம்பாய்க்கே வந்து அழைத்த லக்ஷ்மி நாராயண், மற்றும் ரோஹிநாத் சங்கத்தின் 100வது பிறந்தநாளைக் கொண்டாடும்போது தன்னை அழைக்குமாறு சங்க உறுப்பினர்களை பானர்ஜி வலி யுறுத்தினார். கூப்பிடுங்கள், நான் வருவேன், அப்போது எனக்கு வெறும் 102 வயது தான் ஆகியிருக்கும்! என்றார்.

### RC மைசூரின் வரலாறு

பிரமாண்டமான விழாவில் பங்கேற்பாளர்களை வரவேற்ற, PDG லட்சுமி நாராயண் சங்கத்தின் 75 ஆண்டுகள் பற்றிய கண்ணோட்டத்தை வழங்கினார். இந்த சங்கத்தை பெங்களூர் ரோட்டரி சங்கம் 1944-ல் நிறுவியது. RC பெங்களூரில் உறுப்பினராக இருந்த ஒரு A V அனதராமன், மார்ச் 7, 1944-ல் உருவாக்கினார்.

இந்த சங்கம் தொடங்கிய நாள் முதல் குழந்தைகள் நூலகம் அமைக்கும் முதல் திட்டத்தில் ஆரம்பித்து பல்வேறு சமுதாய தேவைகளை நிறைவேற்றி வருகிறது. ''இந்தியாவின் முதல் ரோட்டரி சங்கமான RC கல்கத்தா அந்த நகரத்தில் ஒரு நூலகத்தை அமைத்த பின்னர், 1955ம் ஆண்டில் எங்கள் நூலகம் அமைக்கப்பட்டது.''

ஆனால் அந்த நாட்களில் சங்கத்தின் மிகவும் எதிர் பார்க்கப்பட்ட திட்டம், ஐடியல் ஜாவா ரோட்டரி பள்ளியை அமைப்பதாகும் என PDG நாராயண் கூறினார். PDG ஃபரூக் இரானி மற்றும் ஷீலா இரானி தம்பதியினர் குழந்தைகள் கல்வியில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தனர், அவர்கள் ரோட்டரி நற்பணி மன்றத்துடன் இணைந்து மைசூரில் இந்த அற்புதமான முதல் ரோட்டரி பள்ளியைத் தொடங்கினர். அதில் இன்று வரை 50,000க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு கல்வி பயின்றுள்ளனர். அவர்களில் பலர் இன்று உலகம் முழுவதும் முக்கியமான பதவிகளை வகித்து வருகின்றனர். சமீபத்தில் பள்ளி அதன் 50வது ஆண்டு விழாவை கொண்டாடியது.

1997ம் ஆண்டில், PDG குருவின் முயற்சியால், ரோட்டரி மைசூர் செயற்கை உறுப்புகள் மையம் தொடங்கப்பட்டு, சமூகத்திற்கு மகத்தான சேவை செய்யப் பட்டு வருகிறது. அடுத்து ஒரு இரத்த வங்கி வந்தது, பின்னர் இரண்டாவது பள்ளியான, ஐரோட்டரி ஒருங்கிணைந்த பள்ளி தொடங்கப்பட்டது, இது மற்ற பள்ளிகளை போன்றது அல்ல. ஆட்டிசம் உள்ள குழந்தைகளை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும் என்று நாங்கள் நினைத்தோம், அவர்கள் தயாரானவுடன், அவர்கள்




ரஷீதா பகத்

*PRIP R குரு மற்றும் அவர் மனைவி சுலோச்சனா PRIP பானர்ஜி மற்றும் அவர் மனைவி பீனோட்டாவை கௌரவப்படுத்துகின்றனர்.*

சாதாரண பள்ளிகளில் சேர்க்கப் பட்டனர். சிறப்பு குழந்தைகளுக்கான பயிற்சி மையம் மற்றும் சாதாரண பள்ளி இரண்டையும் நாங்கள் கொண்டுள்ளோம்.

இந்த சிறப்புக் குழந்தைகளில் 10 முதல் 12 பேர் தங்குவதற்காக புதிய கட்டிடம் அமைத்துள்ளோம். இதுபோன்ற குழந்தைகளை அடையாளம் காண்பதற்காக ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்கும் திட்டமும் எங்களிடம் உள்ளது. பல பள்ளிகளில் குழந்தைகள் மெதுவாக கல்வி கற்கும்போது ஆசிரியர்களால் இந்த குழந்தைகளுக்கு கற்றல் குறைபாடு இருக்கிறது என்று புரிந்து கொள்ள முடிவதில்லை. அத்தகைய குழந்தைகளை அடையாளம் காண ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிப்பது முக்கியமாகும். PRIP பானர்ஜி இந்த மையத்திற்கு ரூ.1 லட்சம் நன்கொடை அளிப்பதாக கூறினார்.

RC மைசூர் பல ஆண்டுகளாக செய்து வரும் “அற்புதமான பணிகளுக்காக” DG ஜோசப் மேத்யூ வாழ்த்து தெரிவித்தார்.

இதுவரை மாவட்டத்தில் உள்ள 19 முக்கிய நன்கொடையாளர்களைப் பெற முடிந்ததை மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்; 20வது நபராக சேரும்படி உங்கள் சங்க உறுப்பினர் களில் ஒருவரான அமீர் வாக்கிடம் பேசினேன், அவரும் உடனடியாக ஒப்புக்கொண்டார். வாக் ஒரு 2ஆம் நிலை பிரதான நன்கொடையாளர், அவர் ஏற்கனவே TRF-க்கு $10,000 அளித்துள்ளார்.

PDG ரோஹிநாத் 50 ஆண்டு களாக இருக்கும் ரோட்டரி பள்ளி மற்றும் செயற்கை உறுப்புகள் மையம் போன்ற முன்மாதிரியான சேவை திட்டங்களுக்காக சங்கத்தை வாழ்த்தினார். சமுதாயத்திற்கு தொடர்ந்து சேவை செய்ய உறுப்பினர் கள் கடுமையாக உழைக்க வேண்டும் என்று சங்கத்தலைவர் சேத்தன் விஸ்வநாதன் வலியுறுத்தினார்.■

## ஒருங்கிணைந்த பள்ளியின் உருவாக்கம்

*ஒருங்கிணைந்த பள்ளியின் வரலாறு மற்றும் அதன் தேவை பற்றி PDG குரு கூறியதாவது: மைசூரில் ஏறக்குறைய ஒரு மில்லியன் மக்கள் தொகை இருக்கிறார்கள், ஆனால் இங்கே, மதிப்பீட்டு மற்றும் ஆலோசனை மையங்கள் இருந்தாலும் ஆட்டிசம் மற்றும் பிற கற்றல் குறைபாடுகள் போன்ற பிரச்சினைகளை கொண்ட குழந்தைகளின் கல்விக்காக பிரத்தியேக அமைப்பு இல்லை. அப்போதுதான் இதுபோன்ற குறைபாடுகள் உள்ள குழந்தைகளுக்கு ஒரு பள்ளியை உருவாக்க ரோட்டரி மைசூர் நினைத்தது. “அத்தகைய குழந்தைகள் ஒரு சாதாரண பள்ளியில் உள்ள குழந்தைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுவதற்காக அவர்களுக்கு சரியான பயிற்சி மற்றும் ஆதரவை வழங்குவதற்கான சூழ்நிலைகளை உருவாக்க நாங்கள் விரும்பினோம்.’’*

*புறநகரில் கிராமங்களால் சூழப் பட்டுள்ள மைசூரின் விரிவாக்க பகுதியான தட்டகல்லி ஆகும். ரோட்டரி மைசூர் நிறுவனங்கள் மற்றும் சங்க உறுப்பினர்களின் நன்கொடைகள் மூலம் சேகரிக்கப் பட்ட ரூ.1.72 கோடியை தனது அறக்கட்டளை மூலம் செலவிட்டது.*

Rotary PEOPLE OF ACTION

# பள்ளி மாணவர்களுக்கான காலை உணவு

ரோட்டரி செய்திக்குழு



"ஒரு பள்ளியில் நாங்கள் அறிமுகப்படுத்திய காலை உணவு திட்டம் அங்கு மேலும் 30 மாணவர்களை கொண்டு வரச் செய்தது'' என்று RC பேர்ல் சிட்டி தூத்துக்குடி, RID 3212 உறுப்பினர் M பாலமுருகன் புன்னகைக்கிறார்.

பெரும்பாலான மாணவர்கள் காலை உணவைத் தவிர்க்கிறார்கள் என்று கண்டறிந்த பிறகு சங்கம் இந்த திட்டத்தை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கையில் எடுத்துக்கொண்டது. அப்போது, கல்லூரி வளாகத்தில் மாணவர்களுக்காக ரத்ததான முகாமை நடத்தியிருந்தது. காலை உணவு சாப்பிட்டவர்கள் மட்டுமே இரத்த தானம் செய்ய தகுதியுடையவர்கள் என்று செவிலியர்கள் கூறியபோது, இரத்த தானம் செய்ய முன்வந்த 40 மாணவர்களில் 20 பேர் காலை உணவை எடுத்துக் கொள்ளவில்லை என்பதைக் கண்டு நாங்கள் அதிர்ச்சியடைந்தோம்.

பின்னர் சங்கம் உள்ளூரில் உள்ள பள்ளி மாணவர்கள் மீது இதேபோன்ற ஆய்வு நடத்திய பொழுது, அவர்களில் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பங்கு பேர் வெறும் வயிற்றுடன் பள்ளிக்கு வருகிறார்கள் எனத் தெரியவந்தது. "அவர்கள் இங்கே வழங்கப்படும் மதிய உணவை எதிர்பார்த்து, பள்ளிக்கு வந்தார்கள். இதனால், நகரத்தில் உள்ள SAV தொடக்கப்பள்ளியில் உள்ள 45 மாணவர்களுக்கும் காலை உணவு வழங்கும் திட்டத்தை நாங்கள் செயல்படுத்தினோம், என்கிறார் பாலமுருகன். இதனால், இந்த இரண்டு ஆண்டுகளில் மேலும் 30 மாணவர்கள் பள்ளியில் சேர்ந்துள்ளனர்.

சங்கம் இப்போது இந்த திட்டத்தை மற்ற பள்ளிகளுக்கும் விரிவுபடுத்த பங்குதாரர்களைத் தேடுகிறது. நகரத்தில் உள்ள நான்கு ரோட்டரி சங்கங்கள் அவ்வப்போது பணமாகவோ அல்லது பொருளாகவோ பங்களிக்கின்றன. ஒரு நாளுக்கான காலை உணவு வழங்க சுமார் 1,000 ரூபாய் செலவாகும். "ஒரு உறுப்பினர் எரிவாயு சிலிண்டர்களை ஸ்பான்சர் செய்கிறார், ஒரு உணவகம் பாதி சமைத்த பூரிகளை தருகிறது, அதை நாங்கள் பொரித்து வாரம் இருமுறை வழங்குகிறோம். மற்ற நாட்களில் இட்லி, பொங்கல் அல்லது கலந்த சாதம் வழங்குவோம்.

"ஒரு மன்னரைப் போல ஒருவர் காலை உணவை உட்கொள்ள வேண்டும் என்று கூறப்படுகிறது, குழந்தைகளுக்கு மிகவும் அவசியமான உணவை வழங்கி, அவர்களின் முகத்தில் தோன்றும் உணர்வை பார்க்கும்போது அது தெரிவதை கண்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்,'' என்றார். ■

## ITHFக்கான புதிய தலைவர்



RID 3262, PDG அஸ்வினி கார், 2019–21ம் ஆண்டுக்கான RI-ன் ITHF தலைவராக பொறுப்பேற்கிறார். அவருக்கு முன்னால் இருந்தவர் அமெரக்காவைச் சேர்ந்த ஷீலா ஹார்ட். 1989-ல் RI-ஆல் அங்கீகரிக்கப்பட்ட இந்த ஃபெல்லோஷிப் 60 நாடுகளில் 1,200 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. RC புவனேஸ்வர் மெடோஸ் உறுப்பினரான கார், இந்த பதவியில் பணியாற்றிய முதல் இந்தியர் ஆவார். பல்வேறு மாவட்டங்களில் ஒருங்கிணைப்பாளர்களை நியமிப்பதன் மூலம் ஃபெல்லோஷிப்பை ஊக்குவிக்கவும், உறுப்பினர்களை அதிகரிக்கவும், மேலும் பல நாடுகளை சேர்க்கவும் அவர் திட்டமிட்டுள்ளார். ITHF 2020 மே-இறுதியில் ஹவாயில் ரோட்டரி மாநாட்டிற்கு முன் ஒரு கப்பலில் சுற்றுலா பயணம் ஏற்பாடு செய்கிறது. ■

# "THE FUTURE BELONGS TO THOSE WHO BELIEVE

DARE TO DREAM
Rotary

## Rotary Institute
**Indore**
Zone 4,5,6&7 • 6-8 Dec 2019



Our distinguished guests:
Rtn. Mark Daniel Maloney
Rotary International President
and Rtn. Gay Maloney.

## Convener's Message



Dear friends,

The Institutes in our zones have been something we all look forward to. It is a place where we have fun, fellowship and of course meet friends from all corners of our zones. Madhavi and I are raring to welcome each one of you at the 2019 Zone Institute aptly named Dare To Dream, which will be held at the beautiful city of Indore, the city of the Holkars, the financial capital of Madhya Pradesh from 6th to 8th Dec 2019.

Indore will inspire you, captivate you and satisfy your intellectual and gastronomical pursuits. Indore has been adjudged the Cleanest City of India for the 3rd year in a row. The venue is the magnificent Brilliant Convention Center located in the heart of Indore. This city also boasts of 2 Jyotirlingas nearby and the famous 'Sarafa', a foodies paradise. We promise you good facilities, good food, an excellent program and world class entertainment.

Be inspired by our Rotary leaders as well as other leaders from different walks of life. A new place to come, see, interact and share. Rotary International President Mark Maloney and his gracious wife Gay will be happy to meet and interact with all of you and give us his message - Rotary Connects The World.

Under the chairmanship of PDG T.N. (Raju) Subramanian, the Institute team is all geared up to welcome you, host you, and make this an event to remember.

We look forward to your presence at the Indore Institute.

Warm regards,

Dr. Bharat Pandya
RI Director, 2019-21

## Chairman's Message



My dear friends,

Convener Bharat and I are overwhelmed by your response to the Zone Institute at Indore. We along with the Institute Team assure you of an Institute with a difference, which will keep you engrossed and interested, at all times during the proceedings. There will be time for batch mates to meet, provided of course I am intimated on time - an opportunity probably being given for the first time- just one of the many introductions at this Institute.

The entertainment is world class with a heady mix of Indian culture and dance and a blend of foreign artistes who will take your breath away with their performances. Indore is a foodies paradise. We are assuring you of a gourmet experience as never before and a new high every evening. Rest assured that the music on the beautiful lawns, will keep you glued to the dance floor in the evening. Those who are yet to register, please do so asap. Do feel free to contact me for any help or assistance. If you have any suggestions for the Institute, please communicate the same to me. Vidhya and I look forward to receiving and welcoming you at Indore.

With warm regards,

T.N.Subramanian
Chairman, Rotary Zone Institute, 2019

# "IN THE BEAUTY OF THEIR DREAMS"

## The Incredible Indore Awaits You


Indore Rajwada


Lalbagh Palace


Omkareshwar Jyotirlinga


Annapurna Mandir


Daly College


Mandav

## SCHEDULE OF EVENTS & TARIFFS

| REGISTRATION | | | |
|---|---|---|---|
| **Institute Registration** | | Couple | Single |
| Applicable till 31st Oct 2019 | | INR 25000 | INR 15000 |
| GETS (Couple) | 3rd - 5th Dec 2019 | INR 55000 | |
| DGs Review Meeting | 5th Dec 2019 | INR 7500 | INR 4000 |
| DGN Training Seminar | 5th Dec 2019 | INR 7500 | INR 4000 |
| Dist Trainers Seminar | 5th Dec 2019 | INR 7500 | INR 4000 |
| TRF Dinner | 5th Dec 2019 | INR 4500 | INR 2500 |
| TRF Seminar | 6th Dec 2019 (Morn) | INR 4500 | INR 2500 |
| **Hotel Accommodation** | | | |
| Radisson Blu Hotel | Double Executive | INR 8000 per night | |

Institute Brochure and the Registration Form are available on website for download at **www.rotaryinstitute2019indore.org**
For Institute Registration (Select any one method)
1 Please visit & complete online registration formalities.
2 You can download the Registration Form from website & send it to:

**PDG Bansi Dhurandhar**, Chair-Registration.
Microtrol Sterilisation Services Pvt. Ltd, A 101 & 102,
Tara Co-op Hsg Society, Srushti Complex, Saki Vihar Road,
Mumbai – 400072. Tel: 91 22 40579600


Brilliant Convention Centre

*For details and other Institute information please contact*
**PDG T. N. (Raju) Subramanian,** Institute Chair
Add: 303, Bhagyodaya, 79, Nagindas Master Rd., Fort, Mumbai- 400001
Email: rtn.subramanian@gmail.com Cell: 9322223732 / 9653623732

Rotary

# புதுப்பொலிவு பெற்ற அரசுப்பள்ளி

கிரண் ஜெஹ்ரா

புனேவிலிருந்து 60 கி.மீ., தொலைவில் தாம்னே என்ற கிராமம் உள்ளது, அங்குள்ள அரசுப் பள்ளியில் சுமார் 110 மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். “பெரும்பாலான நாள்களில் மின்சாரம் மற்றும் தண்ணீர் வசதி இருப்பதில்லை, இங்கே மழை வந்து விட்டால் அவ்வளவு தான் குழந்தைகளை வீட்டுக்கு அனுப்பிவிடுவோம், ஏனென்றால் மேற்கூரை விழுந்துவிடுமோ என்ற பயம் தான். ஒட்டு மொத்தமாக இந்தப் பள்ளி செயல்படாமலே இருந்தது,'' என்று சொல்கிறார் ஒரு பள்ளி ஆசிரியர் அமர் கேதாரி.

RID 1100 இங்கிலாந்து மற்றும் RC புனே ரிவர்சைடு போன்ற சங்கங் கள் மற்றும் TRF உடன் கைகோர்த்து RC புனே ஸ்போர்ட்ஸ் சிட்டி சங்கம் RID 3131 இப்பள்ளியை புனரமைத்துள்ளது, “பள்ளிக்கு வருவதற்கும் கற்றுக்கொள்வதற்கும் குழந்தைகளுக்கு உத்வேகம் அளிக்கும் ஒரு நல்ல சூழலை அமைக்க விரும்பினோம்,'' என்று சொல்கிறார் RC புனே ஸ்போர்ட்ஸ் சிட்டி சங்கத் தலைவர் சந்தேஷ் சாவந்த்.

உலகளாவிய மானியத் திட்டப்பணி உதவியின் மூலம், வகுப்பறைகளும் மேற்கூரைகளும் சரி செய்யப்பட்டது, அத்துடன் பள்ளிக்குச் சுற்றுச் சுவற்றுடன் கூடிய ஒரு புதிய நுழைவாயிலும் அமைக்கப்பட்டது. மேலும் பள்ளிக்கு மின்சாரம் மற்றும் தண்ணீர் வசதியை வழங்கியது. மாணவ மாணவிகளுக்குத் தனித்தனியான கழிவறை கள், கைகழுவும் தொட்டி மற்றும் UV முறையில் குடிநீர் சுத்திகரிக்கும் வசதி போன்றவையும் அமைக்கப்பட்டுள்ளது. ஒரு நூலகத்துடன் இணைந்து ரோட்டரி தொலைநிலை கல்வி முறையும் உருவாக்கப்பட்டுள்ளது. இசை வகுப்புகளுக்கென ஒரு தனியறை உள்ளது, பள்ளி மைதானம் சமப்படுத்தப்பட்டுள்ளது, மேலும் இசை மற்றும் விளையாட்டு உப கரணங்களும் இப்போது உள்ளது.

ஐந்து ஆசிரியர்-களுக்கான ஒரு ஆசிரியர் பயிற்சி திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

“கைப்பந்தா? அப்படினா என்ன?” என்று என்னிடம் கேட்ட காலம் போய் இப்போது மாநில அளவிலான போட்டியில் மாணவர்கள் வெற்றி பெற்று இருக்கிறார்கள்,'' என்று சொல்கிறார் கேதாரி. சமீபத்தில் மாவட்ட



*ரோட்டரியினருடன் பள்ளி மாணவிகள்.*

அளவிலான ஆங்கில மொழித்திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியில் கலந்துகொண்ட 406 பள்ளிகளில் இந்தப் பள்ளி இரண்டாமிடம் பெற்றது. இந்த மேம்பாட்டு நிகழ்ச்சியில் நடந்த நாடகப் போட்டியில் கலந்து கொண்ட ஆறாம் வகுப்பு மாணவியான அர்ச்சனா, “எனக்கு நடனமாடுவதும் நடிக்கவும் ரொம்ப பிடிக் கும், பள்ளியில் நான் பயிற்சி எடுத்ததால் முதல் முறையாகப் பரிசினை வென்றேன்,’’ என்று சொல்கிறாள். “இந்தப் புதிய பள்ளியில் பெஞ்சுகளும்



மின் விசிறிகளும் இருப்பது தான் நல்ல விஷயம். இனி நான் பெஞ்சில் உட்காரு வேன், இனி வியர்க்கவும் செய்யாது,’’ என்று சொல் கிறான் ஐந்தாம் வகுப்பு மாணவன் ரோஷன்.

இந்த பள்ளி தொடங்கிய 61 ஆண்டுகளில் இப் போது தான் இந்த பள்ளி மாணவர்கள் முதல் முறையாக மாநில கல்வி உதவித்தொகைத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். “மாணவர் வருகை விகிதம் இப்போது அதிகமாகி விட்டது, மேலும் எங்களுடைய “பிரபலமற்ற பள்ளி’ இப்போது மாநில அளவில் அங்கீகாரம் பெறத் துவங்கியுள்ளது. இவை அனைத்தும் சாத்தியமானதற்கு காரணம் ரோட்டரி தான்,’’ என்று பெருமை பொங்கச் சொல்கிறார் கேதாரி. ■

# மார்பக புற்றுநோயைக் கண்டறிய மேமோகிராபி வேன்

ரோட்டரி செய்திக்குழு




*மேமோக்ராஃபி வேன் சாவியை IPDG சுபாஷ் ஜெயின் சாரதா பல்கலைக்கழகம் துணை வேந்தர் PK குப்தாவிடம் வழங்குகிறார்.*

RC டெல்லி மோனார்க், RID 3012 மார்பக புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை பரப்புவதற்காக புரோஜெக்ட் ஆரோக்யாவை அறிமுகப்படுத்தியது மேலும் உத்திர பிரதேசம் மற்றும் ஹரியானாவின் கிராமப்புறங்களில் மார்பக புற்றுநோய் பரிசோதனை செய்ய மேமோகிராபி வேன் வழங்கியுள்ளது. சாரதா யூனிவர்சிட்டி வேந்தர் P K குப்தா, கோவா மாநில சுகாதார சேவைகள் இயக்குநர் Dr சஞ்சீவ் தல்வி, அப்போதைய சங்க தலைவர் நமன் ஜெயின் மற்றும் செயலாளர் உமாங் குப்தா ஆகியோர் முன்னிலையில் IPDG சுபாஷ் ஜெய்னால் கிரேட்டர் நொய்டாவின் சாரதா மருத்துவமனை யிடம் வேன் ஒப்படைக்கப்பட்டது.

102,037 டாலர் செலவில், இந்த திட்டத்திற்கு சர்வதேச பங்குதாரர்களாக TRF மற்றும் RC காத்மாண்டு, RID 3292 மூலம் உலகளாவிய மானியமாக நிதியளிக்கப்பட்டது.■

# லெபனான் நாட்டில் சுகாதாரப் பணிகள்

ஆனி ஃபோர்ட்



*கிழக்கு மெடிட்டரேனியன் கடலில் கலக்கும் பிளாஸ்டிக் மற்றும் கழிவுகள்.*

லெபனான் நாட்டின் மலைப் பகுதி அது. நாட்டில் அரிதாகக் கிடைக்கும் ஒரு பொக்கிஷம் அங்கே அபரிமிதமாகக் கிடைக்கிறது. அது தான் தண்ணீர் ! பனி மலையல்லவா, தெளிந்த நீரை அது வாரி வழங்குகிறது.

மத்திய கிழக்கு நாடுகளிலேயே எங்கள் நாட்டில்தான் ஏராளமாகத் தண்ணீர் கிடைக்கிறது. நாங்கள் இந்த மண்டலத்திலேயே பணக்கார நாடு என்று லெபனான், பாப்டா ரோட்டரி சங்கத்தை சேர்ந்த நஸீ கட்டாஸ் கூறுகிறார்.

இருந்தாலும் பனிமூடிய இந்த மலைகளுக்கு ஆயிரம் அடி கீழே நிலப் பரப்பில் வசிப்போர் தண்ணீருக்கு அல்லாடுகிறார்கள். அங்கே பத்து லட்சம் சிரியா அகதிகளும் தங்கியுள்ளனர். அவர்கள் அனைவருக்கும் குடிக்கவோ, குளிக்கவோ சுத்தமான தண்ணீர் கிடைப்பதில்லை.

மலையிலிருந்து வரும் தெளிந்த நீர் பாழடைந்த குழாய்களின் மூலமாக வருகிறது. அத்துடன், கழிவுநீரால் கிணற்று நீரும், மாசுகளால் நதி நீரும் வீணாகியுள்ளன. இந்த நீரைப் பயன்படுத்துவோர் தோல் நோய்க்கு ஆளாகிறார்கள். வயிற்று உபாதைகளும் ஏற்படுகின்றன. இதனால் கல்விக் கூடங்களுக்குச் செல்ல இயலவில்லை. பணிக்கும் செல்ல முடிவதில்லை.

பெய்ரூட் ஆகிய நகரங்களில் சுத்தமான நீர் வேண்டுமானால், தனியாரிடம் காசு கொடுத்துதான் பொதுமக்கள் வாங்குகிறார்கள். இப்படித் தண்ணீருக்காகவே மாத வருவாயில் 15 சதவீதம் செலவிடுகிறார்கள்.

பெய்ரூட் நகருக்கு வெளியே குப்பைகள் மலைபோல் குவிந்துள்ளன என்று சுவிட்சர்லாந்து நாட்டின் வில்லிசவ் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினர் கூறினார். ஆலைக் கழிவுகள் நதியில் விடப்படுகின்றன. அந்த மாசு கலந்த நீரில்தான் விவசாயம் நடைபெறுகிறது. அந்த மாசு கடைசியில் நாம் சாப்பிடும் உணவில் வந்து சேருகிறது என்றார் அவர்.

ரோட்டரி உறுப்பினர்கள் கட்டாஸ் மார்ட்டி மற்றும் சில ரோட்டேரியன்கள் சேர்ந்து லெபனான் தண்ணீரை சுத்திகரித்துப் பயன்படுத்தும் பணியில் ஈடுபடுகிறார்கள். இதற்காக அவர்கள் சுவிஸ் நாட்டின் சீவாஸ் எனப்படும் தன்னார்வ அமைப்பான நீர் மேலாண்மை சேவைக்கான சர்வதேச மையத்துடன் இணைந்து செயல்படுகிறார்கள். இந்த அமைப்பு நீடித்த தண்ணீர் இருப்பு, வணிக வளர்ச்சியுடன் கூடிய வளங்களின் மேலாண்மை ஆகியவை குறித்த பணிகளை மேற்கொண்டு வருகிறது. லெபனான் நாட்டின் தொழில்முனைவோருக்கு உரிய ஆதரவையும் ஊக்கத்தையும் அளித்து வருகிறது. இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதன் மூலம் வருவாய் கிடைக்கும் என்பதால், மக்கள் நீண்டகாலத் தீர்வுகளுக்காக உறுதி பூண்டுள்ளனர் என்றார் மார்ட்டி.

இந்த தொழில்முனைவுத் திட்டமே ரோட்டரி உறுப்பினர் என்ற முறையில் 2016ம் ஆண்டு கலந்து கொண்ட ஒரு கருத்தரங்கின் மூலம் கற்றுக் கொண்டதாக மார்ட்டி தெரிவித்தார். அப்போது குடிநீர், சுகாதாரம், மக்கள் நல்வாழ்வு ஆகிய திட்டங்களுக்காக TRF உதவ உறுதி பூண்டதை அறிந்து கொண்டார். அப்போதுதான் சீவாஸ் அமைப்பும் அவரது நினைவுக்கு வந்தது.

லெபனான் ரோட்டரி சங்கங்கள் தண்ணீர்த் தேவை குறித்த திட்டங்களில் ஏற்கெனவே ஈடுபட்டு வருகின்றன. 2013ம் ஆண்டில் RID 2452 ஆளுநர் ஜமீல் மவுவாட் மற்றும் இதர ரோட்டரி நிர்வாகிகள் பல ஆண்டுக்குத் தேவையான திட்டத்தைத் தொடங்கினர். அதில் லெபனான் நாட்டின் அனைத்து ரோட்டரி சங்கங்களும் ஈடுபட்டன. அதன்படி அனைத்துப் பள்ளிகளுக்கும் தண்ணீருக்குத் தேவையான தொட்டிகள், வடிகட்டிகள் வழங்கப்பட்டன.

லெபனானில் நிலவும் இன்னொரு பிரச்சினை வேலையில்லாத் திண்டாட்டம். குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதைப் போலவே

வேலைவாய்ப்புகளை உருவாக்குவதும் ரோட்டரி சங்கமும் சீவாஸ் அமைப்பும் இணைந்து மேற்கொள்ள வேண்டிய சரியான திட்டங்களாகும். அதே சமயம் மக்களின் சுகாதாரம், நல்வாழ்வு ஆகிய திட்டங்களில் கவனம் செலுத்தும்படி தொழில்முனைவோரை வலியுறுத்தும் நிலையிலும் இரு அமைப்புகளும் உள்ளன.

இத்துறையில் பெரிய அளவுக்கு தொழில்முனைவோர் இல்லை. காரணம் இதில் கைமேல் காசு கிடைத்துவிடுவதில்லை. மேலும், அவர்கள் ஒட்டுமொத்த மத்திய கிழக்கு நாடுகளுக்குத் தேவையான வணிகத்தில் தான் ஆர்வம் காட்டுகிறார்கள். இது வெறும் உள்ளூர்ப் பிரச்சினை என்று நினைக்கிறார்கள் என்றார் கட்டாஸ்.

வில்லிசன் ரோட்டரி சங்கம், பாப்டா ரோட்டரி சங்கம், த்ரிபோலி காஸ்மபாலிஸ் (Tripoli Cosmopolis) ரோட்டரி சங்கம், சைடா (Saida) ரோட்டரி சங்கம் ஆகியவற்றுடன் சீவாஸ் தன்னார்வ நிறுவனத்தையும் இணைத்து 2,33,000 டாலர் (சுமார் ரூ.1.62 கோடி) மதிப்பிட்டில் பணியாட்களை நியமித்து, பயிற்சி அளித்து, புதுமையான தண்ணீர், சுகாதார மேம்பாட்டுக்கான யோசனைகளை உருவாக்குவதற்கு உள்ளூர் தொழில்முனைவோருக்கு ஆதரவளிக்கப்படுகிறது. இதற்கு சுவிஸ் நாட்டு மேம்பாடு, ஒத்துழைப்பு முகமை, வில்லிசவ் ரோட்டரி சங்கம், ரோட்டரி 2452வது மாவட்டம், சீவாஸ் மற்றும் அதன் கூட்டாளிகள், TRFன் உலகளாவிய மானியம் ஆகியவற்றின் நிதி அளிக்கப்பட்டது. இத்திட்டம் 2018ம் ஆண்டு பிப்ரவரியில் தொடங்கியது.

இப்பணிக்காக சீவாஸ் அமைப்பு ஒரு பயிலரங்கை நடத்தியது. அதன் மூலம் தொழில்முனைவோர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்கள் தேசிய அளவில் தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக விவாதித்து, தங்களது யோசனைகளை அளிப்பர். புதிய யோசனைகளுக்காக அவர்கள் நாள் முழுவதும் விவாதித்தனர். வல்லுநர்கள் அவற்றில் சிலவற்றைத் தேர்ந்தெடுத்தனர். ஆரம்ப கட்டத்தில் 15 தொடக்க நிலைத் தொழில்களை ஆரம்பிப்பதுதான் நோக்கம். மேலும் பல யோசனைகள் உள்ளன என்று மார்ட்டி கூறினார்.

மார்ச் மாதம் முதல் ஜூலை முழுவதும் தொழில்முனைவுக்கான பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. ஆகஸ்ட் முதல் நவம்பர் வரையில் உள்ளூர் தொழில் வர்த்தக வல்லுநர்கள் தனிப்பட்ட முறையில் பயிற்சி அளித்தனர். இப்பயிற்சிகளை ரோட்டரி அமைப்பினரும் சீவாஸ் அமைப்பினரும் அளித்தனர்.

நாட்டில் எப்படி பணிகள் நடைபெறுகின்றன, தொழில்முனைவோர் தங்களது திட்டங்களை எப்படி அதிகாரிகள், அரசிடம் எடுத்துச் சென்று, தங்களது கொள்கைகளைச் செயல்படுத்துவதற்கான வழிவகைகள் காண்பது ஆகியவை குறித்து ரோட்டரி அமைப்பினர் அளித்தனர். நீரியல் வல்லுநர்கள், நீடித்த வளங்கள் குறித்த மேலாண்மை ஆகியவற்றை சீவாஸ் அமைப்பினர் வரவழைத்தனர் என்று மார்ட்டி கூறினார். புதிய தொழில்முனைவோர் தொழில் தொடங்குவதற்கு நிதி நிறுவனங்கள், வங்கிகள் ஆகியவற்றுடன் லெபனீஸ் ரோட்டரி சங்கத்தினர் தொடர்புகளை அமைத்துத் தந்தனர்.

அத்திட்டங்களில் ஆறு திட்டங்கள் கடந்த நவம்பரில் தேர்ந்தெடுக்கப்பட்டன. பெய்ரூட்டில் நீரியல், வணிக வல்லுநர்கள், உள்ளூர் ஊடகங்கள், மார்ட்டி உள்ளிட்ட பல ரோட்டரி அமைப்புகளின் பார்வையாளர்கள் முன்னிலையில் தொழில்முனைவோரால் விளக்கப்பட்டன.

வெற்றிபெற்ற பிளாஸ்டிக் பீச் நிறுவனத்தைச் சேர்ந்த ரால்ஃப் (Ralph), ஜியார்ஜியோ டியாப் (Georgio Diab) ஆகியோர் 5,000 டாலர் பரிசை (ரூ.3,45,970) பெற்றனர். இந்தத் தொகை அவர்களது தொழிலுக்குப் பயன்தரும். அவர்களது பிளாஸ்டிக் பீச் நிறுவனம் ரெஸ்டாரண்ட் போன்ற பல இடங்களில் பிளாஸ்டிக்கை மாதந்தோறும் பணம் கொடுத்து வாங்கிச் செல்கின்றன. இவ்வாறு அவை அகற்றப்படுவதால், பிளாஸ்டிக் தொல்லை இல்லை. இத்தொழில் மூலமும் கடற்கரையைச் சுத்தமாக்குவதன் மூலமும் ஏராளமானோருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது.

இத்துடன் தொழில் முனைவோருக்கான பயிற்சி முடிவதில்லை. சுவிஸ் வளர்ச்சி முகமைகள், தனியார் நிறுவனங்களின் ஆதரவுடன் இது ஆண்டுதோறும் நடத்தப்படும் என்று மார்ட்டி கூறினார்.

லெபனீஸ் ரோட்டரி திட்டத்தின் கீழ் குடிநீர்த் தொட்டிகள், வடிகட்டிகள் அமைக்கப்படுகின்றன. 2019ம் ஆண்டில் அனைத்துப் பள்ளிகளுக்கும் இவை வழங்கப்பட்டுவிடும். அடுத்த கட்டமாக விழிப்புணர்வுத் திட்டம் மேற்கொள்ளப்படும் என்று திரிபோலி - மாரட் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த அகமத் ஹுஸைனி (Ahmad Husseini) தெரிவித்தார். அவர் இத் திட்டத்தில் ஆரம்பம் முதலே முழு கவனம் செலுத்தி வருகிறார்.

பள்ளிகளில் ஆசிரியர்களுக்கு நீரை உரிய வகையில் பயன்படுத்துதல், சுகாதாரம், ஆரோக்கியம் ஆகிவை தொடர்பாகப் பயிற்சி அளிக்கிறோம். அடுத்த ஆண்டு சிறைகளில் குடிநீர் வடிகட்டிகளை நிறுவப் போகிறோம் என்றார்.

லெபனானில் ஓடும் ஓடை கூட பெரிய நதியாக மாறக் கூடும் என்ற நம்பிக்கையோடு லெபனான் ரோட்டரி அமைப்பினர் இப்படித்தான் தண்ணீரை விநியோகிக்கிறார்கள்.


பிளாஸ்டிக் புட்டிகளை தூளாக்கும் கருவி.

தி ரொட்டேரியன்.

Rotary PEOPLE OF ACTION

# புத்தொளி பெற்ற காம்பிய நாட்டுக் குழந்தைகள்

M V ரவிக்குமார்



*காம்பியாவில் இந்திய மருத்துவக்குழு.*

மேற்கு ஆப்ரிக்காவைச் சேர்ந்த காம்பியாவில் வசிக்கும் 68 வயதாகும் ஜெஃப்ரீ ஹன்விக்ஸ் (ஜெஃப்) என்ற ஆங்கிலேயர் 2002 ஆம் ஆண்டு முதல் மாற்றுத் திறனாளி குழந்தைகளின் நலனுக்காகப் பாடுபட்டுக் கொண்டிருந்தார். கடந்த இரு வருடங்களுக்கு மேலாக ஜெஃப் ஒரு வினோதமான கண் பிரச்சனையை சந்தித்துக் கொண்டிருந்தார். அது ‘இடது கண்ணின் கீழ் இமை முடி உள்பிறட்சி’ என்று கண்டறியப்பட்டது, இந்த நோயினால் கண்ணிமைகள் உள்நோக்கி வளர ஆரம்பித்து கண்ணை உறுத்திக் கொண்டே இருக்கும். ஒன்சைட் திட்டப்பணியின் பிராந்திய கண்-பராமரிப்பு ஒருங்கிணைப்பாளரான சன்யி செர்கோவின் அறிவுரையின் பேரில், அவர் காம்பியாவில் கலிஃபங் இடத்தில் உள்ள மிகப்பெரிய கண் மருத்துவமனையான ஷேக் ஜாயீத் பிராந்திய கண் பராமரிப்பு மையத்திற்குச் (SZRECC) சென்றார். உடனடித் தீர்வாக மருத்துவர்களால் செய்யமுடிந்தது கண்ணிமைகளை வெட்டுவது மட்டுமே, இது ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளாக குறிப்பிட்ட இடைவெளியில் செய்யப்பட்டு வந்தது.

ஏப்ரல் மாதத்தில் ஒரு அறுவைசிகிச்சை திட்டத்திற்காக இந்திய கண் மருத்துவர்கள் காம்பியாவிற்குச் சென்ற போது, ஒரு நிரந்தரத் தீர்வை ஜெஃப் அடைந்தார். இந்த திட்டத்தின் ஒரு அங்கமாக இருந்த ஐதராபாத்தைச் சேர்ந்த மூத்த கண் மருத்துவர் Dr மிலிந்த் பிதே சிகிச்சை அளித்தார்.

விழித்திரைப் படல நிபுணரும் பெங்களூர் D 3190 E சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினருமான Dr K V ரவிசங்கர் அவர்கள் காம்பியா திட்டத்திற்குத் தலைமை தாங்கினார். பெரியவர்களுக்கு சிகிச்சை அளிப்பது தவிர, முக்கியமாக ஏழைக் குழந்தைகள் கண்பார்வை இழப்பதைத் தடுக்கும் 21 அறுவை சிகிச்சை திட்டங்களுக்காக, பல்வேறு ஆப்ரிக்க நாடுகளுக்கும் வங்கதேசத்திற்கும் சென்று வந்திருக்கிறார். சுமார் இரண்டு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட இந்த நாட்டில் வெறும் மூன்று கண் மருத்துவர்களே உள்ளனர், இதில் இருவர் நைஜீரியாவைச் சேர்ந்தவர்கள். 2008ம் ஆண்டு SZRECC தொடங்கப்பட்டதிலிருந்து, மத்திய சுகாதாரசேவை அமைச்சகம், மைசூரு உஷா கிரண் கண் மருத்துவமனையின் இயக்குனரான Dr ரவிசங்கரிடம், சிக்கலான கண் கோளாறுகளினால் பாதிக்கப்படும் குழந்தைகளுக்குச் சிகிச்சையளிக்க வேண்டுகோள் விடுத்தது.

Dr ரவிசங்கர் மற்றும் டாக்டர் மிலிந்த் பிதே என்ற இரு மூத்த கண் மருத்துவர்

களும், மயக்க மருந்து நிபுணர் K R வசந்தகுமார் அவர்களும் இந்த திட்டத்தில் பங்கெடுத்தனர். அங்கே தங்கியிருந்த ஆறு நாட்களில் இந்த குழு சுமார் 36 நோயாளிகளுக்கு 39 அறுவைசிகிச்சை களைச் செய்தது. பயணம், தங்குவது, உணவு, உள்ளூர் பயணம், அறுவை சிகிச்சைக்கான செலவு, IOL-கள் மற்றும் இதர செலவுகளுக்காக 20,000 வரை நிதி திரட்டினோம். இந்தியாவைச் சேர்ந்த ஐவரி சிட்டி மைசூரு, RID 3181-ஐ சேர்ந்த மைசூரு சென்ட்ரல் மற்றும் மைசூரு மிட்டவுண், RID 3190-ஐ சேர்ந்த பெங்களூர் D 3190 E சங்கம், கப்பன்பார்க், கோரமங்கலா சங்கம், போர்ச்சுக்கலைச் சேர்ந்த ரோட்டரி சென் ஹோரா-டா-ஹோரா சங்கம RID 1970 மற்றும் மேற்கு ஆப்ரிக்கா RID 9101-ஐ சேர்ந்த மூன்று சங்கங் கள் இதில் பங்கெடுத்தது. ஆப்ரிக்காவில் கண் பராமரிப்பு திட்டப்பணி களுக்கு காம்பேட் பிளைண்ட்ன்ஸ் இன்டர் நேஷனல் என்ற அமெரிக்கா வைச் சேர்ந்த ஒரு NGO தொடர்ந்து நிதியுதவி செய்து வருகிறது.

2017ம் ஆண்டில் எங்களுடைய முதல் பயணத்தின் போது, காம்பியாவில் உள்ள மூன்று ரோட்டரி சங்கங் களில் மொத்தம் 76 உறுப்பினர்கள் இருந்தனர். ரொட்டேரியன்களின் மனிதநேய சேவைகளால் உத்வேகம் கொண்டும், குழந்தைகளுக்கு பார்வை கொடுக்கும் எங்களது அறுவைசிகிச்சைத் திட்டங்களின் தாக்கத்தால் ஈர்க்கப்பட்டும் நிறைய பேர் இந்தத் திட்டப்பணியில் பங்கெடுக்கிறார்கள், மேலும் காம்பியாவில் கூடுதலாக இரண்டு சங்கங்களையும் சேர்த்து உறுப்பினர் எண்ணிக்கை 120 ஆக மாறியுள்ளது என்று ராம் மோகன் கூறினார்.

இந்த கட்டுரையை எழுதியவர் RC பெங்களூர் கோரமங்கலா RID 3190 சங்கத்தைச் சேர்ந்தவர்.

# புனேயில் ரோட்டரி CSR விருதுகள்

ரோட்டரி செய்திக்குழு




TRF *அறங்காவலர் குலாம் வஹன்வதி,* IPDG *ஷைலேஷ் பாலேக்கர் கார்ப்பரேட் பிரதிநிதிகளுடன்.*

RID 3131க்கு சமீபத்தில் ஒரு தனித்துவமான யோசனை உதித்து உள்ளது, அதுதான் சமூகத்தில் ரோட்டரியின் இருப்பை மேம்படுத்திக் காட்ட அறிமுகம் செய்யப்படுகிற ரோட்டரி CSR விருதுகள். டைம்ஸ் ஆஃப் இந்தியா மற்றும் எகனாமிக் டைம்ஸ் உடன் இணைந்து இம்மாவட்டம் புது வித யோசனையை வெளிப்படுத்தியுள்ளது. கார்பரேட் நிறுவனங்களின் CSR தலைவர்கள் மற்றும் MD-கள் மற்றும் CEOக்கள் போன்றோருக்கு ரோட்டரியின் பல்வேறு திட்டப் பணிகளை வெளிப்படுத்தும் ஒரு முழு படம் திரையிடப்பட்டது. ரோட்டரி எழுத்தறிவு மற்றும் WinS திட்டங் களைப் பற்றி அறிந்து கொள்வதற்கான ஒரு தளத்தை இது வழங்கியது. “இந்த நிகழ்ச்சி நமது மனிதநேயத் திட்டப்பணிகளில் தங்களுடைய CSR நிதிகளை முதலீடு செய்வதற்காக கார்பரேட் தலைவர்களுடன் மனந்திறந்து பேச எங்களுக்கு உதவியது, மேலும் இது ரோட்டரியுடன் கூட்டு சேர்வதற்கான நம்பிக்கையை கட்டாயம் விதைக்கும்,” என்று RC பூனா சென்டரல் தலைவர் ரவி கபூர் கூறினார்.

உற்பத்தி, IT, IT-சாராத மற்றும் புது நிறுவனங்கள் போன்ற நான்கு பிரிவுகளில் விருதுகள் வழங்கப் பட்டது.

TRF அறங்காவலர் குலாம் வாஹன்வதி, RI தெற்காசியா அலுவலகத்தைச் சேர்ந்த மேலாளர் (TRF) சஞ்சய் பார்மர் மற்றும் மேலாளர் (CSR) பாவ்னா வர்மா ஆகியோர் கலந்துகொண்டனர், இந்நிகழ்ச்சிக்கு பாராளுமன்ற உறுப்பினர் கிரிஷ் பாபத் மற்றும் NGO மேஜிக் பஸ் நிறுவனத்தின் உலகளாவிய CEO ஜெயந்த் ரஸ்தோகி ஆகியோர் தலைமை தாங்கினர்.■

# சத்ரியா –
# துறவிகள் நாட்டியம்

சீதா ரத்னாக்கர்



இந்தியாவில் நாடகக் கலையின் தொடக்கத்துக்கு தெய்வீக மூலம் இருப்பதாக நம்பப்படுகிறது. சம்ஸ்கிருதத்தில் உள்ள நான்கு வேதங்களுக்கு மாற்றமாக, எல்லோரும் எளிதாகப் புரிந்துகொள்ளக்கூடிய ஓர் ஐந்தாம் வேதம் வேண்டும் என்று சிருஷ்டிகர்த்தா பிரம்மாவிடம் கேட்கப்பட்டது. பிரம்மா மற்ற கடவுள்களின் உதவியோடு நாட்டிய வேதத்தை படைத்து, அதை புராண கால பரத முனிக்கு கற்றுக்கொடுத்தார், அவர் அந்தப் போதனைகளை நாட்டிய சாஸ்திரம் என்ற நூலில் பதித்து வைத்தார். இதுவே இந்தியாவிலுள்ள அனைத்துப் பாரம்பரிய நாட்டிய, நாடக வடிவங்களுக்கும் மூல நூல். மட்டுமல்லாது, அநேகமாக உலகிலேயே மிகப்பெரிய மற்றும் மிகச் சம்பூரணமான கலைக் கையேடு. நாட்டிய சாஸ்திரத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தியாவில் எட்டு பாரம்பரிய நாட்டிய வடிவங்கள் உள்ளன. அஸ்ஸாமில் தோற்றம்கண்ட சத்ரியா 21ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தான் சங்கீத் நாடக் அகாடெமியால் எட்டாவது பாரம்பரிய நாட்டியமாக அங்கீகரிக்கப்பட்டது, எனினும் இது பல நூற்றாண்டுகளாக சத்ரா எனப்படும் வைணவ மடங்களிலுள்ள ஆண் துறவிகளால் பிரதேயகமாக ஆடப்பட்டு வந்தது. பொக்தர்கள் எனப்பட்ட இந்தத் துறவிகள், தங்கள் அன்றாட சடங்குகளின் ஒரு பகுதியாக, பாகவத புராணத்தில் உள்ள கிருஷ்ண லீலைகளை நாட்டிய-நாடக வடிவில் அரங்கேற்றுவார்கள். மகாபுருஷ சீமந்த சங்கரதேவா 15ஆம் நூற்றாண்டில் இந்த நாட்டியத்தை பொதுப் பண்பாடாக மாற்றினார். அவர் பண்டைய நூல்களைக் கொண்டு இதை முறைப்படுத்தி, கிருஷ்ண பக்தியை வெளிப்படுத்தும் நாடக நாட்டியத்தை (நிருத்தா மற்றும் நிருத்தியா) அறிமுகப்படுத்தினார். வைணவ பக்தி இயக்கத்தின் மூலம் சத்ரியா பிரபலம் அடைந்து, கடந்த ஐந்து நூற்றாண்டுகளில் ஒரு பாரம்பரியக் கலையாக உருவெடுத்துள்ளது. இப்போது ஆண், பெண் என இரு பாலரும் இந்த நாட்டியம் ஆடுகின்றனர், அவர்களில் சத்ராக்கள் (சமய நிலையங்களின் உறுப்பினர்கள்) அல்லாதோரும் அடங்குவர். இந்த நாட்டியம் ஆடுபவர்கள் சைவ தத்துவங்களையும் சேர்த்துக்கொண்டு மற்றும் புராணத்துக்கு அப்பால் அதை விரிவுபடுத்தி பல்வேறுபட்ட வகையறாக்களை உருவாக்கியுள்ளனர்.

சத்ரியா எவ்வொரு சிலைக்கு முன்பும் ஆடப்படுவதில்லை. மாறாக, நம்கார் என்ற நாட்டியக் கூடத்தின் மணிக்கூடு அல்லது கிழக்குப்புற மூலையில் வைக்கப்பட்டுள்ள பாகவத புராணத்தின் பிரதிக்கு முன்பாக ஆடப்படுவதே பண்பாடு. சூத்ரதாரா அல்லது சூத்ரபங்கி, மற்றும் கதாபாத்திரத்துக்கு உரிய பாங்கி, பிரவேஷ், நிருத்தியா, ஜுமுரா போன்ற பல பாணிகள் உள்ளன. சூத்ரதாராவில் வைணவத்தின் ஆன்மீக அறநெறிகள் முற்றிலும் பாரம்பரிய வடிவமான நிருத்தா, நிருத்தியா மற்றும் நாட்டியா முறையில், பார்வையாளர்களுக்குப் புரியும்படி வட்டார மொழி வர்ணனையுடன் வழங்கப்படுகிறது. அங்கியா நாட் என்பது ஒற்றைக் காட்சி நாடகங்கள் கொண்ட ஒரு துணை வகை. கதைப்பாடல், நாட்டியம் மற்றும் நாடகம் அடங்கியுள்ள இது பொதுவாக மடங்களின் நாட்டிய சமூகக் கூடங்களில் நிகழ்த்தப்படுகின்றன. இவை பொதுவாக கிருஷ்ணா, ராதா மற்றும் வெவ்வேறு விஷ்ணு அவதாரங்களை மையமாகக் கொண்டிருக்கும். இன்றும் பிரபலமாக உள்ள பல நாட்டிய-நாடகங்கள், 15ஆம் மற்றும் 16ஆம் நூற்றாண்டுகளில் அஸ்ஸாமிய கவி முனிவர் சங்கரதேவா, அவரது பிரதான சீடர் மாதவதேவா ஆகியோரால் இயற்றப்பட்டவை. சங்கரதேவாவின் பக்தி ரத்னகராவை முழுமைப்படுத்தும் வகையில் அவருடைய சங்கீத ரத்னகராவும் சேர்க்கப்பட்டுள்ளது, இதில் உபநிடங்கள், பகவத் கீதை, யோகா மற்றும் வேதாந்தம் சார்ந்த மையக் கருத்துக்கள் இழைந்தோடுகின்றன, மேலும் சத்தியம், அஹிம்சை போன்ற அறநெறிகளும் சேர்ந்துள்ளன, இதுவே சத்ரியாவுக்கு சமய அஸ்திவாரமாக விளங்குகிறது. சமய நெறிகளும் வாழ்வின் ஆனந்தமும் நாடகக் கலைகளுடன் பினைந்துள்ளதாக சங்கரதேவா நம்பினார், எனவே இந்து மடாதிபதிகள் தங்களுடைய பொறுப்புக் காலத்தில் குறைந்தது ஒரு



நாடகமாவது இயற்றவேண்டும் என்று உபதேசித்தார்.

சத்ரிய வகையறாவில் (மார்க்கம்) இரண்டு வடிவங்கள் உள்ளன. ஒன்று, பௌரஷிக் பங்கி எனப்படும் ஆண்மக்களுக்கான பாணி. அதில் குதித்தலும் பாய்ச்சலும் அடங்கி, இயக்கத் துடிப்புடன் இருக்கும். இன்னொன்று, ஸ்த்ரி பங்கி எனப்படும் பெண்மக்களுக்கான பாணி. அதில் நயமான நகர்வுகளும் அசைவுகளும் அடங்கியிருக்கும். அனைத்துப் பிரதான இந்தியப் பாரம்பரிய நாட்டிய வடிவங்களைப் போல, சத்ரியாவிலும் நிருத்தா (பூரண நடனம்), நிருத்தியா (பாவனை நடனம்) மற்றும் நாட்டியா (நாடக நடனம்) இடம்பெற்றுள்ளன. நிருத்தா ஆட்டம் அகவயமானது, தாள அசைவுகள் கொண்டது, அதில் கலை நுட்பத்துக்கே முன்னுரிமை அளிக்கப்படுகிறது. நிருத்தியா என்பது சைகைகள், உடலசைவுகள் மற்றும் முக பாவனைகள் மூலம் கதை சொல்வதும் சேர்க்கப்பட்டுள்ள ஆட்டம். நாட்டியா என்பது நாடகம், வழக்கமாக ஒரு குழு அதில் பங்கேற்கும்.


### அணியலங்காரம்

சத்ரியா அணியலங்காரம் அஸ்ஸாமிய சமூகப் பண்பாட்டை பிரதிபலிக்கிறது. நடனமாடும் ஆண்கள் ஒரு வேட்டி, சாதர் மற்றும் பகூரி (தலைப்பாகை) அணிகின்றனர்; பெண்கள் ஒரு கூரி, சாதர் மற்றும் காஞ்சி (இடுப்புத் துணி) அணிந்து கொள்கிறார்கள். வெண்ணிற அல்லது வெள்ளைச் சாயம் ஏற்றாத இயல்நிலை பட்டுத் துணியில் செய்யப்பட்ட அவை, குறிப்பிட்ட நடனங்கள் மற்றும் கதாபாத்திரங்களுக்கு ஏற்ப சிவப்பு, நீலம் மற்றும் மஞ்சள் போன்ற நிறங்களில் உள்ளன. முன்பு வெல்வட் மற்றும் சாட்டின் துணிகள் பயன்படுத்தப்பட்டன, எனினும் இந்த நடனம் சாத்ராக்களை விட்டு வெளியேறி மேடைக்கு வந்தபோது, வடிவமைப்பும் சாதனங்களும் மாறியுள்ளன. தற்காலத்தில், மல்பெர்ரி செடியிலிருந்து எடுக்கப் படும் பாட் என்ற பட்டுத் துணியும் அஸ்ஸாமில் உற்பத்தியாகும் பொன்னிற முகா பட்டுத் துணியிம் இதற்குப் பெரும்பாலும் உபயோகிக்கப்படுகிறது. நடனமாடும் பெண்கள், பிராந்தியத்தின் தாவர, விலங்கு உயிரினங்களைக் குறிக்கும் வகையில் நுணுக்கமான பிராந்தியச் சித்திரப்படங்கள் பொறித்த, பிரகாச நிறத்திலுள்ள கைத்தறித் துணிகளை அணிகிறார்கள். அங்கியா நாட் அணியலங்காரம் வண்ணமயமாகவும், கதாபாத்திரத்துக்கு ஏற்பவும் அமைந்துள்ளது, மேலும் வட்டாரக் கைவினைஞர்கள் தயாரித்த எழிலங்கார தலைப்பாகைகள் மற்றும் கிரீடங்களும் பயன்படுத்தப்படுகின்றன.

கிருஷ்ண நிருத்தியா மற்றும் நாடுபங்கி நிருத்தியா உடை, கிருஷ்ண பகவானைக் குறிக்கும் விதமாக மஞ்சள் மற்றும் நீல நிறத்தில் உள்ளது. சூத்ரதார் நிருத்தியாவிலும் விசேஷத் தலைப்பாகையுடன் ஒரு குறிப்பிட்ட வெண்ணிற உடை அணியப்படுகிறது. இந்த நடன வடிவின் தனிச்சிறப்பு என்னவென்றால், ராட்சசர்கள் மற்றும் சிறப்புக் கதாபாத்திரங்களை சித்தரிப்பதற்கு முகா (முகமூடிகள்) பயன்படுத்தப்படுகின்றன. முகமூடிகள் செய்வது சத்ரியா பண்பாட்டின் ஓர் அங்கம். தனித்துவமான கேசா சுன் எனப்படும் இயல்நிலைத் தங்கத்தால் செய்யப்படுகிற பாரம் பரிய அஸ்ஸாமிய நகைகள் இதில் ஆபரணங்களாகப் பயன் படுத்தப்படுகின்றன. நெற்றியில் கோபாலி பூசிக்கொண்டு, கோல்பதா, துல்பிரி (டோல் எனும் இசைக் கருவி), பீனா (பிரை), ஜெதிபடா (பல்லி), துக்துகி (இலை), சென்பதா (கழுகு), தன்சிரா (நெல்லரிசி) போன்ற வெவ்வேறு வடிவங்களில் கழுத்தணி மாலைகளையும், அதற்கு ஜோடிப் பொருத்தமான காது வளையங்களையும், மற்றும் முதி காரு, கம் காரு எனப்படும் கைக்காப்புகளையும் கலைஞர்கள் அணிகின்றனர். நடனமாடும் பெண்கள் நெற்றியில் சிவப்புப் பொட்டு, கேசத்துக்கு வெண்ணிறப் பூக்கள் என மங்களகரமாக அலங்கரித்துக் கொள்வார்கள்.

சத்ரியா நிருத்தியாவுடன் பாரம்பரிய ராகங்கள் அடங்கிய பொர்கீத் எனப்படும் இசையும் சேர்ந்திருக்கும். முக்கிய இசை க்கருவியாக கோல் எனப்படும் வேறுபட்ட இருபக்கங்கள் கொண்ட மேளம் உபயோகிக்கப்படுகிறது, இது இந்தியாவின் இதர பகுதிகளில் உள்ளவற்றை விட மிகவும் வித்தியாசமானது. களிமண், மரம், தோல், பிசைந்த அரிசி மாவு, இரும்புத் கீற்றுகள், கயிறுப் பட்டைகள் போன்ற பொருட்களும், விசேஷ வடிவமும் வலது பக்கத்தில் மிக மெல்லிய ஓசை யையும், இடது பக்கத்தில் ஆழ்ந்த வல்லின ஓசையையும் உருவாக்குகிறது. புல்லாங்குழல் மற்றும் சமீபத்தில் வயலின், ஹார்மோனியம் போன்ற மற்ற இசைக்கருவிகளும் உபயோகிக்கப்படுகின்றன. மேலும், பக்திப் பரவசத்தை ஊட்டுவதற்காக பல்வேறு வகையான கைத்தாளங்கள் அல்லது ஜால்ராக்களும் (மஞ்சிரா, போர்தல், பிஹுதல், பட்டிடல், குட்டிடல்) பிரயோகிக்கப்படுகின்றன.

சத்ரியாவின் அங்கீகாரம் மற்றும் ஆதரவுக்கு குறிப்பிடத் தக்க அளவில் பங்களித்தவர், இந்திரா பிபி போரா. ஒரு முன்னோடி நாட்டியக் கலைஞர்.



*சத்ரியா நடனக் கலைஞர் கிருஷ்ணாக்ஷி காஷியாப்.*

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

# பள்ளிகளுக்கு ரோட்டரி WinS விருதுகள்

ரோட்டரி செய்திக்குழு



IPDG *ரவி குல்கர்ணி மற்றும் பொது கல்வித்துறை கூடுதல் ஆணையர் சித்தலிங்கையா ஹிரேமத் பள்ளி தலைவருக்கு விருது வழங்குகிறார்.* PDG *கணேஷ் பட் மற்றும் வித்யா பட் அவர்களும் உள்ளனர்.*

புதிதாக உருவாக்கப்பட்ட RID 3170 சங்கத்தின் ரோட்டரி WinS விருதினை முதன்முதலாகப் பெறுவது தார்வாடில் உள்ள ஒரு அரசுப்பள்ளி. PDG கணேஷ் பட் மற்றும் அவரது குடும்பத்தினரால் தொடங்கப்பட்ட இந்த விருது ரூ.10,000, ஒரு கேடயம் மற்றும் சான்றிதழையும் கொண்டுள்ளது.

RC தார்வாடா சென்ட்ரல் சங்கத்தின் ஸ்தாபக தின நிகழ்ச்சியில், பொது கல்வித்துறை கூடுதல் ஆணையர் சித்தலிங்கையா ஹிரேமத் இந்த விருதினை வழங்கினார்.

இந்த விருது ரோட்டரிக்கு நற்பெயர் பெற்றுத்தரும், மேலும் ஆரோக்கியமான மற்றும் தூய்மையான சமூகங்களுக்கான பணிகளில் அதன் முயற்சிகளைப் பரப்பும்,'' என்றார் DG ரவிக்கிரண் குல்கர்னி.

ரோட்டரி இந்தியா WinS அங்கீகாரக் குழுவைச் சேர்ந்த ஒரு உறுப்பினர் PDG பட் இந்த விருதுக்கான தகுதிநிலைகளைக் குறிப்பிட்டுக் காட்டினார். WinS ஸ்டார்-ஒன் அங்கீகாரம் மற்றும் ஸ்வச் வித்யாலயா புரஸ்கர் போன்றவற்றின் தேவைகளுடன் இணைந்துள்ளது.


இந்த ஆண்டு சுமார் 884 பள்ளிகள் இந்த விருதுக்காகப் போட்டியிட்டது. இப்பள்ளி விருது பெற்றிருப்பதால் மாணவர் சேர்க்கை இரட்டிப்பானதற்கும் காரணம் ரோட்டரி தான் என்றார், தலைமையாசிரியர் ஸ்ரீதேவி லத்திமத். ■

---

**ஹோனோலுலு மாநாடு**

# ஹோனோலுலு அருங்காட்சியகங்கள்

ஹேன்க் சார்டின்



2020-ஆம் ஆண்டு RI மாநாட்டை ஜூன் 6 முதல் 10 வரை நடத்தும் இந்த ஹவாய் மாகாணத்தின் தலைநகரத்தில் விநோதமான அருங்காட்சியங்களும் உள்ளது. அதனால் கடற்கரை அல்லது லுவாவ் கொண்டாட்டத்தை அனு பவிக்கும் திட்டங்களுடன் சேர்த்து, பார்வையிடத் திட்டமிடுங்கள்.

பெர்னிஸ் பாவாஹி பிஷப் அருங்காட்சியகத்தில் ஹவாய்த் தீவுகளின் வரலாற்றினை அறிந்து கொள்ளுங்கள், இது பாலிநேஷியன் பண்பாட்டுக் கைவினைப் பொருள்கள் மற்றும் இயற்கையான வரலாற்று உருமாதிரிகள் உலகிலேயே மிகப்பெரிய சேகரிப்புகளைக் கொண்ட பெருமையுடையது.

ஹவாய் மக்களின் கலையை ஜப்பானின் மர வேலைப் பாடு, அச்சு ஓவியங்கள் மற்றும் ஐரோப்பிய அமெரிக்க அச்சுக்கள் மற்றும் ஓவியங்களை ஹோனோலுலு கலை அருங்காட்சியகத்தில் (honolulumuseum.org) கண்டு களியுங்கள். ஐயோலானி அரண்மனைக்குச் சென்று வாருங்கள் (iolanipalace. org), ஹவாய் மன்னர்களின் வசிப்பிடமாக இருந்தது, கண்ணாடி பொருட்கள் முதல் இராணுவச் சின்னம் வரையிலான கைவினைப் பொருட்களின் சேகரிப்பு உள்ளது.

போரில் தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்தவர் களையும் அமைதி உருவாக்கத்தில் ரோட்டரி முயற்சியின் பிரதிபலிப்பையும் பேர்ல் ஹார்பர் தேசிய நினைவிடம் (nps.gov/ valr) மற்றும் அரிஜோனா நினைவிடம் போன்றவற்றில் நினைவுகூறுங்கள்.

ri@convention.org என்ற இணையதளத்தில் டிசம்பர் 15-க்குள் பதிவு செய்யுங்கள்.



## கல்வியறிவு மற்றும் WinS ஆகியவை அவரது நோக்கமாகும்

**ராஜீவ் கார்க்**
**செங்கல் உற்பத்தியாளர், RC சிர்சா, RID 3090**

அவர் ஒரு ரோட்டராக்டராக 1987 முதல் 1993-ல் வரை இருந்தார், பின்னர் ஒரு ரோட்டரியனாக மாறினார். நான் ரோட்டரியை நேசிக்கிறேன், மக்களை மாற்றுவதில் அது செய்யும் மாயம் அற்புதமானது என்று ராஜீவ் கார்க் கூறுகிறார். அவரது சிறந்த நினைவுகள் அவர் சங்கத் தலைவராக இருந்த காலத்தில் நடந்தவை ஆகும்.

ஹரியானா, பஞ்சாப் மற்றும் ராஜஸ்தான் பகுதிகளை உள்ளடக்கிய தனது பிராந்திய மக்களை வளம் பெற்றவர்களாக மாற்றுவதற்காக கல்வியறிவு மற்றும் WinS திட்டங்களில் கவனம் செலுத்த கார்க் விரும்புகிறார். பெண்கள் ஒரு நாட்டின் முதுகெலும்பாக இருக்கிறார்கள், அதே நேரத்தில் குழந்தைகள் அதன் எதிர்காலமாக இருக்கிறார்கள். எனவே எந்தவொரு குடும்பமும் வசதியாக இருக்க இந்த இரண்டு பிரிவுகளின் வளர்ச்சியில் நாம் கவனம் செலுத்த வேண்டும் என்று நான் எப்போதுமே நினைக்கிறேன். நான் முதலில் அவர்களின் கல்வியில் கவனம் செலுத்துவேன், என்று அவர் கூறுகிறார்.

உலகளாவிய மானிய ஆதரவோடு பணியாற்றுவதை அவர் எதிர்நோக்குகிறார். மேலும் ரோட்டரியின் பெயரை நீண்ட காலத்திற்கு நிலைத்திருக்கச் செய்யும் நிலையான திட்டங்களுக்கு திரட்டப்பட்ட மாபெரும் DDF தொகையை பயன்படுத்த விரும்புகிறார். அவர் மாவட்டத்தில் டயாலிசிஸ் மையம் அமைக்கவும், பல புற்றுநோய் பரிசோதனை முகாம்களையும் ஏற்பாடு செய்யவும் திட்டமிட்டுள்ளார்.

உறுப்பினர் வளர்ச்சியைப் பொறுத்தவரை, அவர் ஐந்து சதவீதம் அதிகரிப்பு அடைவதையும், கடந்த ஆண்டு உருவாக்கப்பட்ட ஆறு புதிய சங்கங்களின் உறுப்பினர்களின் ஆர்வத்தை தக்கவைத்துக் கொள்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளார். இது ஒரு கிராமப்புற பகுதி என்பதால், ரோட்டரியில் பங்கேற்க பெண்கள் தயங்குகிறார்கள். கார்க் TRF-க்கு $80,000 திரட்ட நம்பிக்கை கொண்டுள்ளார். ■

# ஆளுநர்களுடன் ஒரு சந்திப்பு

ஜெய்ஸ்ரீ



## ரோட்டரியே இவரது வாழ்க்கை

**சுஹாஸ் லக்ஷ்மண்ராவ் வைத்யா**
**இயற்கையழகு வடிவமைப்பாளர்**
RC அவுரங்காபாத் எலைட், RID 3132

இவர் சமூக சேவையாளர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்; இவரது தந்தை சுதந்திர போராட்ட வீரர். சுஹாஸ் வைத்யா ரோட்டரி தொடர்பான நினைவு பரிசுகளை சேகரிப்பவர். தனது "ரோட்டரி நூலகம்" குறித்து பெருமைப்படுகிறார். இரண்டு காரணங்களுக்காக ரோட்டரிக்கு தான் கடன்பட்டிருப்பதாக கூறுகிறார்: அவரது ரோட்டரி நண்பர்கள் சில ஆண்டுகளுக்கு முன்பு அவரை திவாலான நிலையிலிருந்து வெளியே கொண்டு வந்தனர், அதற்காக அவர் மிகவும் நன்றியுள்ளவராக இருக்கிறார். "நான் அவர்களை ஒருபோதும் மறக்க முடியாது.'' இரண்டாவது நிகழ்வு, 2007-ல் கிட்டத்தட்ட அவர் மூர்ச்சையடைந்தபோது, அருகிலுள்ள மருத்துவ முகாமில் பணிபுரிந்த ஒரு ரோட்டரி மருத்துவர் அவரது உயிரைக் காப்பாற்றினார். "என் வாழ்க்கை ரோட்டரிக்கானது, ஏனென்றால் ரோட்டரி அன்று என் உயிரைக் காப்பாற்றியது,'' என்று அவர் கூறுகிறார்.

விவசாயியாக அவர் சுற்றுச்சூழல் சீரழிவின் தாக்கத்தையும் மக்கள் எதிர்கொள்ளும் தண்ணீருக்கான கஷ்டங்களை யும் நன்கு அறிவார். எனவே "இந்த பிரச்சினைகளை உடனடியாக தீர்ப்பதே எனது முதல் பணியாகும்.'' பெண்களுக்கு உரிமைகள் கிடைக்கச் செய்தல் மற்றும் தனி நபர்கள், குறிப்பாக இளைஞர்கள், அமைதியை வளர்த்தல் ஆகியவற்றுக்கான திட்டங்களும் அவரது திட்டப்பணியில் உள்ளன.

மாவட்ட உறுப்பினர்களை ஐந்து சதவீதம் அதிகரிப்பதே அவரது நோக்கமாகும், அதேசமயம் தற்போதுள்ள உறுப்பினர்களை தக்கவைத்துக் கொள்வதிலும் கவனம் செலுத்துகிறார். TRF-க்கு, $300,000 திரட்ட அவர் திட்டமிட்டுள்ளார்.■

## கண் பராமரிப்பு அவரது முன்னுரிமையாகும்

**Dr கிரிஷ் மசூர்கர்**
**கண் மருத்துவர், RC பாகல்கோட், RID 3170**

அவர் 1993-ல் ரோட்டரியில் சேர்ந்தார், மேலும் RI-ன் 100வது ஆண்டில் சங்க தலைவராகவும், இப்போது இந்திய ரோட்டரி அதன் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும்போது ஆளுநராகவும் பணியாற்றுவதில் அவர் மகிழ்ச்சி அடைகிறார். Dr கிரிஷ் மசூர்கர் தான் தலைமையேற்ற ஆண்டில் பாகல்கோட்டில் உள்ள பள்ளிகளுக்கு போர்வெல்களை வழங்கியதையும், தவிர்க்கக்கூடிய குருட்டுத்தன்மையை நிவர்த்தி செய்யும் பொருந்தக்கூடிய மானிய திட்டங்களில் பணியாற்றுவதையும் நினைவில் வைத்திருக்கிறார்.

கண்புரை நோயால் பாதிக்கப்பட்ட 10,000 பேருக்கு சிகிச்சையளிப்பதிலும், மேலும் பிற வகையான கண் கோளாறுகளுடன் உள்ள 5,000 பேருக்கு சிகிச்சையளிப்பதிலும் அவர் பெரு நிறுவன ஆதரவுடன் ஈடுபட்டுள்ளார். அவர் தனது தலைமைக் காலத்தில் ஆறு நாடுகளுக்கு நட்பு பரிமாற்ற திட்டங்களை ஊக்குவிப்பதில் ஆர்வமாக இருக்கிறார். "சில இடங்களில் ரோட்டரி மீதான ஆர்வத்தை இழக்கும் உறுப்பினர்களின் பிரச்சினைகளை கண்டறிவதில்'' அவர் பணியாற்றி வருகின்ற போதிலும் தனது மாவட்டம் உறுப்பினர்களை கையாள்வதில் சிறப்பாக செயல்படுவதில் மசூர்கர் மகிழ்ச்சியாக உள்ளார். பாகல்கோட்டிலிருந்து தபோலி வரை பரந்து விரிந்திருக்கும் மாவட்டங்களில் இதுவும் ஒன்றாகும். ரோட்டராக்ட் சங்கங்கள் மாவட்டத்தில் மிகவும் முனைப்பாக உள்ளன, மேலும் அவர் தனது மாவட்ட மாநாட்டிற்கு ரோட்டராக்டர்களை அழைத்துள்ளதாக கூறினார். "ரோட்டராக்டர்களுக்கு அவர்களின் ரோட்டரி சந்தாவிற்கான தள்ளுபடி சலுகைகளை வழங்குவதன் மூலம் இரட்டை சந்தாவிற்காக நான் அவர்களை ஊக்குவிக்கிறேன்.''



TRF-ஐப் பொறுத்தவரை, கடந்த மூன்று ஆண்டுகளில் மாவட்டம் சராசரியாக $1 மில்லியன் பங்களிப்பு செய்துள்ள நிலையில், நான் அதைச் செய்வதற்கான தொடர்ந்து பணியாற்றி வருகிறேன் என்றார். இருப்பினும், TRF-க்கு தங்களால் இயன்றதை பங்களிக்க ஒவ்வொரு உறுப்பினரையும் அவர் ஊக்குவித்து வருகிறார், மேலும் 15 முக்கிய நன்கொடையாளர்களை தன் பொறுப்பில் வைத்திருக்கிறார், அவர்களில் மூன்று பேர் இரண்டாம் நிலை பெரிய நன்கொடையாளர்கள் ஆவார்கள்.■



## தண்ணீர் தொடர்பான திட்டங்களில் பணிபுரிதல்

**நயன் பாட்டீல்**
**கல்வியாளர், RC தவானகரே தெற்கு, RID 3160**

1978ம் ஆண்டில் அவரது தந்தை உறுப்பினராக இருந்த RC தவானகரே மிட் டவுனின் அறிக்கைகளை தொகுப்பதில் அவர் உதவி செய்வார், இதனால் அவருக்கு "ரோட்டரி பாய்" என்று செல்லப்பெயர் ஏற்பட்டது. நயன் பாட்டீல் 1989-91 காலப்பகுதியில் ரோட்டராக்டராக இருந்தார். 2004-ல் அவர் தனது சங்கத்தில் சேர்ந்தார்.

மின்-கற்றல் மற்றும் இனிய பள்ளிகள் (ஹேப்பி ஸ்கூல்ஸ்) குறித்த திட்டங்களை உலகளாவிய மானியங்களுடன் செயல் படுத்துவதிலும், DDF மூலம் மிதிவண்டிகள், தையல் இயந்திரங்கள் போன்றவற்றை விநியோகிப்பதிலும் அவர் கவனம் செலுத்தி வருகிறார். பாட்டீல் கிராமப்புறப் பகுதிகளில் தண்ணீர் சக்கர வண்டிகளை வழங்குவதற்காக ஒரு கூட்டுநிதியளிக்கும் நிறுவனத்துடன் இணைந்து பணியாற்றி வருகிறார்.

மாவட்ட உறுப்பினர்களை 10 சதவீதம் அதிகரிக்கவும், செயலற்ற சங்கங்களை செயல்படுத்தவும் அவர் விரும்புகிறார். மாவட்டத்தில் இரண்டு முற்றிலும் பெண்களுக்கான சங்கங்கள் இருந்தாலும், ஆண் உறுப்பினர்களையும் ஏற்றுக்கொள்ளும்படி இந்த சங்கங்களையும், பெண் உறுப்பினர்களை அழைக்கும்படி பொது சங்கங்களையும் அவர் கேட்டுக்கொள்கிறார். ரோட்டரியர்களின் கணவர்களை/மனைவிகளை ரோட்டரியில் சேர ஊக்குவிக்கிறேன். என் மனைவி, ஷிகா, எனது கிளப்பின் உறுப்பினர் ஆவார், அவர் ரோட்டரியின் பெரிய ஆதரவாளர், என்றார்.

TRF-க்காக $367,000 திரட்டலாம் என DG நம்புகிறார், மேலும் ஒரு AKS உறுப்பினரைச் சேர்க்கும் பணியில் அவர் ஈடுபட்டுள்ளார்.■



## சிறிய சங்கங்ளுக்கு பெரிய மறுப்பு

**டாக்டர் மோகன் சந்தாவர்க்கர்**
**மகப்பேறு மருத்துவர், RC தானே நார்த், RID 3142**

அவர் 1986 முதல் ரோட்டேரியனாக இருந்து வருகிறார். 1993 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பூகம்பத்தின்போது தனது குழு அவசரகால மருந்துகளை ஒரு லாரியில் ஏற்றிக்கொண்டு போய் லாத்தூர் மக்களுக்கு வழங்கி எவ்வாறு உதவியது போன்ற நினைவுகளை Dr மோகன் சந்தாவர்க்கர் இன்னும் பேணுகிறார். "நாங்கள் ஆறு பேர் நான்கு நாட்கள் சாலையில் இருந்தோம், பல்வேறு விபத்துக்களுக்கு சிகிச்சை அளித்தோம், என்று அவர் கூறுகிறார். மற்றொரு நிகழ்வு, உடனடியாக இதய அறுவை சிகிச்சை செய்து ஒரு குழந்தையை காப்பாற்ற அவர் தனது சங்கம் மூலம் வழங்கிய நிதி உதவி என்று அவர் குறிப்பிடுகிறார்.

உள்ளூர் சமூகங்களுக்கு ஏற்ற திட்டங்களை மேற்கொள்வதில் மாவட்ட ஆளுநர் அலுவலகம் சங்கங்களுக்கு உதவ வேண்டும் என்றும் ஒட்டு மொத்த மாவட்டமும் கடைபிடிப்பதற்காக மாறுபட்ட திட்டங்களை வற்புறுத்தக்கூடாது என்பதும் சந்தாவர்க்கரின் கருத்தாகும். அதே போல், அவர் சேவை திட்டங்களை குழுக்களாக தொகுத்துள்ளார். அவர்கள் தேர்ந்தெடுக்கும் எந்தவொரு குழுக்களையும் செயல்படுத்த பத்து சங்கங்கள் ஒன்றிணைகின்றன. ரூ.5.3 கோடி மதிப்புள்ள சுற்றுச்சூழல் தொடர்பான திட்டங்கள் உள்ளிட்டு, பள்ளிகளில் கட்டிட உள்கட்டமைப்பை உருவாக்க சில தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் (NGO) ஆதரவை அவர் பட்டியலிட்டுள்ளார்.

உறுப்பினர்களை பொறுத்த வரையில், அவர் 20 சதவீத வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டுள்ளார்.

அவர் "முற்றிலும் பெண்களுக்கான" சங்கங்களை விரும்பவில்லை, என்கிறார். பெண்கள் பொது ரோட்டரி சங்கங்களின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும் என்றும் "இது சங்கங்களின் ஆரோக்கியமான வளர்ச்சியை ஊக்குவிக்கும்'' என்றார். அவர் சிறிய சங்கங்களை ஊக்குவிப்பதற்கு எதிராக இருக்கிறார். "ஒரு சங்கத்தில் குறைந்தது 20 உறுப்பினர்களாவது இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.''

TRF பங்களிப்புக்கான அவரது இலக்கு, $500,000.

அவர் கடந்த ஆண்டு மும்பையில் இருந்தபோது RI தலைவர் மார்க் மலோனியுடன் அவர் நடத்திய உரையாடலைக் குறிப்பிடுகிறார். "அவர் ஜெட்லாக் பிரச்சினையால் பாதிக்கப்பட்டிருந்தார், ஆனாலும் புகைப்படங்களுக்கு காட்சி கொடுத்தார். அவரால் அதை எப்படி செய்ய முடிகிறது என்று நான் அவரிடம் கேட்டேன், மேலும் அவருடைய பதிலை நான் எங்கு சென்றாலும் மேற்கோள் காட்டுகிறேன். அவர் சொன்னார், "நான் இதை ஏற்றுக்கொள்ள வேண்டும். இது எனது வேலை." நீங்கள் ஒரு தலைவராக இருக்கலாம், ஆனால் நீங்கள் எதிர்கொள்ள வேண்டிய வேலை மற்றும் பிரச்சினைகள் குறித்து நீங்கள் புகார் செய்ய முடியாது.■

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

# RI தெற்காசிய அலுவலக அறிவிப்பு

### My Rotary - நிகழ்நிலை போர்டல்

உறுப்பினர்கள் My Rotary என்னும் வலைய தளத்தில் பதிவு செய்து ஈமெயில் மூலம் பல ரோட்டரி செய்திகளை பெறலாம். ரோட்டரி கிளப் சென்ட்ரல் வழியாக தங்கள் சங்க இலக்குகளைப் பெறலாம். Dec 31ம் தேதிக்குள் சங்கத்தின் உறுப்பினர் நிலையை வலை தளத்தில் மேம்படுத்தலாம். உறுப்பினர்கள் சங்க சந்தாவை கட்டலாம் மற்றும் கையேடுகளை இந்த வலைதளத்தில் பார்க்கலாம்.

### கவனம் செலுத்தும் துறையில் மாற்றங்கள்

ஏப்ரல் மாதத்தில், அறங்காவலர்கள், உலகளாவிய மானியத் தகுதி வரம்பு, கூடுதலான திட்டப்பணி வகைகள் மற்றும் சுற்றுச்சூழலில் கவனம் செலுத்தும் செயல்பாடுகள் போன்றவற்றில் தெளிவான பார்வையை வழங்குவதற்கு, நாம் கவனம் செலுத்தும் துறைகளில் (Areas of Focus) மாற்றங்களை அங்கீகரித்துள்ளனர். அறங்காவலர்கள் ஏற்கனவே இருக்கும் ஆறு துறைகளை வைத்திருக்கிறார்கள், ஆனால் மூன்று பெயர்களை (நட்சத்திர குறியிட்டவை) மட்டும் மாற்றியமைத்துள்ளனர், இது ரோட்டரி உறுப்பினர்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கும் திட்டப்பணிகளின் வகைகளை நன்றாகப் பிரதிபலிக்கும். மேம்படுத்தப்பட்ட துறைகளின் பெயர்கள்:

- அமைதி உருவாக்கம் மற்றும் போர் தடுப்பு★
- நோய்த்தடுப்பு மற்றும் சிகிச்சை
- தண்ணீர், துப்புரவு மற்றும் சுகாதாரம்★
- தாய் சேய் உடல்நலம்
- அடிப்படை கல்வி மற்றும் எழுத்தறிவு
- சமூகப் பொருளாதார வளர்ச்சி★

மை ரோட்டரி பக்கத்தில் மேம்படுத்தப்பட்ட கவனம் செலுத்தும் துறைகளின் கொள்கை அறிக்கைகள் கிடைக்கும். மேலும் தகவல்களுக்குத் தொடர்பு கொள்ளுங்கள் grantsrotary.org மற்றும் aofrotary.org.

### பங்களிப்புகள் மறுவகைப்படுத்தல் பற்றிய TRFன் வழிகாட்டுதல்கள்

கடந்த ரோட்டரி ஆண்டின் பங்களிப்புகளை மறுவகைபடுத்த TRF ஏற்காது (உ.ம்.) சென்ற வருடத்தில் செய்த ஆண்டு நன்கொடைகள் என்டோமண்டிற்கோ; போலியோ நிதியை ஆண்டு நன்கொடையிற்கோ மாற்ற இயலாது. நன்கொடைகள் 90 நாட்களுக்குள் மட்டுமே மாற்றலாம்.

### குடும்பத்தார் நிர்வகிக்கும் கார்ப்பரேட்டுகள் / குடும்பஅறக்கட்டளை களிலிருந்து வரும் நன்கொடைகளுக்கு TRF வழிகாட்டல்கள்

குடும்பத்தார் நிர்வகிக்கும் கார்ப்பரேட்டுகள்/குடும்ப அறக்கட்டளைகளிலிருந்து வரும் நன்கொடைகளுக்கு பரிசுக்கான விதிகளை சமீபத்தில் அறங்காவலர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர். கார்ப்பரேட் மற்றும் அறக்கட்டளை நன்கொடைகள் அனைத்தும் கார்ப்பரேட்/அறக்கட்டளை பெயரின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும். கார்ப்பரேட், குடும்பத்தார் நிர்வகிப்பதாகவோ அல்லது அறக்கட்டளை, குடும்பத்தார் நிதி அளிப்பதாகவோ இருந்தால், முக்கிய நன்கொடையாளர் பரிசினைப் பெற அந்த கார்ப்பரேட்/அறக்கட்டளை மேற்குழுவில் உள்ள ஒரு குடும்ப உறுப்பினரை நியமிக்கலாம். குடும்பத்தார் நிர்வகிக்காத பொது அறக்கட்டளைகள் அல்லது கார்ப்பரேட்டுகளிலிருந்து கிடைக்கும் நன்கொடைக்கு கார்ப்பரேட் பரிசினைப் பெறத் தகுதி வாய்ந்தது.

கார்ப்பரேட்/அறக்கட்டளையை குடும்பத்தார் நிர்வகிக்கிறார்கள் அல்லது குடும்பத்தார் நிதி அளிக்கிறார்கள் என்பதை உறுதிசெய்யும் கார்ப்பரேட்/அறக்கட்டளை லெட்டர்பேடில் பெறப்பட்ட கடிதத்தின் அடிப்படையில் தனிநபர் முக்கிய நன்கொடையாளர் விருது வழங்கப்படும்.

# பயணிப்போமா பாண்டிச்சேரிக்கு

கிரண் ஜெஹ்ரா



*ஆரோவில் மாத்ரி மந்திர்.*

நான் ஒரு ஃபோட்டோ எடுக்கலாமா? என்று பாண்டிச்சேரி புராமனேட் கடற்கரையில் பாசிமணி மாலைகளை விற்றுக் கொண்டிருந்த ரங்கா என்பவரைக் கேட்டேன். பதில் உடனடியாக வந்தது: “எவ்வளவு தருவீங்க?”

அவருடைய ‘ஆங்கில’ பதிலால் ஆச்சர்யப்பட்டு, சிரித்துக்கொண்டே, “உங்களிடமிருந்து ஒரு நெக்லஸ் வாங்கிக்கிறேன், சரியா?” என்றேன். கேமராவுக்குத் தயாராக ஆரம்பித்தார்.

தன் மகள் மற்றும் மனைவி வீட்டிலேயே தயார் செய்கிற நெக்லஸ்களை கடந்த இரு வருடங்களாக விற்பனை செய்து கொண்டிருக்கிறார். பேரம் நன்றாகப் படிந்ததால், இப்போது ஒரு நவரத்தினக் கல் பதித்த பாசிமணி என் கழுத்தில் தொங்கிக்கொண்டிருக்கிறது. அருமையான ஒரு காபி எங்கே கிடைக்கும் என அவரிடம் விசாரித்தேன். ஒரு தெருவைச் சுட்டிக்காட்டி, “நேரா 500 மீட்டர் நடந்து, இடது பக்கம் திரும்புங்க, ஒரு சின்ன காபி கடையில் நீங்க கேட்ட அருமையான காபி கிடைக்கும். அங்கே AC இல்லை, பரவாயில்லையா?” என்று சொன்னார். “ பரவாயில்லை.” - ஒரு அருமையான காபி வெறும் ரூ.13-க்கு கிடைத்தது.

தனியாக பயணம் செய்வது முதலில் பயமுறுத்துவதாக இருந்தாலும், அது ஒரு பொக்கிஷமான அனுபவம்.

குறைவானத் தொகையை வைத்துக் கொண்டு, பாலி போன்ற அயல்நாட்டுத் தீவுகளுக்குச் செல்வது என்பது வேலைக்கே ஆகாது. எனவே, தனியான ஒரு பயணத்திற்கு நெடுஞ்சாலை ஓரமாக மையம் கொண்டிருக்கும் ஒரு நகரமான பாண்டிச்சேரி (சென்னையிலிருந்து 152 கி.மீ.) தான் சரியாக இருக்கும். பாண்டிச்சேரிக்கு அருகிலிருக்கும் தியான நகரமான ஆரோவில்லில் பணம் கையைக் கடிக்காத வகையில் கட்டண வீட்டில் (2 இரவுக்கு ரூ.2,670/-) தங்கலாம் - இணையதளத்தில் பதிவிடப்பட்டிருந்த புகைப்படங்களைப் போன்றே தோற்றமளித்தது. ஆரோவில் கடற்கரை நடந்து செல்லும் தொலைவில் இருந்தது, மேலும் நகரத்திற்குள் செல்ல பஸ் அல்லது ஆட்டோ வசதியும் இருக்கிறது.

## ஆரோவில்

இந்த இடத்தைப் பற்றிய அனைத்தும் புதிராகவே இருக்கிறது. நாற்பதுக்கும் அதிகமான நாடுகளைச் சேர்ந்த எழுத்தாளர்கள், கலைஞர்கள், பொறியாளர்கள், சமையல் வல்லுனர்கள், விவசாயிகள் மற்றும் மாணவர்கள் போன்ற சுமார் 2,000-க்கும் அதிகமானோர் வாழும்

ஒரு வீடாக இருக்கிறது இந்த புல்வெளி நிறைந்த வளாகம், தார் சாலைகளோ அல்லது நகர கட்டிடங்களோ இல்லை - தேவாலயங்கள், கோவில்கள் அல்லது மசூதிகள் அவ்வளவு ஏன் ஒரு காவல் நிலையம் கூட இல்லை! பந்தல் வழியே சூரிய ஒளியை நீங்கள் பார்க்கலாம் மற்றும் 'இந்த நகரின் ஆன்மா' என்று அழைக்கப்படும் மாத்ரி மந்திருக்கு ஒரு மண் சாலையில் நடந்து செல்லவேண்டும். மிக கவனமாகக் காடுகளை வளர்த்ததால் ஒட்டு மொத்தமாக 1,250 ஏக்கர் பரப்பளவு கொண்ட பசுஞ்சோலையில் சுமார் மூன்று மில்லியன் மரங்கள் பரந்து விரிந்திருக்கிறது.

ஒரே நாளில் ஆரோவில் முழுவதையும் சுற்றிப்பார்ப்பது என்றால் கொஞ்சம் கடினம் தான். தங்களின் வருமானத்தைக் கொண்டு சுயமாகச் செயல்படும் ஒரு சமூகம் இது என்று அங்கே வசிக்கும் ஒருவருடன் உரையாடிய போது தெரியவந்தது. ஆரோவில் பவுண்டேஷனுக்குச் சொந்தமான கைவினைப்பொருட்கள் தயாரிக்கும் மரோமா என்ற பிரிவு, ஆரோவில் கைவினை காகித தொழிற்சாலை மற்றும் ஆரோவில் பேக்கரி பிரிவு போன்ற வருமானம் தரும் பிரிவுகள் 150-க்கும் அதிகமாக உள்ளது, இப்பிரிவுகள் தங்களின் இலாபத்தில் மூன்றில் ஒரு பங்கினை பவுண்டேஷனுக்கு வழங்குகிறது. தினசரி சுமார் 3,000 பார்வையாளர்களிடமிருந்து ஒரு டஜனுக்கு மேற்பட்ட உணவு விடுதிகள் பவுண்டேஷனுக்காக பணம் சம்பாதிக்கிறார்கள்.

## ஒயிட் டவுண்

பாண்டிச்சேரியில் ஒருகாலத்தில் பிரெஞ்சு குடியிருப்புப் பகுதியாக இருந்த ஒயிட் டவுணுக்குச் செல்ல ஒரு பாரம்பரிய நடை சுற்றுலாவை பாண்டிச்சேரி சுற்றுலாத்துறை ஏற்பாடு செய்கிறது, அங்கே செல்லுமாறு எனது உபசரிப்பாளர் ரேகா பரிந்துரைத்தார், அங்கு அருமையான வரலாற்றுச் சின்னங்களும் அற்புதமான கட்டடக்கலை கொண்ட பொருள்களும் இருக்கிறது. ''மிகக்குறைந்த விலையில் இந்த பகுதியின் கட்டிட அழகினைக் கண்டுகளிக்க இதுதான் சிறந்த வழி. ஒரு தொப்பியும் ஒரு தண்ணீர் பாட்டிலும் உங்களிடம் இருந்தாலே போதும்,'' என்று அவர் சொன்னார். முட்டைகள் மற்றும் மேகி நூடுல்ஸ் கொண்ட மதிய உணவுக்குப் பிறகு, என்னை அவர் தன்னுடைய மினி டிரக்கில் மெயின் டவுணில் இறக்கிவிட்டார்.

ஒன்றுக்கொன்று செங்கோண வடிவில் இணையாக போகன் வில்லையாவில் வரிசையான அமைந்த தெருக்களின் வழியே, சுற்றுலா வழிகாட்டியும் வினோதமான கதைகளைச் சொல்பவருமான யுவராஜ், என்னுடன் நடந்து வந்தார். "பிரெஞ்சு நகரங்களில் இருக்கும் அதேபோன்ற வடிவமைப்பு தான் இங்கே இருக்கிறது, மேலும் தாங்கள் மான்ட்பீலியர் அல்லது பார்டோ நகரத்தில் இருப்பதாக நினைத்தால் அதில் தவறொன்றும் இல்லை," என்றார்.


ஒவ்வொரு 'ரூவும் (வீதி)' வெந்தய, பழுப்பு மற்றும் இளஞ் சிவப்பு நிறங்களில் காலனிய வாதிகளின் நேர்த்தியான மாளிகை களால் நிறைந்து காணப்பட்டது. பிரெஞ்சு குடியிருப்புகள் வழியாக உலவுகையில், வித்தியாசமான ஓவியங்களை சுவர்களிலோ அல்லது ஒரு பழைய ஸ்கூட்டரிலோ மற்றும் மிகவும் வழக்கத்திற்கு மாறான இடங்களிலும் யாத்ரீகர்கள் காணலாம். பிரெஞ்சு குடியிருப்பு பகுதிகளில் தொடங்கிய இந்தப் பயணம், துயூப்ளே சிலை, பழைய நீதிமன்ற கட்டிடம், ஜோன் த ஆர்க், பிரெஞ்சு இராணுவ கட்டிடம், எக்லிஸ் த நாத்ரூ தாம் தே ஆஞ்ச் (அவர் லேடி ஏஞ்செல்ஸ் தேவாலயம்), பிரெஞ்சு டவுண்ஹால் கட்டிடம், இப்போது ஒரு அரசு அலுவலகமாக இருக்கும் பழைய பிரெஞ்சு நூலகம், கோபர்ட் சிலை, ரோமன் ரோலண்ட் நூலகம், பழைய லைட்ஹவுஸ், ஆசியாவின் மிகப்பெரிய காந்தி சிலை வழியாகப் பயணித்து பழைய துறைமுக அலுவலகத்தில் லா கபேயில் ஒரு காபியைப் பருகியதுடன் முடிந்தது.


மாலைகள் விற்கும் ரங்கா.

ஒயிட் டவுணில் உள்ள சில கபேக்களில் சில சிறந்த உணவுகளை கொடுப்பது மட்டுமல்லாது கலைநயமிக்க உள்ளமைப்புகளையும் கொண்டுள்ளது. பாண்டிச்சேரியில் கட்டாயம் சாப்பிட வேண்டிய ரத்தாதூயி, கேஸ்பேச்சோ (சூப்), ஃபாந்தோ ஆ சாக்கோலா (பிரெஞ்சு சாக்லேட் கேக்) மற்றும் லஸானியா போன்றவற்றை பெரும்பாலோனோர் வழங்குகிறார்கள், மேலும் கெலடீரியா மான்டேகேடினி டெர்ம் கடையில் வழங்கப்படும் கெலடோ கோன் ஐஸ் சுவையோ சுவை. இவற்றின் விலைகள் அனைத்தும் மணிபர்ஸை காலி செய்யாத அளவில் இருக்கும். கடல்-நோக்கும் பல விடுதிகளில் ஏதாவது ஒரு பால்கனியில் உட்கார்ந்து கொண்டு, தென்றலின் தாலாட்டில் வங்கக்கடலின் வனப்பைக் கண்டு களிக்கலாம்.

பாண்டிச்சேரியில் உள்ள கடற்கரைகள் ஒவ்வொன்றும் கவர்ச்சி கரமாகவும் ஏதோ மாறுபட்ட ஒன்றையும் வழங்குகிறது. மேலும் சுன்னம்பர் படகு நிலையத்திலிருந்து ரூ.300-இல் ஒரு படகு சவாரியின் மூலம் பிளாஜ் பாரடிஸோ (Plage Paradiso) எனப்படும் பாரடைஸ்





பீச் அடையலாம். பனிப்படகு (kayaking), ஜெட் ஸ்கையிங் முதல் பனானா போட்டிங் வரை பலவித செயல்பாடுகள் வரிசை கட்டி நிற்கிறது. இல்லையென்றால் ஆதவன் முத்தமிடும் கடற்கரையில் நடந்து சென்று கடலலைகளை கண்டுகளிக்க லாம், கிளிஞ்ச ல்களைச் சேகரிக்கலாம் அல்லது உங்களுக்கு விருப்பமான நாவலின் பக்கங்களைப் புரட்டலாம்.

நண்பர்கள் மற்றும் குடும்பத்தி னருக்கு நினைவு பரிசுகளை வாங்க வேண்டுமா? திறந்தவெளியில் ஷாப்பிங் செய்ய ஜவர்ஹலால் நேரு தெருவுக்கோ அல்லது சுவாரஸ்யமான மண் சாமான்கள் மற்றும் கைவினை லாந்தர் விளக்குகள் விற்பனை செய்யப்படும் ரூ துயூப்ளேக்குச் செல்லுங்கள். பாரம்பரிய நகரத்தில் உள்ள காட்டன் ஹவுஸ் அருமையான ஆடைகளை நம்பமுடியாத விலையில் வழங்கு கிறது. மாத்ரி மந்திர் சாலையில் உள்ள ஆரோவில் பொட்டிக்கிலும் கைவினைப் பொருள்கள் அழகழகான விதங்களில் கிடைக்கிறது. உண்மையான இலைகளைக் கொண்டு உருவாக் கப்பட்ட டிரேக்கள், இயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட ஜாம்கள், பெர்ஃபியூம்கள், வாசனை மெழுகுவர்த்திகள், மற்றும் கைவினை எழுதுபொருள்கள் போன்றவை இக்கடையில் உள்ளது.

வசீகரிக்கும் உலகம் அங்கே இருக்கிறது. தனியாக பயணம் செய்கிறீர்களா? தனிமையாக இருப்பதாகவோ அல்லது தவிப்பதாகவோ நீங்கள் உணரத் தேவையில்லை. உங்களை நீங்களே நேசிக்க வைக்கும் அனுபவங்களில் ஒன்று. புத்துணர்வாகவும் புதியதாகவும் என்னை நானே மீட்டுள்ளேன், நமக்கு அருகாமையிலுள்ள மற்றொரு புதையலைத் தேடி கண்டறியும் அடுத்த வார இறுதிக்கு ஆவலுடன் காத்துக்கொண்டிருக்கிறேன்.

புகைப்படங்கள்: கிரண் ஜெஹரா

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

Wordsworld


# புத்தகங்கள் பழசு புத்துணர்வு புதுசு

சந்தியா ராவ்

*பழைய புத்தகக் கடைகளில் நின்று பக்கங்களைப் புரட்டும் சுகமே தனி. அது ஓர் இனம்புரியாத இன்பம்.*

மழை, வெயில், குளிர், வெப்பம் என்று எத்தகு வானிலையாக இருந்தாலும் சரி, நீண்ட நெடிய வாசிப்புக்கு உரியவை. கடந்த 10 நாட்களில் எனக்கு அதிர்ஷ்டம் அடித்திருக்கிறது. சான் பிரான்சிஸ்கோவில் உள்ள இரண்டு முன்னணிப் புத்தகக் கடைகளுக்குச் சென்றேன். இரண்டுமே புதிய, பழைய புத்தகங்கள் கொட்டிக் கிடக்கின்ற இடங்கள். ஒன்று, ஹிப் மிஷனின் வேலன்சியா வீதியில் உள்ள டாக் இயர்டு. மற்றொன்று, கிளெமன்ட் வீதியில் உள்ள கிரீன் ஆப்பிள், இது பர்மா சூப்பர்ஸ்டார் என்ற அட்டகாசமான உணவகத்துக்கு (அங்கே கிடைக்கும் சமோசா சூப் குடித்துப் பாருங்கள்) எதிரே வீற்றுள்ளது. டாக் இயர்டும் இப்படித் தான், மல்லிகைப் பூ போன்ற இட்லி சுடசுடக் கிடைக்கும் உடுப்பி பேலஸ் எதிரே அமைந்துள்ளது.

டாக் இயர்டில் புலிட்சர் பரிசு வென்ற எழுத்தாளர் ஜும்பா லாஹிரியின் இன் அதர் வேட்ஸ் புத்தகத்தின் சலுகைவிலைப் பதிப்பை வாங்கினேன். அதன் மூலப் பதிப்பு இத்தாலி மொழியில் எழுதப்பட்டது. முன்பு சென்னையில் ஒரு புத்தகக்கடையில் அதைப் பார்த்திருக்கிறேன், ஆனால் அப்போது அது குறித்து ஒருவித இகழ்வான அபிப்பிராயம் நிலவியதால் நான் அதன் பக்கங்களைக் கூட புரட்டிப் பார்க்க வில்லை. அவருடைய இன்டர்பிரெட்டர் ஆஃப் மெலடீஸ், அன்அக்கஸ்டம்டு எர்த் ஆகியவை பிரம்மாதமான சிறுகதைத் தொகுப்புகள் ஆங்கிலத்தில் எழுதப்பட்டவை, ஆனால் இன் ஆல்ட்ரே பரோல் என இத்தாலி மொழியில் எழுதப்பட்ட இந்த புத்தகம், சோதனை ஓட்டத்துக்கான குணாதிசயங்களைக் கொண்டுள்ளது. அளவுக்கு மீறிய வர்ணனையும் திளைப்பும் இருக்கும் என்று முன்பு மனதில் கற்பனை செய்து கொண்டதால் தான், இந்தப் புத்தகம் பற்றி கண்டுங்காணாமல் இருந்து விட்டேன். பிறகு அதை வாசிக்கத் தொடங்கியபோது தான் தெரிந்தது, நான் எவ்வளவு அறியாமையில் இருந்திருக்கிறேன் என்று. முதலாவதாக, அது ஓர் இரட்டை மொழியாக்கப் பதிப்பு. இரண்டாவதாக, அது மொழி, மொழியுடனான உறவு என்பன பற்றியது. நம்மில் பலர் காலனியத்துவத்தின் நிழலில் வளர்ந்தவர்கள், வாழ்க்கை முழுவதும் 'ஆங்கிலமயமாகி' நம் சொந்தத் தாய்மொழி அல்லது வட்டார மொழிகளிலிருந்து அந்நியமாகும் பிரச்சனையை சந்தித்து வாழ்பவர்கள். ஜும்பா (இது அவருடைய 'தக்' அல்லது செல்லப் பெயர்; நிலஞ்சனா சுதேஷ்னா என்பதே அசல் பெயர்!) தான் காதலித்த ஒரு மொழியை எழுதப் படிக்கக் கற்றுக்கொள்ளும் முயற்சியும், அந்தக் காதல் கதையின் பின்விளைவுகளும் இன்றைய சூழலுக்குக் கச்சிதமாகப் பொருந்தக் கூடிய ஒன்று.




இன்னொரு ரசனையான புத்தகக் கடைக்குச் சென்றிருந்தேன். பெர்கிலீயில் உள்ள மோஸ் புக்ஸ். இரண்டாண்டுகள் இருக்கும்.


மேலும், 16ஆம் பிறந்த நாள் பரிசு ஒன்றும் வாங்கக் காத்திருந்தது: வேறு என்ன வாங்குவது, புத்தகம் இருக்கும்போது? அம்மா, அப்பா இந்தியர் ஆனால் பிறந்து வளர்ந்தது அமெரிக்கா என்ற நிலையிலுள்ள ஒரு குழந்தைக்கு ஏற்றவாறு கச்சிதமான புத்தகம் ஒன்றை டாக் இயர்டு எனக்கு வழங்கியது: மீரா ஜேகபின் குட் டாக், உரையாடல் வழியாக கடந்தகால நினைவுகளைத் தீட்டும் ஒரு சித்திரம், பெரும்பாலும் ஓர் ஆறு வயதுக் குழந்தையுடன் நடைபெறும் அந்தப் பேச்சு வார்த்தையில், இனம், நிறம், தேர்வுகள், வித்தியாசமாக இருப்பது போன்றவை பற்றி அலசப்படுகிறது. நகைமுரண், நகைச்சுவை, கூர்ந்த பார்வை, ஆழ்ந்த நோக்கு, அம்பு போன்ற பாய்ச்சல் கொண்ட இந்தப் புத்தகம், உள்ளத்தின் அனுபவங்களை வெளிக்கொணருவதாக இருக்கும், அது என் மருமகளின் மனதுக்கு இதமூட்டுவதாகவும் இருக்கும் என்று நம்புகிறேன்.

கிரீன் ஆப்பிள் புக்ஸ் கடையை 25 வயதே அடைந்த ரிச்சட் சேவாய் என்பவர் ராணுவத்தில் சிறிது காலம் பணியாற்றிய பிறகு 1967இல் ஸ்தாபித்தார் என்று தெரிகிறது. அவரிடம் கணிசமாக புத்தகங்களும், சித்திரக் கதைகளும், நேஷனல் ஜியாக்ரபி இதழ்களும் இருந்தன, அவற்றை வைத்து அவர் கடை திறந்தார். சான் பிரான்சிஸ்கோவில் மிகப் பழமையான புத்தகக் கடைகளில் ஒன்றான கிரீன் ஆப்பிள், தொடர்ந்து கருத்து வாக்கெடுப்பில் பே ஏரியாவின் சிறந்த புத்தகக்கடையாக தேர்ந்தெடுக்கப்படுகிறது, அது பரப்பளவில் மட்டுமல்லாது சரக்கு எண்ணிக்கையிலும் கணிசமாக வளர்ந்து வியாபித்து நிற்கிறது.

நான் கடைக்குள்ளேயே செல்லாமல்

அநேகமாகத் தித்திக்கும் நடை கொண்ட மூன்று புத்தகங்களை வாங்கினேன், கட்டணம் செலுத்த மட்டுமே உள்ளே நுழைந்தேன். குளிர்காற்றை ஊடுருவும் பளபளப்பான சூரியஒளியில் நடைபாதை மீது நின்றுகொண்டு பழைய புத்தகங்களின் வரிசை களை நோட்டமிட்டேன். அஸ்மா ஜெஹானத் கானின் தி லேங்வேஜ் ஆஃப் சீக்ரெட்ஸ்-ஐ நோக்கி எனது கை பாய்ந்தது. கனடாவில் கதைக்களம் அமைக்கப்பட்டு, ஈஸா கத்தாக் என்ற துப்பறியும் புலனாய்வு அதிகாரியை முக்கியக் கதாபாத்திரமாகக் கொண்ட மர்ம நாவலை வாசிக்க ஆவலாகக் காத்திருக்கிறேன். ஜெஹானத்கான் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தில் முனைவர் பட்டம் பெற்றவர், முஸ்லிம் கேல் என்ற முஸ்லிம் யுவதிகளை இலக்காகக் கொண்ட முதல் பத்திரிகையின் தலைமை இதழாசிரியராக பொறுப்பு வகித்தவர். 1.98 என்ற விலையில், இது எனக்கு அடித்த லாட்டரி. மேலும், வேறு இரண்டு புத்தகங்களை தலா இதே விலைக்கு வாங்கினேன்.

ஏ பி யஹோஷுவா எழுதிய ஏ உமன் இன் ஜெரூசலம் மீதுள்ள ஸ்டிக்கரில், அது லாஸ் ஏஞ்சலஸ் டைம்ஸ் புத்தக விருதுகளை வென்ற நூல் என்று வர்ணிக்கிறது. இது தவிர, பப்ளிஷர்ஸ் வீக்லி மற்றும் வாஷிங்டன் போஸ்ட் உள்ளிட்ட பல கருத்துக் களங்களில் மிகச்சிறந்த புத்தகம் என்று வாக்களித்திருக்கிறார்கள். இந்த எழுத்தாளரும் எனக்குப் புதிய அறிமுகம் தான். நன்கறியப்பட்ட இஸ்ரேலிய நூலாசிரியரான




யஹோஷுவா ஹைஃபாவில் வசிக்கிறார் மற்றும் ஹீப்ரு மொழியில் எழுத்தாக்கங்களைப் படைக்கிறார். ஒரு தற்கொலைத் தாக்குதலில் உயிரிழந்த அடையாளம் தெரியாத பெண்மணியைப் பற்றிய கதை இது. அப்போது, அக்கறையுள்ள சிலர் குற்றவுணர்வினால் உந்தப்பட்டு, அவள் யார் என்று கண்டறியவும், முறையான நல்லடக்கம் செய்யவும் விழைகின்றனர். வாஷிங்டன் போஸ்ட் புக் வேல்ட் வெளியிட்ட பத்தியில் இது தெளிவாக எடுத்துரைக்கப்படுகிறது: “இந்தப் புதினம், நவீன இஸ்ரேலின் சோகங்கள் குறித்து தொடர்ந்து ஞாபகமூட்டும் அதேவேளை, அந்தக் காயங்கள் தோய்ந்த நிலப்பரப்புக்கும் அப்பால் ‘சிரிப்போம் சிந்திப்போம்’ என்ற தொனியில் சிறகடித்துப் பறக்கிறது... இதன் பலனாக வாச கர்களின் கரங்களில் தவழும் அந்தச் சிறிய, கையடக்கமான, கலைப்படைப்பு ஓர் ரஷிய பாணியில் நயமும், சோகமும், நையாண்டியும், நேசமும் கொண்டதொரு வித்தியாசமான ஆக்கம்.’’ ஹில்லல் ஹால்கினின் ஆங்கில மொழியாக்கத்தில் முதல் சில பக்கங்களை வாசிக்கும் போதே நையாண்டி பொருத்தமாக வெளிப்படுகிறது.

கிரீன் ஆப்பிளில் நான் எடுத்த மூன்றாம் புத்தகம், ட்ரெயில் ஆஃப் கிரம்ப்ஸ், அது கிம் சனீ வளர்ந்து ஆளாகும் கதை. அவள் கொரியாவின் சந்தையில் ஒரு கைவிடப்பட்ட குழந்தையாகக் கிடப்பதும், பிறகு தத்தெடுக்கப்பட்டு நியூ ஆர்லீன்ஸில் வளர்வதும் அதில் மலரும்-நினைவுகளாகப் பொறிக்கப்படுகிறது. பிறகு அவளுடைய வாழ்க்கை மேலும் பரபரப்பாக மாறுகிறது, எனினும் சமையற்கட்டில் தான் அவள் தன் உள்மனதுடன் உரையாடத் தொடங்குகிறாள். உணவு குறித்த புத்தகங்களில் ஒருவித தனித்துவ மான மனிதாபிமானம் கமழ்கிறது: பேகிங் கேக்ஸ் இன் கிகாலி, தி செ ட்டிலர்’ஸ் குக்புக், சாக்கலேட், பீச்சஸ் ஃபார் ஃபாதர் பிரான்சிஸ், ஜூலியா அன்ட் ஜூலியா, தி ஹன்ட்ரட்-ஃபூட் ஜேர்னி... என இது நீண்ட, நெடிய பட்டியல். புலம்பெயர்வு குறித்த இந்த மலரும்-நினைவுகள் புத்தகத்துக்கு




மிகவும் பொருத்தமாக தலையங்கத்தில் எழுத்தாளர் ஃபிளானரி ஓ’கொனாரின் சொற்கள் மேற்கொள் காட்டப் பட்டிருந்தன: “உங்கள் பூர்வீகம் மறைந்துவிட்டது, நீங்கள் சென்று கொண்டிருப்பதாக நினைத்த இடமும் இருக்கவே இல்லை, நீங்கள் இருக்கும் இடமும் ஒன்றும் ஒத்துவரும் பூமியல்ல, அதை விட்டு வெளியேறுவதே மேல். உங்கள் உள்ளத்தில் மட்டும் தான் இப்போது இடம் இருக்கிறது.’’ இதை ஆயுள் முழுக்க வாசிக்கலாம், உண்மையிலேயே.

இதேபோல், புத்தகப் பிரியர்கள் செல்ல வேண்டிய முக்கியமான இன்னொரு இடம், பெங்களூரின் சர்ச் வீதியில் உள்ள பிளாஸ்ஸம் புக் ஹவுஸ்.

எல்லா புத்தகக் கடைகளிலும் பழைய புத்தகங்கள் இருந்தால் நன்றாக இருக்கும். அது அவர்களுக்கும் லாபம் தான் என்று நினைக்கிறன். (நாம் நேசிக்கும் நண்பர்களை அதாவது புத்தகங்களை) அனுப்பிவைக்கச் சிறந்த இடம் ஒரு புத்தகக் கடை தான். அவர்களைக் கவனித்துக்கொள்ள ஒருவன் அல்லது ஒருத்தி வரும்வரை அது அவர்களைக் கவனித்துக் கொள்ளும். இதைச் செய்வதற்கு, நாம் நமது புத்தகங்களை குறியிடாமல், தூசி தட்டி, நாசூக்காகப் பக்கங்களைப் புரட்டி, நல்ல நிலையில் பராமரித்தல் அவசியம்.

கட்டுரையாளர் குழந்தைகள்
எழுத்தாளர் மற்றும் மூத்த
பத்திரிகையாளர்.

வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்



**RC பாண்டிச்சேரி சென்ட்ரல்** — RID 2981
நகரில் உள்ள செயின்ட் ஆன்ஸ் அரசு உதவிபெறும் பள்ளியின் அறிவியல் ஆய்வுக்கூடத்திற்கு ரூ.1 இலட்சம் மதிப்புள்ள புதிய மேஜைகள் மற்றும் பெஞ்சுகளை இந்த சங்கம் நன்கொடையாக வழங்கியுள்ளது.

**RC உளுந்தூர்ப்பெட்** — RID 2982
காலமருத்தூர் கிராம மக்களுக்கு அரவிந்த் கண் மருத்துவ மனையுடன் சேர்ந்து, இச்சங்கம் ஓர் கண் மருத்துவ முகாம் நடத்தியது. இதில் 200 மக்கள் பயனடைந்தனர்.





**RC ஜெய்பூர் பாபு நகர்** — RID 3054
ஒரு CSR கருத்தரங்கில் IPDG நீரஜ் சோகனி மற்றும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கிடையே மூன்று புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டது. சமூக நலத்திட்டங்களுக்கு நிதி வழங்க எப்படி நிறுவனங்களைத் தொடர்பு கொள்வது என்பது குறித்து PDG அஜய் காலா, ரமேஷ் அகர்வால், ரத்னேஷ் காஷ்யப் மற்றும் கார்ப்பரேட் நிறுவனத் தலைவர்கள் உரையாற்றினர்.

**RC சந்திரபூர்** — RID 3030
தடோபா வனவிலங்குகள் சரணாலயத்தில் வழி காட்டிகள் மற்றும் காட்டு வாகன டிரைவர்களுக்கு கண் பரிசோதனை முகாம் நடத்தப்பட்டது. மருத்துவக்குழு அறுபது நபர்களைப் பரிசோதனை செய்ததில், கண்புரை அறுவை சிகிச்சைக்காக ஐந்து பேர் அடையாளம் காணப்பட்டனர்.



# சங்க சேவைகள்

RC **சூரத்** — RID 3060

பொன்சாரா ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்கு கழிவு ஜீன்ஸ் துணிகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட சுமார் 150 பள்ளிப்பைகள் வழங்கப்பட்டது. ரொட்டேரியன் ரூபல் தாமணியின் சிந்தையில் உதித்த இந்தத் திட் டப்பணிக்கு சங்க உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் நண்பர்கள் நிதியுதவி செய்தனர்.



RC **டோம்பிவ்லி ஈஸ்ட்** — RID 3142

பள்ளிக் குழந்தைகளுக்கான டோம்பிவ்லி ஒலிம்பிக்ஸ் போட்டியைத் IPDG ஆஷஸ் கங்குலி துவக்கி வைத்தார். பல்வேறு பிரபலங்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர். செஸ் மற்றும் கேரம் போன்ற உள்விளையாட்டுகளுடன் சேர்த்து குழு போட்டிகளும் தடகளப்போட்டிகளும் நடத்தப்பட்டது.



RC **அமிர்தசரஸ் நார்த்** — RID 3070

அன்னப்பூர்ணா தினம் என்ற திட்டப்பணியின் கீழ், 20 ஏழைக் குடும்பங்களுக்கு உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டது.



RC **தர்மாவரம் மிட்டவுண்** — RID 3160

சென்னகொத்தபள்ளியில் உள்ள ஒரு ஜில்லா பரிஷத் பள்ளியில் கண் மருத்துவ முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது, இதில் 150 நோயாளிகள் கண்புரை மற்றும் இதர கண் சார்ந்த பிரச்சனைகளுக்காக பரிசோதனை செய்யப் பட்டார்கள். இப்போது செயல்பாட்டில் இருக்கும் இந்தத் திட்டப்பணியால் இதுவரை 638 பேர் பலனடைந்துள்ளனர்.



RC **பன்வெல் எலைட்** — RID 3131

'பென்' என்னும் கிராம மக்களுக்கு ஆடைகள், காலணிகள் மற்றும் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டது.



**RC குஷால்நகர்** — RID 3181

போய்கேரியில் உள்ள ஒரு அரசு ஆரம்பப்பள்ளியில் IPDG ரோஹிநாத் P, புதிதாக கட்டப்பட்ட கழிவறைகளைத் திறந்துவைத்தார். RC பெங்களூர் சவுத்வெஸ்ட், மைக்ரோலேண்ட் பெங்களூர் மற்றும் வாசவி கிளப்ஸ் இன்டர்நேஷனல் போன்ற சங்கங்கள் இதைக் கட்டுவதற்கு நிதியுதவி செய்தன. இந்தத் திட்டப்பணியின் மதிப்பு ரூ.3.1 இலட்சம்.





**RC தலசேரி** — RID 3202

IPDG E K உமர் முதியோர் இல்லத்திற்கு தண்ணீர் சுத்திகரிப்பான் மற்றும் ஆறு இரும்பு சேர்களை நன்கொடையளித்தார். ரொட்டேரியன் Dr ஜோஸ் ரூ.10,000 முதியோர் இல்லத்திற்கு நன்கொடை அளித்தார். திட்டப்பணியின் மொத்த மதிப்பு ரூ.30,000.

**RC கோடீஸ்வரா** — RID 3182

DG அபிநந்தன் ஷெட்டி, ஏழை மற்றும் நலிவடைந்த குடும்பத் தினருக்காக புதிதாகக் கட்டப்பட்ட வீடுகளுக்கான சாவி களை வழங்கினார். இந்த வீடு ரூ 3.15 இலட்ச மதிப்பில் கட்டப்பட்டது.





**RC திருவனந்தபுரம் சப்அர்பன்** — RID 3211

ஊனமுற்ற ஒரு பையனுக்கு செண்டை மேளம் வழங்கப்பட்டது, இதை வைத்து தன்னுடைய வாழ்வாதாரத்திற்குப் பயற்சி செய்கிறான். மேளத்தை ரொட்டேரியன் Dr ஃபஸில் மரேகர் பரிசளித்தார்.

**RC கூத்தாட்டு குளம்** — RID 3201

சமீபத்திய வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சங்கம் கட்டி க்கொடுத்த புதிய வீடுகளுக்கான சாவிகளை சட்டமன்ற உறுப்பினர் அனூப் ஜேக்கப் முன்னிலையில் IPDG A V பதி வழங்கினார், இது ஹோப் என்ற ரோட்டரி திட்டப்பணி மூலம் செயல்படுத்தப்பட்டது.



# சங்க சேவைகள்

RC **குற்றாலம்** — RID 3212

சித்ரா நதியை சுத்தப்படுத்துவதற்காக IPDG K ராஜகோபாலன் ரூ.3 இலட்சத்திற்கான காசோலையை மாவட்ட ஆட்சியர் ஷில்பா பிரபாகரிடம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் அவருடன் ரோட்டரி மாவட்டப் செயலாளர் C வையாளி முத்தையா மற்றும் சித்ரா ஆறு தூய்மை திட்டப்பணி ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் சக்திநாதன் ஆகியோர் உடனிருந்தனர்.



RC **வேலூர் மிட்டவுன்** — RID 3231

இச்சங்கம் தத்தெடுத்த கிராமமான கலர்பாளையத்தில் உள்ள அரசு நடுநிலைப்பள்ளிக்கு ரூ.50,000 மதிப்புள்ள விளையாட்டுப் பொருள்களும் சேர்கள், லாக்கர்கள் மற்றும் மேஜைகள் வழங்கப்பட்டது.



RC **மெட்ராஸ் சவுத்வெஸ்ட்** — RID 3232


கிவ்ராஜ் சோர்டியா மெமோரியல் டயாலிசிஸ் மையத்திற்கு ரூ.7 இலட்சம் மதிப்புள்ள டயாலிசிஸ் இயந்திரம் நன்கொடையளிக்கப்பட்டது, ஏழைக் குடும்பங்களுக்கு செய்யும் சேவையை பாராட்டும் விதமாக இது அமைந்தது.




RC **போகரோ மிட்டவுண் கபில்ஸ்** — RID 3250

'முக்திதம் வாகினி' என்ற அமரர் ஊர்தி குடியிருப்பு வாசிகளின் சேவைக்காக அர்ப்பணிக்கப்பட்டது. இந்த வாகனம் இறந்தவர்களை நன்முறையில் அடக்கம் செய்வதற்குப் பயன்படுத்தப்படும்.






RID 3261

ஒரு 15-நாள் நட்புக் கலாச்சார பரிமாற்ற சுற்றுலாவுக்காக 10-பேர் கொண்ட ரொட்டேரியன்கள் குழு மற்றும் அவர்களின் மனைவியுடன் அமெரிக்காவின் RID 6540 இந்தியானா ரோட்டரி சங்கத்திற்குச் சென்றனர். பல்வேறு இடங்களில் நான்கு உபசரிப்பாளர்களுடன் அவர்களுக்கான தங்கும் வசதிகளை RFE தலைவர் டான் ஹார்வி மற்றும் IPDG லிசா வாட்டர்மேன் ஏற்பாடு செய்து கொடுத்தனர்.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்
வடிவமைப்பு: L குணசேகரன்

# பதற்றத்திலிருந்து பரவசத்துக்கு

பரத் - ஷலன் சவூர்

பதற்றம் என்ற சொல்லுக்குப் பரவசம் என்பது நேர் எதிர்ச் சொல்லாகும். பதறுபவர் அமைதி இல்லாமல் இருப்பர். மனசுக்குள் அமைதியை நாட வேண்டும என்று துடித்தாலும் இந்த நிலைதான். பதற்றமும் பரவசமும் ஒரு வகையில் ஒரே மாதிரி இருக்கும். இரண்டுமே தீவிரமாகவும் இருக்கும். ஆனால், தன்மைதான் வேறு. பதற்றத்தில் இருப்போரால் ஓரிடத்தில் இருக்க முடியாது. படபடப்பாக இருப்பார்கள். மனதும் சீராக இருக்காது. அச்சம் இருக்கும். பரவச நிலை எல்லா பதற்றத்தையும் உடைத்தெறிந்துவிடும். ஒத்திசைந்த நிலையை ஏற்படுத்தும். துள்ளிக் குதிப்போம்.

எதற்காக பதற்றப்படுகிறோம்? உற்றார் உறவினர், பெற்றோர், சகோதரர், வாழ்க்கைத் துணையை இழப்பு. நம்மிடம் உள்ள பணம், பதவி, பெருமை, திறமை ஏன் வாழ்க்கையையே இழந்துவிடுவோம் என்ற பயம். ஏன், பரவச நிலை நம்மை எப்படி சுதந்திரமாக வைத்திருக்கிறது என்பதையும் எப்படிக் குதூகலிக்கச் செய்கிறது என்பதையும் கூட இதனால் மறந்து விடுகிறோம்.

இமாசலப்பிரதேசம் தர்மசாலாவில் தோழி ஒருத்தியின் வீட்டுக்குச் சென்றோம். நாங்கள் சென்றபோது, தேநீர் தயாரிப்பதற்காக சமையலறைக்குள் நுழைந்தார். அந்த நேரம் ஒரு குரங்கு உள்ளே வேகமாக நுழைந்து வாழைப்பழத்தை எடுத்துக் கொண்டு வாசல் வழியாக வெளியேறியது. அங்கே சிறிது நின்று எங்களைப் பார்த்தது. அக்குரங்கின் கண்ணில் மிரட்சி இல்லை. நாங்கள் இருந்ததை அது உணர்ந்திருக்கிறது. இருந்தாலும், உணர்ந்தும் “உள்ளே நுழைந்து சென்றேன் பார்த்தாயா?” என்ற புத்திசாலித்தனமான பார்வை இருந்தது.

அதே சமயம் தோழி ஏன் வீட்டுக் கதவைத் திறந்தே வைத்திருக்கிறார் என்று தோன்றியது. ஒரு குரங்கு சர்வ சாதாரணமாக உள்ளே நுழைந்து ஒரு பொருளைத் தாராளமாக எடுத்துச் செல்கிறது. வீட்டைச் சுற்றும் முற்றும் பார்த்த பிறகுதான் தெரிந்தது. வீட்டில் ஆடம்பரமான பொருள் என்று அங்கும் இங்கும் கிடக்கவில்லை. சோபா கிடையாது. ஒரு காபி டேபிள், மேலே கொஞ்சம் பழம், அவ்வளவுதான். வேறு ஏதும் இல்லை. அவ்வளவுதான். அப்படித்தான் வைத்திருந்தார்.

நமது மனமும் அப்படித்தான் ஓர் அறையைப் போன்றது. எப்படி தோழியின் அறையில் அங்கும் இங்கும் விலையுயர்ந்த பொருட்கள் இல்லையோ அதைப் போல் மனத்திலும் ஏதாவது நினைவுகள், யூகங்கள், வதந்திகள், விமர்சனங்கள், பொறாமை என்று எதுவும் இல்லாமல் சாதாரணமாக இருக்கட்டும். அதுபோதும். மனத்தில் அன்பை நிறைத்து வைத்துக் கொள்ளுங்கள். யாரும் எதையும் எடுத்துச் செல்வார்களோ என்று நினைக்காமல்,



மனக்கதவைத் திறந்து வைத்துக் கொள்ளுங்கள். எளிமையான வாழ்க்கை பதற்றத்தை பரவசமாக மாற்றிவிடும்.

தனிமையைத் தேடுங்கள். தினமும் கொஞ்சம் பேரைப் பார்த்தால் போதும் என்று தீர்மானியுங்கள். யாரையும் சந்திக்காமல் இருப்பதற்கு பாருங்கள். காரணம் மிகவும் எளிதானது. தினமும் யாரையாவது சந்தித்தால் அவர்களது பிரச்சினைகளையும் சேர்த்துக் கொள்வீர்கள். தினமும் அப்படிப்பட்டவர்களைச் சந்தித்தால், அவர்களது பிரச்சினைகளால் ஈர்க்கப்பட்டு, யாரைப் பற்றியாவது யாரிடமாவது புகார் கூறுவது, வம்பு பேசுவது என ஆகிவிடும். அது உங்களது பதற்றத்தை அதிகரிக்கும். மாறாக நீங்கள் மனதுக்குள் தனியாக இருந்தால், எல்லா வேலையையும் அமைதியாகச் செய்வீர்கள்.

தனிமையில் இருப்பது, உங்களுக்கு ஓரிடம் தரும். அப்போது, பதற்றமாக இருக்கும் போது உள்ள ஆற்றலை உணர்வீர்கள். பதற்ற உணர்வினால் ஏற்படும் இன்னொரு தீய விளைவு எவ்வளவு இருந்தாலும் மனம் திருப்தியடையாத நிலையாகும். கோடீஸ்வரர் கூட தான் ஒரு பரம ஏழை என்று அவலப்படுவது போன்ற அவநம்பிக்கை இருக்கும். அது குடும்பத்தினர், நண்பர்களையும் பாதிக்கும்.

எனவே, மனதை அமைதிப்படுத்த உங்களது ஆற்றல் தவறாகப் பயன் படுத்தப்படுகிறது என்ற விழிப்புணர்வு தேவை. மேலும், ஆற்றல் எங்கே விரயமாகிறது என உணரும் கவனம், விழிப்புணர்வு தேவை. அறையிலிருந்து வெளியேறும் போது, மின்விசிறி, விளக்கு ஆகியவற்றை அணைப்பதைப் போல் உங்கள் மனத்தில் உள்ள தான் என்ற உணர்வு வெளியேறச் செய்யுங்கள். யார் மீதாவது புகார், விமர்சனம் கூறுவதை நிறுத்தினால், நிதானம் ஏற்படும், புகார்களை நிறுத்தினால் அமைதி ஏற்படும்.

போரைக் கைவிட்டு அன்பு செலுத்து வோம். எதிர்மறைச் சிந்தனைகளைக் கைவிடுவதன் மூலம் போர்க் களத்தை அமைதிப் பூங்காவாக்குவீர்கள். அச்சுறுத்தும் சூழலிலிருந்து அமைதியான அச்சமில்லாத சூழல் உருவாகும். அந்த அமைதிப் பாதையில் தொடர்ந்து செல்லுங்கள். விரைவில் அச்சமில்லாத சூழலும் வாழ்வதற்கான அற்புதமான சூழலாக மாறும். தன்னுணர்வற்ற நிலையில் எதிர்மறைச் சிந்தனைகள், சமநிலையற்ற உணர்வுகள் மனத்தில் இருந்தன. இப்போது, விழிப்புடன் இருக்கிறார்கள். அந்த அபத்தங்கள் காணாமல் போகும்.

விழிப்போடு இருப்பது என்றால், நாம் என்ன செய்கிறோம், என்ன நினைக்கிறோம் என்பதை முழுமையாக உணர்தல் ஆகும். இது பிறரது வம்பு, பாரபட்சமான வம்பு அரசியலிலும் எதிர்மறைகளிலும் சிக்கிக் கொள்ளாமல் இருக்க உதவும்.

ஓர் உணவகத்திற்குச் செல்லும் போது, பழைய, ஆறிப்போன உணவைக் கொடுத்தால் என்ன செய்வோம்? போய் புதிதாகத் தயாரித்த உணவைக் கொண்டுவா என்று சொல்வோமல்லவா? அதைப் போல் ஏன் முடிந்து போன ஆறிப்போன சம்பவங்களை மனதுக்குள் போட்டுக் கொள்ள வேண்டும்? அது போல பழைய எண்ணங்களைத் துறந்துவிட்டு, புதிய எண்ணங்களை ஏற்றுக் கொள்ளுங்கள். எல்லாம் முடிந்து போன சமாசாரம். இனி நடக்கிற காரியத்தைப் பார்ப்போம் என்று அமைதியாக, நிதானமாக, திரும்பத் திரும்ப உங்களுக்குள்ளேயே சொல்லிக் கொள்ளுங்கள். அது முடிந்து விட்டதே என நிம்மதியாக இருங்கள். உங்களுக்கும் அனைவருக்கும் புதிய சிந்தனைகளை மனத்தில் ஏற்றிக் கொள்ளுங்கள்.

உணர்ச்சி சமநிலையை (Emotional Equilibrium) அடைவதற்கு இந்தப் பழக்கங்களைத் தினமும் கடைப்பிடியுங்கள். உங்களது உணர்வுகளை, விமர்சிப்பது, குறை கூறுவது, புகார் சொல்வது ஆகிய உணர்வுகளை ஒழுங்குபடுத்துங்கள்.

நீங்கள் தனிமையில் இருந்தால், உங்கள் மனத்தில் பேசிக் கொள்வதைக் கவனியுங்கள். மற்றவர்கள் உங்கள் பேச்சைக் கவனிக்கும் போது, அமைதியாக, இதமாக, இனிமையாக, நிதானமாகப் பேசுங்கள். பிற சமயங்களில் அமைதியாக இருப்பீர், நடுநிலையுடன் கவனியுங்கள்.

எந்த பிரச்சினை, குழப்பம் வந்தாலும் உணர்ச்சிகளைக் கட்டுப் படுத்துங்கள். உடனே மல்லுக்கட்டிக் கொண்டு இருக்காதீர்கள். எல்லாமே கடந்து போகக் கூடியது என்பதை நினைவில் கொள்ளுங்கள். உள் மனம் தடுமாறாமல் இருக்க வைத்துக் கொள்ளுங்கள். சூழ்நிலையை அமைதியாகக் கையாள முடியும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

நிறைவாக, நிலைமை உங்களுக்குச் சாதகமாக அமைந்தால், அனைவரும் உங்களைப் பாராட்டினாலோ, அன்பைக் காட்டினாலோ அந்த அற்புதமான பரிசுகளை நிராகரிக்கும் வகையில் உங்களது தான் என்ற உணர்வுக்கு இடம் தராதீர்கள். தாராளமாக ஏற்றுக் கொள்ளுங்கள். உங்களது உறவில் புதிய விஷயங்களை உங்களது மூளை ஏற்றுக் கொள்ளட்டும். பரந்த யதார்த்தை உங்கள் மனம் ஏற்கட்டும்.

உங்கள் வாழ்க்கையை உங்கள் குடும்பம், வேலை ஆகிய அளவில் நினைத்துக் கொள்ளாதீர்கள். அப்படி நினைத்துக் கொண்டால், கோப்பையில் உள்ள தண்ணீரில் கல்லைப் போடுவது போல. கல்லைப் போட்டதும் தண்ணீர் சிதறியோடும். அதையே உலக அளவில் நினைத்துக் கொள்ளுங்கள். பெரிய ஏரியைப் போல் இருக்கும். கல்லைப் போட்டால், ஏதோ கொஞ்சம் அலைகள்தான் தோன்றி மறையும். வாழ்க்கையை அப்படி அமைத்துக் கொள்ளுங்கள் என்று ஓர் அறிஞர் கூறினார்.

மக்களை, எதிரிகளைப் போல் அல்லாமல் சக பயணிகளைப் போல் கருதும் வகையில் உங்களது மனம் மிகப் பெரிய அளவில் விரிவடையட்டும். மகிழ்ச்சி உங்கள் கண்களை, செயல்களை, வாழ்க்கையைப் பிரகாசிக்கச் செய்யட்டும். உங்கள் மன மேடையில் அமைதி நடனமாடட்டும். அதுதான் பரவச நிலையாகும்!

கட்டுரை ஆசிரியர்கள் இருவரும் Fitness for Life மற்றும் Simply Spritiual — You Are Naturally Divine என்ற ஆங்கில நூல்களின் எழுத்தாளர்கள்.

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

**ரோட்டரி நியூஸ் ஆண்டு சந்தா செலுத்தும் வழிகள்:**

*இப்போது நீங்கள்* **ரோட்டரி நியூஸ் ஆண்டு சந்தாவை** *ஆன்லைன் மூலமும் செலுத்தலாம். எங்கள் வங்கி விவரம்:*

| | | |
|---|---|---|
| Bank | : | HDFC Bank<br>SB Account |
| Branch | : | Egmore, Chennai |
| A/c Name | : | Rotary News Trust |
| A/c No. | : | 50100213133460 |
| IFSC Code | : | HDFC0003820 |

*ஆன்லைனில் பணம் செலுத்தியப் பின், உங்கள் சங்கப்பெயர், சங்கத் தலைவர்/செயலாளர் பெயர், பணம் செலுத்திய தேதி, எவ்வளவு செலுத்தினீர்கள் மற்றும்* UTR *எண் இவற்றை மறக்காமல் எங்களுக்கு இமெயில் செய்து விடுங்கள்.*

*சந்தாவை உங்கள் வங்கியில் காசோலை அல்லது ரொக்கமாக கட்டினால் உங்கள் சங்கப் பெயரை மட்டும் அங்கு குறிப்பிடுங்கள்.* “Rotary club of” *என்பதை தவிர்க்கவும்.*

## Rotary at a glance

| | | |
|---|---|---|
| Rotarians | : | 1,196,211 |
| Clubs | : | 35,893 |
| Districts | : | 538 |
| *Rotaractors | : | 169,845 |
| Clubs | : | 10,234 |
| *Interactors | : | 566,214 |
| Clubs | : | 24,618 |
| RCC | : | 10,565 |

As on July 12, 2019


## Membership Summary

As on July 2, 2019

| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians | Rotaract Clubs | Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|
| 2981 | 111 | 4,568 | 220 | 45 | 237 | 216 |
| 2982 | 68 | 3,015 | 156 | 69 | 117 | 54 |
| 3000 | 132 | 5,238 | 488 | 234 | 691 | 207 |
| 3011 | 85 | 3,590 | 839 | 47 | 119 | 25 |
| 3012 | 93 | 3,749 | 972 | 59 | 133 | 56 |
| 3020 | 72 | 3,799 | 180 | 57 | 467 | 349 |
| 3030 | 92 | 4,874 | 604 | 85 | 327 | 210 |
| 3040 | 94 | 2,105 | 234 | 33 | 138 | 143 |
| 3053 | 68 | 2,963 | 519 | 12 | 60 | 96 |
| 3054 | 126 | 5,794 | 957 | 81 | 328 | 475 |
| 3060 | 99 | 4,081 | 530 | 59 | 130 | 140 |
| 3070 | 103 | 3,084 | 352 | 49 | 164 | 58 |
| 3080 | 84 | 3,469 | 325 | 90 | 230 | 110 |
| 3090 | 81 | 2,011 | 49 | 36 | 39 | 122 |
| 3100 | 79 | 1,924 | 118 | 12 | 80 | 146 |
| 3110 | 123 | 3,932 | 383 | 30 | 53 | 104 |
| 3120 | 79 | 3,382 | 436 | 32 | 63 | 52 |
| 3131 | 134 | 5,288 | 1,126 | 98 | 318 | 91 |
| 3132 | 97 | 3,778 | 394 | 40 | 220 | 156 |
| 3141 | 104 | 5,612 | 1,298 | 113 | 274 | 86 |
| 3142 | 96 | 3,358 | 639 | 80 | 206 | 64 |
| 3150 | 95 | 3,589 | 363 | 63 | 253 | 111 |
| 3160 | 75 | 2,617 | 166 | 29 | 48 | 82 |
| 3170 | 129 | 5,681 | 673 | 62 | 354 | 165 |
| 3181 | 85 | 3,572 | 334 | 58 | 275 | 115 |
| 3182 | 84 | 3,138 | 229 | 32 | 283 | 97 |
| 3190 | 124 | 4,797 | 631 | 127 | 372 | 54 |
| 3201 | 144 | 5,375 | 344 | 98 | 141 | 49 |
| 3202 | 128 | 4,947 | 273 | 80 | 450 | 47 |
| 3211 | 141 | 4,450 | 288 | 8 | 98 | 129 |
| 3212 | 100 | 4,004 | 314 | 98 | 302 | 144 |
| 3231 | 85 | 3,726 | 347 | 53 | 226 | 355 |
| 3232 | 124 | 5,283 | 921 | 121 | 354 | 83 |
| 3240 | 88 | 3,048 | 392 | 53 | 361 | 186 |
| 3250 | 101 | 3,826 | 664 | 65 | 221 | 179 |
| 3261 | 70 | 2,505 | 331 | 12 | 113 | 43 |
| 3262 | 92 | 3,364 | 423 | 40 | 81 | 77 |
| 3291 | 146 | 3,589 | 714 | 85 | 144 | 608 |
| **India Total** | **3,831** | **147,125** | **18,226** | **2,445** | **8,470** | **5,484** |
| 3220 | 73 | 1,971 | 275 | 80 | 212 | 73 |
| 3271 | 87 | 1,354 | 221 | 56 | 19 | 18 |
| 3272 | 134 | 1,648 | 290 | 51 | 40 | 43 |
| 3281 | 210 | 5,693 | 864 | 224 | 97 | 192 |
| 3282 | 153 | 4,612 | 546 | 131 | 50 | 44 |
| 3292 | 119 | 4,645 | 699 | 123 | 139 | 114 |
| **S Asia Total** | **4,607** | **167,048** | **21,121** | **3,110** | **9,027** | **5,968** |

*Source: RI South Asia Office*


# On the racks




## Becoming

Author : **Michelle Obama**
Publisher : **Viking**
Pages : **426; `999**


In her memoir, a work of deep reflection, Michelle Obama invites readers into her world, chronicling the experiences that have shaped her. She talks about her childhood on the South side of Chicago to her years as an executive balancing the demands of motherhood and work, to her time spent at the world's most famous address. With honesty and lively wit, she describes her triumphs and her disappointments, both public and private, telling her full story as she has lived it. *Becoming* is the deeply personal reckoning of a woman of soul and substance who has steadily defied expectations — and whose story inspires us to do the same.




## The sugar impact diet

Author : **J J Virgin**
Publisher : **Hachette India**
Pages : **344; `499**

This book describes how foods contain different types of sugars that have unique effects in your body. JJ Virgin explains the role of sugar metabolism in weight loss. Foods with a high sugar impact cause weight gain, fatigue and inflammation. Low sugar impact foods promote fat burning and sustained energy. The diet claims if you switch foods with a high sugar impact for those with a low sugar impact you can lose up to 10 pounds in 2 weeks. It identifies the most damaging types of sugars that you may be eating every day without realising it. Virgin promises her programme will help you cut sugar out of your diet — without the cravings and the crashes. Her plan, she says, will also lead to high energy levels, better focus, less bloat and will reverse chronic diseases, such as obesity, diabetes and heart disease. Oh, and for those of you who diet to fit into skinny jeans, Virgin says followers will "look and feel younger almost overnight."




## Fear of Lions

Author : **Amita Kanekar**
Publisher : **Hachette India**
Pages : **336; `399**

Set twelve years into the rule of the austere Emperor Aurangzeb Alamgir, Amita Kanekar's intricately woven and powerful novel tells the story of an unlikely rebellion that almost brought imperial Dilli to its knees. Two young Mughal nobles, Shamsher and his sister Zeenat, leave Shahjahanabad for a trip down the royal Ajmer highway to the market town of Narnaul. The reluctant Shamsher is on a secret mission for his father; an excited Zeenat on one of her own. Their journey takes them through the shattered landscape of a recently crushed mutiny. This revolt was rumoured to have been led by a witch inspired by the Bhakti saint Kabir; her militant followers, many of them women, called themselves *Satnami*: those whose name was truth. The rebels were finally defeated, but the questions remained: Where had they come from and what did they want? Who really was Kabir, the acid-tongued weaver-poet of Banaras? How could Bhakti, the cult of passionate devotion, inspire violence?

Compiled by Kiran Zehra
Designed by Krishnapratheesh S

# பாதி படித்த புத்தகங்கள்

LBW

TCA ஸ்ரீநிவாச ராகவன்

பல நண்பர்கள் என்னிடம், ஏதாவது புத்தகம் எழுதட்டுமா என்று கேட்பார்கள். அவர்களிடம், எழுதிப் புகழ் பெறவேண்டும் என்று நினைத்தால், அது எளிதல்ல. பயன் கிடைக்குமா என்பது சந்தேகம்தான் என்று எச்சரித்து அனுப்புவேன். 1975ம் ஆண்டு முதல் 1980 வரையில் பெரிய பிரிட்டிஷ் புத்தக வெளியீட்டு நிறுவனத்திற்காக வேலை செய்திருக்கிறேன் என்பதால், அதைப்பற்றி எனக்குத் தெரியும். அதுவரையில் புத்தகம் எழுதுவது தனியான சமாசாரம் என்று அப்பாவியாக நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால், வெளியிடுவோருக்கு அது ஒரு உற்பத்திப் பண்டம் போலத்தான், தயாரிப்பார்கள், விலை நிர்ணயிப்பார்கள், விற்பார்கள் அவ்வளவுதான்!

நான் மற்றவர்களுக்குக் கூறிய இந்த உபதேசத்தை முப்பது ஆண்டுகளுக்குப் பின் நானே மறந்துவிட்டேன். நான்கு புத்தகங்களை எழுதிவிட்டேன். அந்தப் புத்தகங்கள் வெளியான பிறகு அது குறித்து ஏதாவது நூல் மதிப்பீடு வருகிறதா என்று பார்ப்பேன். ஒரே புத்தகத்தைத்தான் பல பத்திரிகைகள் விமர்சனம் செய்து வெளியிட்டன. இப்படி 90 ஆயிரம் வார்த்தைகள் நூலாக எழுதியிருக்க வேண்டியதில்லை என்று அப்போது புரிந்துகொண்டேன். 10 ஆயிரம் வார்த்தைகளில் நூல் எழுதியிருக்கலாம் என்பதைப் புரிந்துகொண்டேன். புத்தகத்தைப் படிக்கலாம், வருடிப் பார்க்கலாம், அல்லது கைவிடலாம் என்பதுதான் வழிகாட்டி நெறிகள். நூல் விமர்சகர்கள் இப்படித்தான் செய்கிறார்கள். ஆனால், யாருமே புத்தகத்தில் முழுமையாக என்ன இருக்கிறது, எது இல்லை என்று விவரிப்பதில்லை.

என் நண்பர் ஒருவர் மாதந் தோறும் ஆறு, ஏழு புத்தகங்களை வாங்குவார். எதற்காக இத்துனூண்டு புத்தகத்துக்காக இப்படி நூற்றுக் கணக்கில் செலவிடுகிறார்? யாராவது மெகா சைஸ் தோசை வாங்கி, பாதி சாப்பிட்டு மீதி வைத்துவிடுவார்களா? பெரிய மது பாட்டில் வாங்கி, பாதி குடித்துவிட்டு மீதியை வைத்துவிடுவார்களா? அந்த நண்பரிடம், யாராவது திரையரங்குக்குச் சென்று அரை மணி நேரத்தில் திரும்பி வருவார்களா? அரை மணி நேரம் ஓடும் இசைக் குறுந்தட்டை 5 நிமிடம் கேட்டு விட்டு எழுந்துவிடுவார்களா? காசு கொடுத்துவிட்டால், முழுமையாகத் தானே அனுபவிக்கிறீர்கள்? என்று கேட்டேன். அதே போல புத்தகங்கள் தானே! மக்கள் ஏன், காசு வீணாகப் போனால் போகிறது என்று அலட்சியமாக இருக்கிறார்கள். எதற்காக ஒரு புத்தகத்தை வாங்கிவிட்டு, மாதக் கணக்கில் ஏறெடுத்தும் பார்க்காமல் அலமாரியில் வைத்துவிடுகிறார்கள்? அதற்கு நண்பர் என்னைப் பார்த்து, புத்தகம் என்ன சாப்பிடற பொருளா, நீ என்ன கழுதையா? என்றார்.

ஒரு பொருளாதாரம் படித்த நண்பரிடம் இதைக் கேட்டேன். அவர், புத்தகம், விநோதமான பண்டம். அழியக் கூடியதும்; நிலையாக இருக்கக் கூடியதும் அது தான் என்றார். எனக்கு குழப்பம்!

*புத்தகத்தைப் படிக்கலாம், வருடிப் பார்க்கலாம், அல்லது கைவிடலாம் என்பதுதான் வழிகாட்டி நெறிகள். நூல் விமர்சகர்கள் இப்படித்தான் செய்கிறார்கள்.*

புத்தக வெளியீட்டாளரைப் பொறுத்தவரையில் அது காய்கறி, பழம் போலத்தான் விற்றுவிட்டால் திரும்ப வாங்கிக் கொள்ள முடியாது. ஆனால், அதை வாங்குபவரிடம் அது நிலையாக இருக்கக் கூடியது. படித்தாலும் படிக்காவிட்டாலும், அலமாரியை அலங்கரித்துக் கொண்டிருக்கும். வெளியீட்டாளர்களும் புத்தக விற்பனையாளர்களும் அதை நீண்ட நாள் வைத்திருக்க முடியாது என்று கருதுவார்கள். அதனால், வாசகர்களின் தலையில் கட்டிவிடுகிறார்கள்.

அதற்குப் பின், என் தோழியிடம் கேட்டேன். அவர் பேரம் பேசி வாங்குவதில் கில்லாடி. நான் புத்தகம் வாங்குவதைக் கிண்டலாகப் பார்த்து, இதையெல்லாம் எப்போது தள்ளுபடியில் வருகிறதோ அப்போது வாங்குவேன் என்றார். இப்போதெல்லாம் புத்தக விலையில் தள்ளுபடி அடிக்கடி வரும். புத்தகம் வெளியிட்ட சில வாரத்திலேயே தள்ளுபடிக்கு விற்க ஆரம்பித்து விடுவார்கள். ஆன்லைனில் வாங்கினால், சந்தைக்கு வந்த உடனேயே தள்ளுபடி கிடைக்கும்.

அவள் சொன்னது சரி. என் புத்தகங்களை வெளியான ஒரு வாரத்திலேயே பாதி விலைக்கு விற்க ஆரம்பித்து விட்டார்கள். நீங்கள் சந்தையில் எங்கே இருக்கிறீர்கள் என்பதற்கு அதுவே அடையாளம்.

இப்போது, ஏன் இவ்வளவு பணம் கொடுத்து புத்தகம் வாங்கியதும் அலமாரியில் அடைத்து விடுகிறார்கள் என்று நான் ஆரம்பத்தில் கேட்ட கேள்விக்கான விடை இதில் கிடைத்துவிடுகிறது. புத்தகத்தின் விலையில் சலுகை கிடைத்தால், ஏதோ புரட்டி கொஞ்சம் படிப்பீர்கள், அல்லது படிக்காமலேயே அலமாரியில் வைத்துவிடுவீர்கள். ■

# சுவராஸ்யமான செய்திகள்



## உறுப்புக்கொடை

நெதர்லாந்தில் 2020ல் அறிமுகமாகவுள்ள ஒரு சட்டத்தின்படி, அங்கு எல்லாரும் உறுப்புக் கொடையாளர் களாகிவிடுவார்கள். யாராவது உறுப்புக்கொடையை விரும்பாவிட்டால், அதற்காகத் தனியே பதிவு செய்துகொள்ள வேண்டும். உறுப்புக்கொடையாளர் பற்றாக்குறையை நிரப்புவதற்காக இந்தச் சட்டம் வரவுள்ளது. 18 வயதுக்கு மேற்பட்டவர்களை உறுப்புக்கொடையாளர்களாகக் கோரி 2 அஞ்சல்கள் அனுப்பப்படும். அதற்குப் பதிலளிக்கா தவர்கள் தானே உறுப்புக்கொடையாளர்களாகி விடுவார்கள். இந்நிலையை எப்போது வேண்டுமானாலும் மாற்றலாம். எந்த உறுப்பைக் கொடையளிப்பது என்பதையும் தேர்ந்தெடுக்கலாம்.



## காரை விழுங்கிய சாலை

சீனாவிலுள்ள ஹார்பின் நகரத்தில் ஒரு ரோல்ஸ் ராய்ஸ் கார் போக்குவரத்து நிறுத்தத்தில் நின்றிருந்தது. திடீரென்று, சாலை உள்வாங்கத்தொடங்கியது, கார் அதில் மெதுவாக மூழ்கத் தொடங்கியது. நல்லவேளையாக, அந்தக் காரின் ஓட்டுநர் சட்டென்று சன்னல்வழியாகக் குதித்துத் தப்பிவிட்டார். பின்னர் அவருடைய சேதமடைந்த காரைச் சிரமப்பட்டு வெளியில் எடுத்தார்கள்.



## வரிக்குதிரைகளான கழுதைகள்

“பசுத்தோல் போர்த்திய புலி” என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். வரிக்குதிரைகளாக மாறிய கழுதைகளைப்பற்றிக் கேள்விப்பட்டதுண்டா? ஸ்பெயினிலுள்ள கடற்கரை நகரமொன்றில் திருமண வரவேற்பு ஒன்றுக்காகப் இரண்டு கழுதைகளுக்குக் கருப்பு, வெள்ளைப் பட்டைகளை அடித்து வரிக்குதிரைகளாக ஆக்கினார்கள். இப்புகைப்படங்கள் இணையத்தில் பரபரப்பாகப் பரவின. “சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்காக மிருகங்களைக் கொடுமைப்படுத்துகிறார்கள்” என்று விமர்சனங்கள் எழுந்தன. முன்பு, எகிப்திலுள்ள மிருகக்காட்சிச்சாலையொன்றும் இதே போல் செய்து எதிர்ப்பைச் சந்தித்தது.



## தில்லிப் பள்ளிகளில் மகிழ்ச்சி நேரம்

தில்லியிலுள்ள அரசாங்கப் பள்ளிகளில் 1ம் வகுப்புமுதல் 8ம் வகுப்புவரை படிக்கும் மாணவர்களுக்கு நாள்தோறும் 50 நிமிடம் ‘மகிழ்ச்சி நேரம்’ வழங்கப்படுகிறது. குழந்தைகளிடம் நேர்ச்சிந்தனை, படைப்பாற்றலை ஊக்குவிக்க இது உதவுவதாகச் சொல்கிறது பள்ளிகள் இயக்ககம். ‘மகிழ்ச்சி நேர’த்தில் மாணவர்கள் நுண்கலைகளில் ஈடுபடலாம், படம் வரையலாம், மகிழ்ச்சியான எந்தப் படைப்புச்செயலிலும் ஈடுபடலாம்.



## உடற்பயிற்சி செய்தால் பயணச்சீட்டுகள் கிடைக்கும்

அதிகரித்து வரும் உடல்பருமன் பிரச்னையால் கவலை கொண்ட மெக்ஸிகோ, ரஷ்யா போன்ற நாடுகள் எடைக்குறைப்பை ஊக்குவிக்கும் முயற்சிகளில் இறங்கியுள்ளன. இந்நாடுகளில் நீங்கள் “ஸ்க்வாட்” என்னும் உடற்பயிற்சியைச் செய்தால், இலவச ரயில் டிக்கெட்களைப் பெறலாம். மாஸ்கோவிலுள்ள மெட்ரோ நிலையங்களில் “நல நிறுத்தங்கள்” அமைக்கப்பட்டுள்ளன. இங்குள்ள மின்சார மானிகள் ஸ்க்வாட்களை எண்ணுகின்றன. மெக்ஸிகோவில் 10 ஸ்க்வாட்டுக்கு ஒரு ரயில் டிக்கெட்டும், மாஸ்கோவில் 30 ஸ்க்வாட்டுக்கு ஒரு ரயில் டிக்கெட்டும் பெறலாம். சில இடங்களில் உடல்பருமன் சிகிச்சை மையங்களும் உள்ளன.

ஒருங்கிணைப்பு: ஜெய்ஸ்ரீ; வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

Regn. No. – TN/CCN/677/2019–2021
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2019–2021
Registered with Registrar of News Papers for India TNTAM/2018/76372

Total number of pages in this monthly issue, including cover, 84. Price: `35
Rotary News Tamil published on 1st of every month

